# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 30
பக்கங்கள்: 32

சுடர் 33 | கதிர் 234 | ஆடி 02ஆம் நாள் | புதன்கிழமை | 18 ஜூலை 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


# அமைச்சர் சபைக் கூட்டம் கூட்ட ஆளுநர் குரே தடா!

## சிக்கலுக்குள்ளாகின்றது வடக்கு மாகாண நிர்வாகம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்கு மாகாண அமைச்சர் சபையின் கூட்டத்தை தனது அறிவித்தல் வழங்கப்படும் வரை கூட்டக் கூடாது என்று அமைச்சர் சபையின் செயலரும், வடக்கு மாகாண தலைமைச் செயலருமான அ.பத்திநாதனுக்கு, வடக்கு மாகாண ஆளுநர் குரே உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று தெரியவருகின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பாக வடக்கு மாகாண நிறைவேற்று நிர்வாகத்தில் எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பில், வடக்கு மாகாண சபையில் நேற்றுமுன்தினம் விவாதம் நடத்தப்பட்டிருந்தது. வடக்கில் நிர்வாக நடவடிக்கைகள் முடங்கும் சூழ்நிலைக்கான ஏதுக்கள் காணப்படுகின்றன என்று மாகாண சபை அமர்வில் கூறப்பட்டிருந்த நிலையில், வடக்கு மாகாண ஆளுநரால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. >> 06

## மூவருக்கு தூக்கு தண்டனை

கொழும்பு, ஜூலை 18

கொலைக்குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட மூவருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்றுத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. 1996ஆம் ஆண்டு பன்னிப்பிட்டிய பிரதேசத்தில்நடந்தகொலைச் சம்பவம் தொடர்பிலேயே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. >> 29

## முகத்தை மூடி வந்தவர்கள் கைதடியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

கைதடி தெற்கில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த இனந்தெரியாதவர்கள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹைஏஸ் வாகனத்தை அடித்து நொருக்கிச் சேதப்படுத்தினர். வாகனத்தைத் தீயிட >> 27

## சபை முடிவைச் செயற்படுத்த வடக்கு முதலமைச்சர் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்கு மாகாணத்துக்கு ஒரு முழுமையான அமைச்சர் சபையை உருவாக்க ஆளுநருக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்ட தீர்மா >> 28

வடக்கு அமைச்சர் சபையை

## பரிந்துரைக்கும் அதிகாரம் இல்லை என விக்கி கடிதம்

*இருக்கின்றது என்று சி.வி.கே. விளக்கம்*

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்கு மாகாண அமைச்சர் சபையைப் பரிந்துரைப்பதற்குத் தனக்கு அதிகாரமில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவைத் தலைவருக்கு கடிதம் அனுப்பியுள் >> 06

## மணிவண்ணனை பதவிநீக்க கோரும் வழக்கு ஒத்திவைப்பு

வரையறை ஆட்சேபனை முன்வைக்க மன்று அவகாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாநகர சபை நியமன உறுப்பினர் வி. மணிவண்ணனை பதவி நீக்கக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், மணிவண்ணன் தரப்புச் சட்டத்த >> 06

## சாவகச்சேரி நகரத்தில் 6 கோடி ரூபா ஜக்பொட்

சாவகச்சேரி, ஜூலை 18

யாழ்ப்பாணம், சாவகச்சேரியிலுள்ள தேசிய லொத்தர் சபையின் அதிர்ஷ்ட லாபச் சீட்டு விற்பனையாளரால் விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கு 6 கோடியே >> 29

## ஆளுநர் பக்கம் பந்தை விட்டெறிந்தார் விக்கி!

இக்கட்டான நிலைமை ஏற்பட அவரே காரணமெனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்கு மாகாணத்தில் தற்போது எழுந்துள்ள இக்கட்டான நிலைமைக்கு வடக்கு மாகாண ஆளுநரே காரணம் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றஞ்சுமத்தியுள்ளார். முதலமைச்சர் அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட கேள்வி பதில் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது: >> 06

## மனித உரிமை நிலையில் இலங்கை முன்னேற்றம்!

பிரிட்டன் அறிக்கை கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 18

மனித உரிமைகள் நிலைமைகளில் வரையறுக்கப்பட்ட முன்னேற்றங்களை இலங்கை அடைந்துள்ளது என்று தெரிவித்துள்ள பிரிட்டன் மனித >> 06

## சாவகச்சேரியைப் பிரிக்க அரசிதழ் அறிவிப்பு தயார்

யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவை இரண்டாகப் பிரிப்பதற்கான அரசிதழ் அறிவித்தல் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா. வேதநாயகன்.

அவர் தெரிவித்ததாவது:

50 கிராம அலுவலர் >> 06

## இழப்பீட்டுப் பணியகம் உருவாக்க சட்ட வரைபு

*நாடாளுமன்றில் சமர்ப்பித்தார் ஆளுங்கட்சி கொறடா கயந்த*

கொழும்பு, ஜூலை 18

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான இழப்பீட்டுப் பணியகத்தை உருவாக்கும் சட்ட வரைவு ஆளுங் >> 06

## உணர்ச்சிபூர்வ சிந்தனையால் நாட்டை முன்னேற்ற முடியாது

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

உணர்ச்சிபூர்வமான சிந்தனைகளினூடாக இலங்கையை முன்னேற்ற முடியாது. எட்கா ஒப்பந்தம், சிங்கபூருடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஆகியன தொடர்பில் நேர் கோணத்தில் சிந்திக்கவேண்டும். இவ்வாறு முதன்மை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான >> 28

## தெற்குக் குழுக்களைப் போன்று பயங்கரமான குழுவல்ல ஆவா

நாடாளுமன்றில் நளின் விளக்கம்

கொழும்பு, ஜூலை 18

ஆவாக் குழுவானது தெற்கில் செயற்படும் பாதாளக் குழுக்களைப்போன்று பயங்கரமான அமைப்புக் கிடையாது என்று சட்டம், ஒழுங்கு பிரதியமைச்சரான நளின் பண்டார தெரிவித்தார். >> 29

## மாவட்டச் செயலர்களிடம் பொலிஸார் விசாரணை

விஜயகலா ஆற்றிய உரை தொடர்பாக

யாழ்ப்பாணம், ஜூலை 18

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் >> 27

## அரசியல் கைதிகள் விடுதலைக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்

இரா.சம்பந்தனிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கி, கால வரையறைக்குள் அரசியல் கைதிகள் அனைவரையும் நிபந்தனை இன்றி விடுவிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்று அரசியல் >> 06

## உடன்படிக்கைக்கு எதிராக மகிந்த அணி போர்க்கொடி

கொழும்பு, ஜூலை 18

இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலுள்ள நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சரத்துகளை நீக்குவதற்கு அரசு >> 29




# மன்னாரில் 35 நாளாகவும் தொடரும் அகழ்வுப் பணி

40 க்கும் மேற்பட்ட மண்டையோடுகள் கண்டுபிடிப்பு



**மன்னார்,ஜூலை 18**
**மன்னார் சதொச விற்பனை நிலைய கட்டுமானப் பணியின்போது கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதப் புதைகுழி அகழ்வில் விரிவுப்படுத்தப்பட்ட புதிய இடத்திலும் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

இந்தஅகழ்வுப்பணியானது நேற்றுடன் 35ஆவது நாளாக இடம்பெற்றது.

ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டிருந்த மனித எலும்புக் கூடுகள் மண்டையோடுகளை வெளியேற்றும் நோக்குடன் துப்பரவுசெய்யும்பணிநேற்று முன்னெடுக்கப்பட்டது.

அகழ்வுப்பணி இடம்பெறும் இடத்துக்கு அருகாமையிலுள்ள நடைபாதையில் 5 அடி விரிவுபடுத்தி அகழ்வு இடம்பெற்றது.

இதுவரை 40க்கு மேற்பட்ட எலும்புக்கூடுகளும் மண்டையோடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. 27 எலும்புக்கூடுகளும் மண்டையோடுகளும்வெளியேற்றப்பட்டுள்ளன.

வெளியேற்றப்பட்டஎலும்புக் கூடுகள்பெட்டிகளில்அடைக்கப்பட்டு பாதுகாப்பாக மன்னார் நீதிமன்றிலுள்ள ஒரு அறையில் வைக்கப்பட்டுள்ளது. கடந்தமார்ச்மாதம்மன்னார் சதொச விற்பனை நிலைய அமைப்புப் பணியின்போது மேற்கொள்ளப்பட்டமணல்அகழ்வின்போது, கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்களைத் தொடர்ந்து இது சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு இந்த பகுதியில் அகழ்வுப் பணி இடம்பெற்று வருகின்றது. (ரி4,60)

## துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் படுகாயம்

வவுனியா,ஜூலை18
வவுனியா செட்டிகுளம் மருதனாமடுவில் கட்டுத் துப்பாக்கி வெடித்த்தில் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. படுகாயமடைந்த நபர் வவுனியாமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

காட்டு விலங்குகளுக்காக வைக்கபட்டிருந்த கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் மாடுமேய்பதற்காகச் சென்ற நபரே படுகாயமடைந்தார் என்று கூறப்பட்டது.

மருதனாமடுவவைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்தார்.

சம்பவம்தொடர்பில் மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,110)

## விபத்தில் இளைஞன் காயம்

சாவகச்சேரி, ஜூலை 18
தனியார் பேருந்தும் உந்துருளியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் உந்துருளியில் பயணித்த இளைஞன் காயமடைந்தார்.

விபத்து சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு முன்பாக கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து நுவரெலியாவுக்குச் சென்ற தனியார் பேருந்து சாவகச்சேரி பேருந்து நிலை யத்திலிருந்து முதன்மைச் சாலைக்குச் சென்ற உந்துருளியுடன் மோதியதிலேயே விபத்து ஏற்பட்டது எனக் கூறப்பட்டது.

காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

விபத்துக்குள்ளான போருந்தும் உந்துருளியும் சாவகச்சேரி பொலிஸ்நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,9)

## கணவனின் கத்திக் குத்தில் படுகாயமடைந்த மனைவி

வவுனியாவில் நேற்றுச் சம்பவம்

வவுனியா.ஜூலை 18
கணவன் மனைவி மீது கத்தியால் தாக்குதல் மேற்கொண்டதில் மனைவி படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் வவுனியா ஆச்சிபுரத்தில் நேற்று நடந்துள்ளது.

குடும்பத் தகராறு காரணமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என்று பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த சில காலங்களாக மனைவியைப் பிரிந்து வாழ்ந்த கணவன் நேற்று வீட்டின் பின்னால் மறைந்திருந்து மனைவி மீது கத்தியால் தாக்குதலை மேற்கொண்டார் எனக் கூறப்பட்டது. காயமடைந்த பெண் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக விசாரணைகளைப் வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டனர். சந்தேகநபரைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி4,110)



## பயணிகளினது வசதி கருதி பேருந்து நிலையம் மாற்றம்

வவுனியா,ஜூலை 18
வவுனியா பழைய பேருந்து நிலையத்தின் ஒரு பகுதி பொதுமக்கள் வசதி கருதி திருத்தம் செய்யபடவுள்ளது.

பழைய பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்கி நின்று செல்லும் தரிப்பிடம் ஏற்கனவே அமைக்கபட்டுள்ளது.

அந்தத் தரிப்பிடத்துக்கு அருகில் உள்ள வீதி திருத்தும் பணி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகரசபை தலைவரின் மேற்பார்வையின் கீழ் இந்த வீதி திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

மாகாணங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் தரித்து நின்று பயணிகளை ஏற்றி. இறக்கிச் செல்லும் வகையிலே இந்த வீதிதிருத்தும் பணிமேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி குறித்த வீதியின் அருகில் காணப்படும் பாதுகாப்புச் சட்டங்கள், நடைபாதை என்பன அகற்றபட்டு வீதி அகலமாக்கப்படவுள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் உபநகரபிதா வே. குமாரசாமி, நகரசபைச் செயலாளர் ஆர். தயாபரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி4,110)

## போராட்டக்காரர்களை சந்தித்தனர் மதகுருமார்



முல்லைத்தீவு,ஜூலை 18
முல்லைத்தீவில் தொடர்போராட்டம் நடத்திவருபவர்களை தென்னிலங்கையைச் சேர்ந்த மதகுருமார்கள் சென்று பார்வையிட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்நடைபெறும் இந்தப் போராட்டத்தைத் தென்னிலங்கையைச் சேர்ந்த கிறிஸ்தவ மதகுருமார்கள் மற்றும் அருட்சகோதரிகள் அடங்கிய குழுவினரே நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கேப்பாபுலவில் நிலமீட்புப் போராட்டதை முன்னெடுக்கும் மக்களின் போராட்ட இடத்துக்குச் சென்று அவர்களின் போராட்டம் தொடர்பிலும் அவர்களின் நியாயமான கோரிக்கை தொடர்பிலும் கேட்டறிந்தனர். அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னாள் காணாமல் போனவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் கவனவீர்ப்புப் போராட்ட இடத்துக்குச் சென்று அவர்களின் போராட்டம் தொடர்பிலும் கேட்டறிந்தனர்.

இலங்கை அரசின் காணாமற்போனோர் அலுவலகம் தேவை இல்லை ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் பன்னாட்டு விசாரணைதான் தேவை என்பதையும் வலியுறுத்தி வருகின்றோம் என்று தென்னிலங்கையைச் சேர்ந்த மதகுருமாருக்கும் அருட்சகோதரிகளுக்கும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ரி4,ரி3)

## பெண்ணின் சடலம் மீட்பு

திருகோணமலை,ஜூலை 18
கந்தளாய் பிரதான வீதியின் கப்பல்துறை பகுதியிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட பெண் 50 வயது மதிக்கத்தக்கவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக் காரணமாகவே அந்தப் பெண் உயிரிழந்திருக்கலாம் என்று பெலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். மேலதிக விசாரணைகளைக் கந்தளாய்ப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## அமிலுக்கு மூன்று மாத சிறை

கொழும்பு.ஜூலை 18
எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் தலைவர் எம்.கே. அமிலுக்கு மூன்று மாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2013 ஆம் ஆண்டு பொலிஸ் அதிகாரி ஒருவரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் தலைவர் கைதுசெய்யப்பட்டார்.

எம்பிலிபிட்டிய நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர் நேற்று முற்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஓராண்டு சிறைத் தண்டனையை மூன்று மாதங்களில் அனுபவிக்கும் வகையில் தீர்ப்பு வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு 30,000 ரூபா நட்ட ஈடு வழங்குமாறும், நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ரி4)

## அமெரிக்க டொலருடன் சந்தேகநபர்கள் கைது



கொழும்பு,ஜூலை 18
சட்டவிரோதமான முறையில் அமெரிக்க டொலரை இந்தியாவுக்குக் எடுத்துச் செல்ல முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 4 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட அமெரிக்க டொலரின் இலங்கைப் பெறுமதி இரண்டரைக் கோடியே 75 லட்சத்து 24 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் கெசினோ விளையாட வந்தவர்கள் வெற்றி பெற்ற பெருந்தொகை பணத்தை எடுத்துச் செல்ல முற்பட்டனர் என்றும் வானூர்தி நிலையத்தில் நடத்தப்பட்ட சேதனையின் போது சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

சீனா மற்றும் நேபாளம் நாட்டைச் சேர்ந்த 30, 33, 25 மற்றும்20 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

# அனுமதி பெறாத கடையால் வவு. நகர சபையில் சர்ச்சை

வவுனியா, ஜூலை 18

வவுனியா, ஹொரவப்பொத்தான வீதியில் நகர சபைக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கடைகள் இன்னமும் நகர சபைக்குக் கையளிக்கப்படவில்லை. எமது சபைக்குக் காணி உரிமை இல்லாமல் அது தொடர்பில் தீர்மானிப்பது நகர சபைக் கட்டளைச் சட்டத்தை மீறும் செயலாகும்.

இவ்வாறு வவுனியா நகர சபைச் செயலாளர் தெரிவித்தார். நேற்று நடைபெற்ற சபை அமர்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

பிரச்சினைக்குரிய கடை உட்பட 1 தொடக்கம் 35 வரையான இலக்கக் கடைகளும், அவற்றை அண்டியுள்ள சில கடைகளும் இதுவரை நகர சபைக்குக் கையளிக்கப்படவில்லை. அவை அரச காணியாக இருப்பதுடன் பிரதேச செயலரின் கீழ் உள்ளன. முன்னாள் நகர சபைத் தவிசாளர் ஜி.ரி.லிங்கநாதன் அவற்றைக் கையளிக்குமாறு பிரதேச செயலரிடம் கோரியிருந்தார் என்ற தகவல் ஒன்றுள்ளது.

2009ஆம் ஆண்டு மீள்மதிப்பீட்டின்போது இந்தக் கடை கிழமைச் சந்தைக் கடைகளுடன் சேர்ந்த ஒரு மரக்கறிக் கடையாகவே இருந்துள்ளது. நாளடைவில் நிரந்தரக் கடையாக மாற்றப்பட்டுப் பின்னர் பாதணி விற்கும் கடையாக மாற்றம் பெற்றுள்ளது. கடைக்கான உரிமைக் கட்டணங்கள், சோலைவரி என்பன நகர சபையால் இதுவரை அறவிடப்படவில்லை.

காணி உரிமை இல்லாமல் கட்டடத்தை அங்கீகரிக்கவோ, அல்லது கடையில் வியாபரம் செய்வதற்கோ சபை தீர்மானிப்பது நகர சபைக் கட்டளைச் சட்டங்களை மீறும் செயலாகும்.

இந்தக் கட்டடத்துக்கு நகர சபை அனுமதி வழங்கவில்லை. எந்த ஆவணமும் இன்றிக் கட்டப்பட்ட இந்த 3 மாடிக் கட்டடத்தை அனுமதியற்ற கட்டடமாகக் கருதி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். முன்னர் எடுத்த முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். நகர சபையின் தேவை கருதிக் காணிகளைக் கையளிக்குமாறு பிரதேச செயலரிடம் கோரலாம் என்றார்.

அதையடுத்துக் காணியைக் கையளிக்குமாறு பிரதேச செயலரிடம் கோருவது என்றும், பிரதேச செயலரின் பதிலின்படி நகர சபை முன்னர் எடுத்த தீர்மானம் தொடர்பில் ஆலோசிப்பது என்றும் அமர்வில் தீர்மானிக்கப்பட்டது.

**கடையால் சர்ச்சை**

வவுனியாவில் அனுமதி இன்றிக் கட்டப்பட்ட கட்டடம் தொடர்பில் கடந்த வவுனியா நகர சபை அமர்வில் வாதப் பிரதி வாதங்கள் நடைபெற்றன. ஹொரவப்பொத்தான வீதியில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையம் தொடர்பாகவே வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன.

இந்த இரு மாடிக் கட்டடத்தை அமைக்க நகர சபையிடம் அனுமதி பெறவில்லை என்று அமர்வில் உறுப்பினர் ராஜலிங்கம் சுட்டிக்காட்டினார். இது தொடர்பாக நகர சபைத் தலைவர், செயலாளர் விளக்கமளிக்க வேண்டும் என்று கோரினார். அதையடுத்து இது தொடர்பில் பலத்த வாதப் பிரதிவாதங்கள் நடந்தன.

ஒரு சாரார் அந்தக் கடை நகர சபை பொறுப்பெடுத்து நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் தற்போது நடத்துபவரிடமே கொடுக்க வேண்டும் என்றனர். ஒரு சாரார் கடையை நகர சபை பொறுப்பெடுத்து திறந்த கேள்விகோரல் மூலம் வழங்கப்பட வேண்டும் என்றனர்.

குழப்ப நிலைமை ஏற்பட்டதை அடுத்து பகிரங்க வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

12 பேர் கடையை நடத்துபவருக்கே வழங்க வேண்டும் என வாக்களித்தால் கடையை நடத்துபவருக்கே மீள வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு கடையை நடத்தினால் அனுமதியற்று அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கடைகளுக்கும் இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டியிருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வாதிட்டனர்.

பல லட்சம் ரூபா செலவு செய்து கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதால் மனிதாபிமான ரீதியில் வர்த்த நிலையைத்தை நடத்துபவருக்கே குத்தகையின் அடிப்படையில் வழங்க வேண்டும் என்று மற்றைய தரப்பினர் தெரிவித்தனர்.

**கழிவகற்றல்**

கழிவுகளை அகற்றுவதற்கு நகர சபை ஊழியர்கள் பணம் அறவிடுகின்றனர் என்றும், கடமை நேரங்களில் அவர்கள் உழவியந்திரங்களை நிறுத்திவிட்டுத் தமது சொந்த வேலைகளைச் செய்கின்றனர் என்றும் நேற்றைய அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது.

கோயில்குளம், கோவில் புதுக்குளம் ஆகிய இடங்களுக்கு கழிவகற்றலுக்கு உழவியந்திரங்களை அனுப்ப வேண்டும் என்று 4 மாதங்களுக்கு முன்னர் கோரியிருந்தேன். இதுவரை வரவில்லை. அவ்வாறு இருந்தால் எப்படிப் பணிகளைச் செயற்படுத்த முடியும் என்று நகர சபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் மோகன் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த நகர சபைத் தலைவர் ஆளணி பற்றாக்குறை இருக்கின்றது. நிர்வாகச் சிக்கல்களும் உள்ளன. அதனாலேயே சில பணிகள் தாமதமாகின்றன என்றார்.

தொடர்ந்து நடைபெற்ற அமர்வில் வீதிகளில் பொருத்த 400 மின்குமிழ்கள் கொள்வனவு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. நகர சபைக்குட்பட்ட 10 வட்டாரங்களிலும் தலா ஒரு வீதியைச் சீரமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(ரி4-110)


யாழ்ப்பாணம்


சாவகச்சேரி


வவுனியா

# சிறப்புறக் கொண்டாடப்பட்ட தமிழர் பண்பாட்டுத்திருநாள்

**யாழ்ப்பாணம், ஜூலை 18**

**தமிழர் பண்பாட்டுத் திருநாளான ஆடிப் பிறப்பு நேற்று தமிழர் வாழும் இடங் களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.**

**யாழ்ப்பாணம்**

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்கள நிதி அனுரணையில் வடமராட்சி வடக்குப் பருத்தித்துறை பிரதேச செயலகம் நடத்திய வடக்கு மாகாண ஆடிப்பிறப்பு விழா தொண்டமானாறு செல்வச்சந்நிதி செல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறீ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாணப் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் வே.சிவயோகன், மாகாணப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார், வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஆடிக் கூழ் கொழுக்கட்டை பரிமாறப்பட்டு போர்த் தேங்காய் உடைத்தல் போன்ற பாரம்பரிய நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

சாவகச்சேரியில் கண்டுவில் ஒழுங்கை பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. கவிஞர் சோமசுந்தரப் புலவர் போன்று வேடமணிந்த சிறார் முன்னிலையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சாரணர் குழுவின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் நடைபெற்றன.

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆடிக்கூழ் நிகழ்வு வலய அலுவலகத்திலும் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஆடிப்பிறப்பு ஆடிக்கூழ் நிகழ்வு மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் கோவிலிலும் பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலைகளிலும் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் கோட்டைக்குள்ளும் ஆடிப் பிறப்பு நிகழ்வுகள் நடந்துள்ளன. அங்கு அகழ்வு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் கோட்டை வைரவருக்குப் பொங்கல் பொங்கி வழிபட்டனர்.

அமெரிக்கப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம், தொல்லியல் திணைக்களம், மத்திய கலாசார நிலையத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றனர்.

அவர்கள் வைரவர் ஆலயத்தில் பொங்கி கொழுக்கட்டை, மோதகம், கூழ் படைத்து வழிபட்டனர். ஆராய்ச்சிக்காக வந்துள்ள அமெரிக்கர்கள், வெளிமாவட்டவர்களும் வழிபாட்டில் கலந்துகொண்டனர்.

**வவுனியா**

வவுனியா நகரசபை, முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம், தமிழ் விருட்சம் அமைப்பு என்பவற்றின் ஏற்பாட்டில் வவுனியாவில் ஆடிப் புறப்பு தின நிழக்வுகள் நடைபெற்றன.

பசார் வீதியில் உள்ள நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிலைக்கு முன்பாக தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

சோமசுந்தரப் புலவர் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. தமிழ்மணி அகளங்கன், தமிழருவி சிவகுமாரன், நகர சபை உறுப்பினர் நா.சேனாதிராசா ஆகியோர் உரையாற்றினர். விபுலானந்த கல்லூரி மாணவர்கள் சோமசுந்தரப் புலவர் இயற்றிய ஆடிப் பிறப்புக்கு நாளை விடுமுறை என்ற பாடசாலை இசைத்தனர். நிகழ்வில் அனைவருக்கும் ஆடிக் கூழ், கொழுக்கட்டை என்பன வழங்கப்பட்டன. மாவட்ட செயலர் கனிபா, மேலதிக மாலட்ட செயலர் தி.திரேஸ்குமார், நகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், மாணவர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். ஒலுமடு வெடிக்கினாறி மலை உச்சியில் அமைந்துள்ள ஆதிசிவன் ஆலயத்தில் வவுனியா வடக்கு இந்து கலாச்சார உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் இடம்பெற்றன

**மன்னார்**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட செயலகத்தால் ஆடிப்


வவுனியா


யாழ்ப்பாணம்


மன்னார்


தென்மராட்சி

பிறப்புக் கொண்டாடப்பட்டது.

மாவட்ட செயலர் சீ.ஏ.மோகன் ராஜ், மாவட்ட செயலக அதிகாரிகள், ஊழியர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாவட்ட செயலர் சீ.ஏ. மோகன்ராஜ் உரையாற்றினார். கூழ் எவ்வாறு ஒன்றிணைந்து எமக்கு சக்திமிக்க உணவாகவும் ஆரோக்கிய வாழ்வையும் தருவது போன்று நாம் அனைவரும் ஒரே குடும்பத்தவர் என்ற எண்ணத்துடன் ஒன்றித்து வாழும்போது மகிழ்ச்சி உண்டாகும். இந்தக் கூழ் நமக்கு தரும் பாடம் நாம் அனைவரும் கூட்டாக வாழ வேண்டும். அப்பொழுதுதான் எமது வாழ்வில் ஒரு இதமான வாழ்வை உணர்வோம். நாம் எல்லோரும் ஒரே சமூகம் என்ற நிலையில் இவ்வாறாண நிகழ்வுகளில் கலந்து கொள்ளும்போது எமக்குள் குரோதம், பகை, பொறாமை என்ற தீய எண்ணங்கள் விலகும் என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

(ரி4,9,60,110)

# சிறியோர் தொடக்கம் பெரியோர் வரை முழுமையாகச் சிந்தித்துக் கற்கவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்புரணம்,ஜூலை 18
கல்வியைச் சிறுவர் தொடக்கம் பெரியோர் வரை முழுமையாகச் சிந்தித்துக் கற்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் வலி. மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம், பல்லசுட்டி காந்திஜீ கலையரங்கத் திறப்பு நிகழ்வு சனசமூக நிலயத் தலைவர் இ.றமேஷ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியத் தேசத்துக்குப் பெருந்தலைவராக இருந்து மக்களுக்கு உன்னதசேவைகளை முன்னெடுத்தவேளை அந்த நாட்டைச் சேர்ந்தவரால் சுட்டுக்கொல்லப்பட்டவர் மகாத்மா காந்தி ஆவார். காந்தி பலசோதனைகளைத் தாண்டி இந்திய மக்களின் உள்ளத்தில் உறைந்துள்ளார். அவரது பெயரையே வலி.மேற்குப் பல்லசுட்டி கிராமத்தின் காந்திஜீ கலையரங்கத்துக்குப் பெயர்சூட்டியுள்ளீர்கள்.

இக்கலையரங்கு பெறுமதிமிக்கதாக உன்னதமான கலையரங்காக மாற வேண்டும். அத்துடன் வலி. மேற்கில் உள்ள சகல கிராமங்களும்வளர்ச்சிஅடைந்து இருக்க வேண்டும் என்பது எனது விருப்பம்.

அந்த வகையில் பல்லசுட்டி கிராமமும் ஏனைய கிராமங்களுக்கு நிகராக வளர்ச்சி அடைந்து இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் 15இலட்சம்ரூபாவை ஒதுக்கி வழங்கி இருந்தேன். இன்று நவீன தரம் கொண்ட கலையரங்கு அமைக்கப் பட்டுள்ளது.

இந்தக் கலையரங்கின் ஊடாக அடுத்தடுத்த ஆண்டுகளில் உயர்தரப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றுப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானவர்களையும், கலை, கலாசார மற்றும் சிறப்பு நிகழ்வுகளில் முன்னோக்கிய வீரர்களையும், கலைஞர்களையும் மதிப்பளிக்கப்படுவதனையே நாம் பார்க்க வேண்டும். அதனையே நான் விரும்புகின்றேன்.

இந்த நூற்றாண்டில் நீங்கள் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. கல்வியை சிறுவர் முதல் அனைவரும் முழுமையாகக் கற்றுத் தேறவேண்டும் - என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர் வரிசையில் வலி. மேற்குப் பிரதேச சபைத் தவி சாளர் த.நடனேந்திரன், உறுப்பினர்களான த.துரைலிங்கம், சிவகுரு பாலகிருஷ்ணன், சமூக ஆர்வலர் து.முருகானந்தன், வெண்கரநிறுவன செயற்பாட்டாளர் மு.கோமகன் ஆகியோர் உரையாற்றியதுடன் முன்னாள் வலி. மேற்குப்பிரதேசசபை உறுப்பினர் செ.செல்வக்குமார், கிராம அலுவலர் து.சுபேஷ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (50)

# போரிலிருந்து மீண்டெழுந்தாலும் வாள்வெட்டுக்கள் சிக்கலாகவுள்ளன

## கூறுகிறார் விவசாய பிரதி அமைச்சர்

போரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டம் மீண்டெழும்பி வரும் வேளையில் வாள்வெட்டுக்கள், போதைப்பொருள் கடத்தல்போன்ற சம்பவங்கள் சல சலப்பாகத்தான் இருக்கின்றன எனப் பிரதி விவசாய அமைச்சரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதா கலாசாரங்கள் அமைச்சு கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் சிறப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் கரவெட்டி மத்தொனி, அல்வாய் கிழக்கு வெள்ளுருவை ஆகியகிராமங்களில் தலா 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் இரு கட்டடங்கள் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாள்வெட்டு, போதைப்பொருள்களால் எமது சமூகம் உச்சத்தில் இருக்கிறது. அல்லது உச்சத்தில் இருப்பதாகக் காட்டப்படுகிறது. இதற்குப்பலகாரணங்கள்உண்டு. போர் முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாண மாவட்ட. மீள் எழுச்சிக்கு அரசின் ஆதரவு பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. திட்டமிட்டுத் தான் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இது பொலிஸாரின் உதவியுடன் அல்லது உதவியின்றி நடக்கலாம். ஆனால் பொலிஸாரே இதைக் கவனிக்கவேண்டும். இந்தச் சம்பவங்கள் குறித்து அரசதலைவருடன் நானும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் பேசி வருகிறோம்.

அல்வாய் கிழக்கு கிராமத்தில் விவசாயத்தை அழித்து வரும்வட்டுவத்தைவெள்ள வாய்க்காலை சீரமைத்துக் கட்டித்தருவதுடன் குமிழடி வெள்ளவாய்க்காலையும் சீர்செய்து தரவேண்டும் எனக்கரவெட்டி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ரஞ்சினி ரகுநாதன் விவசாயப்பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் இன்னமும் இருக்கும் இரண்டு வருட காலங்களில் விவசாயிகளுக்கு முடிந்த அனைத்தையும் செய்து தருவதுடன் விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குவதாக உறுதியளித்தார்.

நிகழ்வில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய அதிபர் ச.செல்வானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார். கரவெட்டிப் பிரதேசசெயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ரஞ்சினி ரகுநாதன் தலைமை கிராம உத்தியோகத்தர் எஸ்.ரவிக்குமார் அல்வாய் இந்துதமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் இராசலிங்கம் கரவெட்டி கமநல சேவைகள் திணைக்கள பெரும்போக உத்தியோகத்தர்இ.தனபாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (173)

# உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து 2018 இல் ஜி.சி.ஈ உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான` அனுமதி அட்டைகள் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியில் வழங்கப்படவுள்ளன என்று கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் அதற்கு முன்னய தினங்களில் தேசிய அடையாள அட்டையுடன் வருகை தந்து பெயர், பாடம் எண் என்பவற்றை பரிசீலித்துத் தமது அனுமதி அட்டைகளில் கையொப்பத்தை இட்டு உறுதி செய்யுமாறு கல்லூரி முதல்வர் மேலும் அறிவித்துள்ளார். (21)

# திண்மக்கழிவு அகற்றல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சாவகச்சேரி, ஜூலை 18
சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொது நூலகத்தினரால் முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் பெற்றோர்களுக்கான திண்மக்கழிவு அகற்றல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள் பொது நூலக மண்டபத்தில் நடத்தப்படவுள்ளன. இதன் முதற் கட்டமாக இன்று புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் பெற்றோர்களுக்கு கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (9)

# மயான ஆவணங்கள் இல்லாமையால் வேலைகளை மேற்கொள்வதில் தாமதம்

யாழ்ப்பாணம்,ஜூலை 18
வலி.தென் மேற்குப் பிரதேசத்திலுள்ள பல மயானங்களுக்கு உறுதிகள் மற்றும் வரை படங்கள் என்பன இல்லாமையால் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையையடுத்து முதலில் ஆவணங்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளைப் பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்புப்பட்டினம், பண்டத்தரிப்புக் கிராமம் என நான்கு உப அலுவலகங்கள் இயங்குகின்றன. இந்தப்பிரதேசத்தில் 14 மயானங்கள் உள்ளன. இவற்றில் பல மயானங்களுக்கு உறுதிகள், வரைபடங்கள் போன்ற ஆவணங்கள் இல்லாமையால் மயானங்களுக்கு எல்லைச் சுவர்களை அமைக்க முடியாத நிலை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கையைத்தொடர்ந்து மயானங்களை அபிவிருத்தி செய்வது பற்றி பிரதேச சபையின் கடந்த மாதாந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

சகல மயானங்களுக்கும் உறுதிகள், வரைபடங்கள் இல்லை என்று சுட்டிக்காட்டிய செயலர், இவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளைமேற்கொள்ள வேண்டு மென்றும் முதலில் மயானங்களின் எல்லைகளை அடையாளப்படுத்தி வரை படங்களைத் தயாரித்த பின்பு அதற்கான உறுதிகளைப் பெற்றுக் கொண்டு அரசிதழ் பிரசுரிக்க வேண்டு மென்றும் ஆலோசனை கூறினார்.

இதையடுத்து மயானங்களுக்கான ஆவணங்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கையில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது. (115)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

மருதங்கேணி,ஜூலை 18
யாழ்ப்பாணம், மருதங்கேணி அம்பன் கிழக்கு சிவனொளி முன்பள்ளி சிறார்களுக்கு டென்மார்க் அன்னையர் அறக்கட்டளை நிறுவனம் ஜனநாயகப் புலிகள் கட்சி ஊடாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளியில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டத் தலைவர் வேந்தன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினர் தியாகலிங்கம், சுரேஸ்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு 15 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தனர். (160)



## பெருந் திருவிழா

வரணி, ஜூலை 18
யாழ்ப்பாணம், வரணி குடமியன் ஆதிசிவன் கோவில் பெருந் திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## அனுமதி அட்டை வழங்கல்

சாவகச்சேரி, ஜூலை 18
சாவகச்சேரி, டிறிபேக் கல்லூரியில் ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நர்ளை மதியம் 1 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றவுள்ள மாணவர்கள் சீருடையுடனும் பெற்றோருடனும் வருகை தருமாறும், இரண்டாம் தடவைதோற்றவுள்ள மாணவர்கள் சீருடையுடன் வருகை தருமாறும் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் அறிவித்துள்ளார். (9)

## ஆடிவேல் உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 18

யாழ்ப்பாணம், நவாலி சிறி கதிர் காம முருகன் கோயில் ஆடிவேல் உற்சவம் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

தொடர்ந்து 16 தினங்கள் உற்ச வம் இடம்பெற்று எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு பூசை ஆரம்பமாகித் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் நடைபெறும் என ஆலயத் தொண் டர்கள் தெரிவித்துள்ளனர்.

## மாணவர்களுக்கான மருத்துவ முகாம்

தென்மராட்சி. ஜூலை 18

யாழ்ப்பாணம், போக்கட்டி அ.த.க பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை மற்றும் மருத்துவ பரிசோதனை என்பன நேற்று நடைபெற்றன.

மருத்துவப் பரிசோதனைகளை சாவகச்சேரிச் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளனும் ஏனைய பரிசோதனைகளை பிர தேசப்பொதுச்சுகாதாரப்பரிசோதகர் ஆ.குணசாந்தனும் மேற்கொண் டனர் எனப் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தெரிவித்தார். (9)

## ஆரம்ப நிகழ்வு தொடர்பான உயர்மட்டக் கூட்டம்

கைத்தொழில் வர்த்தக அமைச் சால் யாழ்ப்பாணம் மாவட்ட மக் களின் வாழ்வாதாரத்தை மேம்ப டுத்தும் வகையில் நடத்தப்பட வுள்ள திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு தொடர்பிலான உயர்மட்டக் கூட் டம் நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத் தில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தலைமையில் நடைபெற்றது.

சுய தொழில் முயற்சியாண்மை யாளர்களுக்கான உதவித் திட் டங்கள், கடனுதவி வழங்கல் மற்றும் தையல் பயிற்சியாளர்க ளுக்கான தையல் இயந்திரங்கள் வழங்கல் போன்ற திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட செயலர் வேதநாயகம், அமைச்சரின் பொதுசனத் தொடர்பு அதிகாரி மொஹிதீன், கைத்தொழில் அபிவிருத்திச்சபை மற்றும் நெடா அதி காரிகளும் பங்கேற்றிருந்தனர்.

அடுத்தவாரம் இடம்பெறவுள்ள இந்த எழுச்சிநிகழ்வில் முதன்மை விருந்தினராகத்தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர்களான மங்கள சமர வீர, ரிஷாட் பதியுதீன் மற்றும் முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வ ரன் உட்பட யாழ்ப்பாண மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் கள் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (8)

## உரிமை கோரவும்

யாழ்ப்பாணம்,ஜூலை 18

யாழ்ப்பாண நீதிமன்றில் கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட 1185946 இலக்க கீரோ வர்க்கத் துவிச்சக்கர வண்டி உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது.

குறித்த சான்றுப்பொருளுக்கு உரிமை கோருபவர்கள் எவ ரேனும் இருப்பின் 2 மாத காலப் பகுதிக்குள் ஆவணங்களுடன் அலுவலக நேரங்களில் வந்து உரிய ஆவணங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# நங்கூரமிடப்படும் படகுகளை உடனடியாக அகற்ற வேண்டும்

## கடற்றொழில் சமாசம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 18

காரைநகர் பிரதேச தோப்புக்காட்டு பகுதியில் நங்கூரமிடப்படும் குருநகர் மீனவகர்ளின் இழுவை படகுகள் உடனடியாக அப்புறப் படுத்தப்பட வேண்டும் என்று காரைநகர் கடல் தொழில் கூட்டுறவு சங்க சமாசப் பணிப்பாளர் கெ.இராஜசந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருநகர்ப் பகுதி மீனவர்களின் 150 இழுவைப் படகுகள் காரைநகர் தோப்புக் காட்டுப் பகுதியில் நங்கூரம் மிடப்படுகின்றன.

தோப்புக்காடு மீனவ சங்கத்தின் அனுமதியுடன் குறிப்பிட்ட பணத் தைச் செலுத்தி மீன்பிடிப்பதற்குச்செல் லும் நேரத் தைக் குறைப்பதற்காக அங்குநங்கூர மிடப்படுகின்றன. இத னால் எமது ஆள் கடல் மீன்பிடி பாதிக்கப்பட்டுள் ளது.

எமது பிரதேசத்தில் 10 சங்கங்கள் உள்ளது. அவற்றில் 6 சங்கத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் மீன்பிடியை வாழ்வா தரமாகக் கொண்டுள்ளனர். இவர்க ளால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப் படுகின்றது.

இறுதியாக நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தோப்புக் காட்டுப் பகுதியில் குருநகர் இழுவைப் படகுகள் நங்கூரமிடக் கூடாது என்ற தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

ஆனால் தற்போதும் அந்த நிலை மாறவில்லை.

காரைநகர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையில் காரைநகர் சமாசத்தில் நேற்று நடைபெற்ற கூட் டத்தில்,

குருநகர் இழுவைப் படகுகள் இங்கு தரித்து நிற்கக் கூடாது எனவும் இது சம்மந்தமாகப் பிரதேச செயலர் மற் றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுடன் சந்திப்பு நடத்தப்ப டும்.

அந்தச் சந்திப்பில் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் இல்லை என்றால். போராட்டத்துக்குத் தயார் ஆவோம் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (7)



யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் சிறி கந்த சுவாமி ஆலய மணிக்கோபுரக் குட முழுக்குக் அண்மை யில் இடம்பெற்றது.



யாழ்ப்பாணம், வேலணைப் பிரதேச செயலகமும் பன்னாட்டு மைய புங்குடுதீவு அமைப்பும் இணைந்து பொதுமக்களுக்குச் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு அண்மையில் துறையூர் ஜயனார் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

## பழங்களின் கழிவுகளால் வீதிகளில் சுகாதாரச் சீர்கேடு

யாழ்ப்பாணம்,ஜூலை 18

யாழ்ப்பாணக் குடாநாட்டில் றம்புட்டான் பழங்களின் விற்பனை அதிகரித்துள்ள நிலையில் அவற்றை சாப்பிட்டுவிட்டு அதன் வெளிக்கோதுகளை வீதிகளில் வீசிவிட்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்நகரிலும்நகரை அண்டிய புறநகர்ப்பகுதி களிலும் றம்புட்டான் பழங்கள் வீதிகளில் வைத்து விற்கப்படுகின்றன. இதனால் வீதியால் செல்வோர் அவற்றை வாங்கிச் சாப்பிட்டு அதே இடத்திலேயே வீசிவிட்டுச் செல்கின்றமையால் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுகின்றன.

றம்புட்டான் உட்பட சகல பழங்களின் கழிவுகளைப் பயணிக்கும் வீதிகள் மற்றும் பொது இடங்களில் போட்டுவிட்டுச் செல்வதை மக்கள் தவிர்க்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (17)

## குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 18

போதைப்பொருள் மற்றும் குற்றசெயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம் நகரிலும் நகரை அண்டிய புறநகர்ப்பகுதிகளிலும் பொலிஸா ரின் ரோந்து மற்றும் கண்காணிப்புப் பணிகள் அதிக ரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாண நகர், நல்லூர், கல்லியங்காடு, இருபால, கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் போன்ற பிரதேசங்களில் பொலிஸ் ரோந்துகள் அதிகரிக்கப்பட் டுள்ளன.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் வருகைதந்த பொலிஸ்மா அதிபர் குடாநாட்டுக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்து வதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்ததையடுத்து பொலிஸாரின் ரோந்து களும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (17)

## "கற்பகம்" மெருகூட்டும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 18

பனை அபிவிருத்திச் சபை யின் கற்பகம் விற்பனை நிலையங்களை மெரு கூட்டும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாகவுள்ள கற்பகம் விற்பனை நிலையம் மக் களைக் கவரும் வகை யில் மெருகூட்டி அழகு படுத்தும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டிருப்பதாக யாழ்ப்பாண மாவட்டப் பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர் கே.கோபால கிருஷ்ணன் தெரிவித் தார்.

கற்பகங்கள் ஊடாக மக் கள் அதிக பயனைப் பெற் றுக்கொள்ளும் வகை யில் அவை தற்போதைய காலத்தின் வசதிக்கேற்ற வகையில் நவீனப்படுத் தப்படும்.

கற்பகங்களை மெரு கூட்டி அபிவிருத்தி செய்து அவற்றின் ஊடாகக் கூடு தலான பனம் கைப்பணி உற்பத்தி பொருள்களும் காட்சிப்படுத்தப்படவுள் ளன. (17)

## ஒளிராத மின்குமிழ்களை ஒளிரச்செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 18

பிரதேசத்தில் ஒளிராமல் இருக்கும் மின்குமிழ்களை ஒளிரவைப்பதற்கான நட வடிக்கைகளைப் பிரதேச சபை மேற்கொண்டுள் ளது.

வலி.தென்மேற்குப் பிரதே சத்தில் பல வருடங்களாகப் பெரும்பாலான வீதிகள் மின் வெளிச்சமின்றி இரு ளில் மூழ்கி இருந்தன.

இதனையடுத்துப் பொது மக்களினதும் கூட்டமைப் பின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான கனகவேல், குமணன் மற் றும் ஈ.பி.டி.பி. கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஜோன்சன் ஆகியோரின் கோரிக்கை யைத் தொடர்ந்து நாடாளு மன்ற உறுப்பினர் ஈ. சரவ ணபவனால் 5 இலட்சமும் மாகாணசபை உறுப்பினர் கஜதீபனால் 10 இலட்சமும் வழங்கப்பட்ட நிதியுதவி யுடன் பிரதேசசபையின் நிதியையும் சேர்த்து சுமார் ரூபா 20இலட்சம் செலவில் வீதிகளுக்கு மின் குமிழ் கள் பொருத்தப்பட்டன.

மின் குமிழ்கள் பொருத்தப் பட்டு 6 மாதங்களில் பழுத டைந்து ஒளிராமல் வீதிகள் இருளில் மூழ்கிக் காணப்படு வதாக மக்கள் கவலை தெரிவித்ததுடன், இந்த நிலை குறித்துப் பிரதேச சபை தவிசாளருக்குச் சுட் டிக்காட்டியிருந்தனர்.

இது தொடர்பாக வலி. தென். மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெப னேசனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, ரூபா 20லட்சம் செலவில் மின்குமிழ்கள் ஏற்கனவே பொருத்தப்பட்டது. மின்கு மிழ்கள், சென்சர் மற்றும் ஆளிகள் போன்றவற்றில் ஏற்பட்ட சில பழுதுகள் கார ணமாக அவை ஒளிராமல் தடைப்பட்டன. அவ்வா றான மின்குமிழ்களின் திருத்தப்பணிகள் இடம் பெற்றுவரும் அதேவேளை மேலும் 400 மின்குமிழ் கள் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொண்டுள்ளது.

பிரதேச சபையின் நிதி யான 50 இலட்சம் ரூபா செலவில் பொருத்தப்பட உள்ளது. இவற்றிற்கான கேள்விகோரல் இடம்பெற் றுள்ளது" - என்றார். (115, 114)

## கழிவுகளை ஏற்றும் பெட்டிகளை வலைகளால் மூடத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூலை 18

வீதியால் செல்லும் பொதுமக்களின் நலன்கருதித் திண்மக் கழிவுகளை ஏற்றிச் செல்லும் உழவு இயந்திரப் பெட்டிகள் வலைகளால் மூடப்படவுள்ளன. இதற்கான தீர்மானம் வலி.தென்மேற்குப் பிரதேசசபைக் கூட்டத்தில் நிறைவேற் றப்பட்டுள்ளது.

திண்மக் கழிவு அகற்றும் வேலைத்திட்டம் தொடர்பில் கூட் டத்தில் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் பே.சுபாகர் திண் மக்கழிவுகள் உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்லப்படும் போது, வீதிகளில் சிந்தப்படுவதனால் வீதியால் செல்லும் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதுடன் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுகின்றது. இதனால் அனைவரது நலன்கருதி யும் கழிவுகளை ஏற்றிச்செல்லும் பெட்டிகளை மூடுவதற்கு வலைகளைப் பயன்படுத்தவேண்டுமென்று கோரியிருந் தார். இவரின் கோரிக்கையைத் தொடர்ந்து பிரதேச சபை யால் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (115)

## அமைச்சர்...

வடக்கு மாகாண அமைச்சர் சபையில் பா. டெனீஸ்வரனும் அமைச்சராகத் தொடர்கின்றார் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த மாதம் 29ஆம் திகதி இடைக்காலக் கட்டளையைப் பிறப்பித்திருந்தது. இடைக்காலக் கட்டளைக்கு அமைவாக பா.டெனீஸ்வரனுக்கு அவர் வகித்த அமைச்சுப் பொறுப்புக்கள் மீள வழங்கப்படவில்லை.

நீதிமன்றத்தின் கட்டளையால் அமைச்சர் சபை செயற்பட முடியாத நிலைமை தோன்றியுள்ளது. கடந்த மாதம் 6ஆம் திகதிக்குப் பின்னர் அமைச்சர் சபை கூட்டப்படவில்லை. அமைச்சர் சபையைக் கூட்டும், அமைச்சர் சபையின் செயலரும் வடக்கு மாகாண தலைமைச் செயலருமான அ.பத்திநாதன், இது தொடர்பில் வடக்கு ஆளுநருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அமைச்சர் சபைக் கூட்டத்தை தனது அனுமதியின்றி கூட்டவேண்டாம் என்று ஆளுநர் பதில் வழங்கியுள்ளார்.

இந்த விவகாரம் தீர்க்கப்படமையால் வடக்கு மாகாண நிர்வாகம் நாளுக்கு நாள் சிக்கலுக்கு உள்ளாகி வருகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ந-5,105)

## சாவகச்சேரியைப்...

பிரிவுகளை விட அதிகமான கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பிரதேச செயலர் பிரிவுகளை இரண்டாகப் பிரிக்கும் யோசனை கொள்கையளவில் நீண்டகாலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் இது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தபோதும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அண்மையில் தலைமை அமைச்சரிடம் இது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. சாவகச்சேரிப் பிரதேச சபையை இரண்டாகப் பிரிப்பதன் ஊடாகவே அபிவிருத்தி அடைய முடியும் என்று சாவகச்சேரிப் பிரதேச செயலரும், ஏனையோரும் அந்தச் சந்திப்பில் திடமாகக் கூறினர். அதையடுத்து சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவை இரண்டாகப் பிரிப்பதற்கான நடவடிக்கையைத் தலைமை அமைச்சர் எடுத்தார். அதற்கான அரசிதழை தயார்ப்படுத்தப் பணித்தார்.

தற்போது அரசிதழ் அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய மாவட்டத்திலும் சில பிரதேச செயலாளர் பிரிவுகள் இரண்டாகப் பிரிப்பதற்கான முற்பாடுகள் முழுமை செய்யப்பட்டு அரசிதழ் அறிவித்தலுக்காக அனுப்பப்படுகின்றது. அவற்றுடன் இணைந்து சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் பிரிவையும் இரண்டாகப் பிரிப்பதற்காக அறிவித்தலும் வெளியாகும். அரசிதழ் அறிவிப்பின் பின்னர் தற்போதுள்ள சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் 32 கிராம அலுவலர் பிரிவுகளும், புதிதாக உருவாக்கப்படும் கொடிகாமம் பிரதேச செயலர் பிரிவில் 28 கிராம அலுவர் பிரிவுகளும் உள்ளடங்கும். -என்றார். (ந-105)

## இழப்பீட்டு...

கட்சி கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக்கவால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க ஆள்கள், சொத்துகள், தொழில் துறைகளுக்கு மறுவாழ்வளிக்க அதிகாரமளிக்கும் சட்டத்தை இரத்துச் செய்யும் ஏற்பாடு இடம்பெற்றுள்ளது. இந்தப பணியகமானது அரசமைப்புச் சபையால் பரிந்துரைக்கப்பட்டு அரச தலைவரால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். அரசமைப்புச் சபையால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் 14 நாள்களுக்குள் அரச தலைவரால் நியமிக்கப்படத் தவறின் அவர்கள் அரசமைப்புச் சபையால் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர் எனக் கருதப்படுவர் என்று சட்டமூலத்தின் 20 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணியகத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் அமையவேண்டும் என்றும், பிராந்திய அலுவலகங்களை அமைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நபர்களுக்குச் செய்யப்படவேண்டிய இழப்புக்கான எதிரீடுகள் தொடர்பிலான விதப்புரைகளை காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் உட்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல்.

பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து அல்லது பாதிப்பட்டவர்களின் பிரதிநிதிகளிடமிருந்து இழப்புகளுக்கான எதிரீடுகளுக்கான விண்ணப்பங்களைப் பெறுதல், இழப்பீடுகளைப் பெறுவதற்குத் தகவுடைமையை மதிப்பீடு செய்தல், விண்ணப்பங்களின் உண்மைத் தன்மையைச் சரிபார்த்தல் என்பது உட்பட மேலும் பல விடயங்கள் அலுவலகத்தின் தத்துவங்களும், பணிகளும் என்ற விடயத்தின் கீழ் அடங்குகின்றன.

எவரேனும் இழப்பீடுகள் தொடர்பான அலுவலகத்துக்கு வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கினாலோ, அலுவலகத்தின் செயற்பாடுகளை முடக்கும் வகையில் செயற்பட்டாலோ அவமதிப்புத் தவறொன்றுக்கு குற்றவாளியாக நேரிடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## மணிவண்ணனை...

ரணிகளை வரையறை ஆட்சேபனை முன்வைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒரு வார காலம் அவகாசம் வழங்கியது. வழக்கு அடுத்த மாதம் 3ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்தது.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்காத ஒருவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டமை உள்ளூராட்சி தேர்தல் விதியை மீறும் செயல் என்று குறிப்பிட்டு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

மனு தாரரின் கோரிக்கைகளில் ஒன்றான யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினர் வி.மணிவண்ணன் சபை அமர்வுகளில் பங்கேற்பதற்கும் வாக்களிப்பதற்கும் இடைக்காலத் தடை விதித்து கட்டளையிட வேண்டும் என்று கோரி மனுதாரரின் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றில் சமர்ப்பணம் முன்வைக்க விண்ணப்பம் செய்தார். இதன்போது மணிவண்ணன் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி புவிதரன், தாம் வரையறை ஆட்சேபனை முன்வைக்கவுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

அதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் எதிர்வரும் 25ஆம் திகதிக்குள் அதைத் தாக்கல் செய்யுமாறு பணித்தது. மனுதாரர் தரப்பு, தாக்கல் செய்யும் வரையறை ஆட்சேபனை மீது மறுப்புத் தெரிவிக்கவேண்டி ஏற்பட்டால், 25ஆம் திகதிக்குப் பின்னரான ஒரு வாரகாலத்தினுள் தாக்கல் செய்யவேண்டும் என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டு வழக்கை ஓகஸ்ட் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்படும் போது, வி.மணிவண்ணனும் மன்றில் தோன்றியிருந்தார். (ந-5)

## அரசியல்...

கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனை இந்த அமைப்பு நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியது. இந்தச் சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவர் பணிமனையில் நடைபெற்றது. அதில் இரா. சம்பந்தனிடம் அவர்கள் மனு ஒன்றைக் கையளித்தனர். அதிலேயே அவர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

அதில் உள்ளதாவது

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தாங்களும் தங்களுடைய கட்சியினரும் அக்கறை கொண்டுள்ளதை நாம் அறிவோம். போர் முடிவுற்றதைத் தொடர்ந்து 12 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகளை கடந்த கால ஆட்சியில் அப்போதைய அரச தலைவர் விடுவித்ததை நாடு முழுதும் அறியும்.

இந்த ஆட்சியில் அரசதலைவர் கடந்த ஆட்சியில் அமைச்சராக இருந்த போது தன்னைக் கொலை செய்ய வந்தவரை விடுதலை செய்ததைத் தவிர எவரையும் விடுவிக்கவில்லை. கூட்டரசின் காலம் இன்னும் ஒன்ரறை ஆண்டுகளே. அதனால் அரசியல் கைதிகளின் விடுதலை சந்தேகமாகவே உள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது அவருக்கு ஆதர வாக்கவாக்களித்த நீங்கள் 10 நிபந்தனைகளை தலைமை அமைச்சருக்கு வழங்கினீர்கள். அதில் ஒன்று அரசியல் கைதிகளின் விடுதலை என்பதையும் நாம் அறிவோம். இது தொடர்பில் தலைமை அமைச்சர் கொடுத்த வாக்குறுதி என்ன?, அரசின் நிலைப்பாடு என்ன?. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த கட்ட நகர்வு எவ்வாறு அமையப்போகிறது. இவை அனைத்தும் தங்களுக்கு வாக்களித்த மக்களின் கேள்விகளாகும்.

அரச தலைவர் மைத்திரியும், அவரின் அமைச்சரவையின் சில உறுப்பினர்களும் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று கூறுகின்றனர். இணக்க அரசியலை முன்னெடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு இறுக்கமான அழுத்தத்தைக் கொடுத்து அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பது மக்களதும், எமது அமைப்பினதும் விருப்பமாகும்.

அரசியல் கைதிகளின் விடுதலை என்பது தமிழ் அரசியலில் மைய இடத்தை வகிக்கிறது. அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சரின் நூல் வெளியீட்டில் தாங்களும் கலந்து கொண்டு உரையாற்றும் போது விடுதலைப் புலிகளின் போராட்டம் நியாயமானது, நீதியானது என்று கூறியிருந்தீர்கள். வரவேற்கிறோம். நீதிக்காக, நியாயத்துக்காகப் போராடியவர்களில் 108பேர் சிறையில் வாடுவதும் அவர்களின் குடும்பங்கள் மன அழுத்தத்திலும், ஏழ்மையிலும் துன்புறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதைத் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் பிரச்சினை யாகவே நாம் கருதுகிறோம். அரசியல் கைதிகளின் விடுதலை சட்டத்துக்கு உட்பட்ட ஒன்றல்ல என்பதை தாங்கள் நன்கறிவீர்கள். இணக்க அரசிலை தொடர்ந்தும் முன்னெடுக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கி, அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுவிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்- என்றுள்ளது. (ந-21)

## ஆளுநர்...

**கேள்வி:** வடக்கு மாகாணசபை கலைக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதுஎன்றுஅவைத் தலைவர் கூறு கின்றாரே. அதில் உண்மையுள்ளதா?

**பதில்:** இல்லை. ஒரு மாகாணத்தின் ஆளுநர் தானே பிழை செய்து விட்டு தன் பிழையை வைத்தே மாகாண ஆட்சியைக் கலைக்க முடியுமென்றால் கொழும்பு அரசு அதைச் செய்தே அனைத்து மாகாண சபைகளையும் கலைத்துவிடலாம். எமது ஆளுநர் அரசிதழில், டெனீஸ்வரனை நான் நீக்கியது பற்றி பிரசுரிக்காமையே மேன்முறையீட்டு மன்றின் தீர்ப்புக்குக் காரணம்.

வடக்கு மாகாணசபை சார்பாக ஆளுநர் தானே ஒரு முக்கியமான செயலைச் செய்யாது விட்டு அதை முன்வைத்து வடக்கு மாகாண சபையைக் கலைக்க சட்டம் இடம் கொடுக்காது. அவைத் தலைவர் தொடர்ந்து எமது பதவிக்காலம் வரையில் அவைத் தலைவராகவே இருக்கலாம் என்றுள்ளது.

முதலமைச்சரின் இந்தப் பதில் தொடர்பில் அவைத் தலைவரிடம் கேட்டபோது, இப்போது எழுந்துள்ள பிரச்சினை அவைத் தலைவர் பற்றியது அல்ல. அமைச்சர் சபை பற்றியது. அதையே தீர்க்கவேண்டும். எதிர்வரும் ஒக்ரோபர் 25ஆம் திகதியுடன் முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் சபையின் பதவிக் காலம் முடிவுக்கு வந்துவிடும். ஆனால் அவைத் தலைவரின் பதவி, அடுத்த சபை பொறுப்பேற்கும் வரையில் தொடரும் - என்றார். (ந-5,105)

## பரிந்துரைக்கும்...

ளார். 'நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக அதிகாரம் பறிக்கப்படவில்லை. அந்த அதிகாரம் முதலமைச்சரிடமே தொடர்ந்து இருக்கின்றது' என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், முதலமைச்சருக்கு பதில் அனுப்பியுள்ளார். அதன் பிரதியை வடக்கு ஆளுநருக்கும் அனுப்பியுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் சிறப்பு அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வடக்கு மாகாணத்துக்கு முழுமையான அமைச்சர் சபையை முதலமைச்சர் நியமிக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் உடனடியாகவே முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தக் கடிதத்துக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுப் பதில் அனுப்பியுள்ளார். மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக, அமைச்சர் சபையைப் பரிந்துரைப்பதற்கு தனக்கு அதிகாரம் இல்லை என்று அந்தப் பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சரின் கடிதத்துக்கு அவைத் தலைவர் உடனேயே பதில்க் கடிதம் அனுப்பியுள்ளார். 'தங்களால் குறிப்பிடப்படும் நீதிமன்றத் தீர்ப்பின் 16ஆம் பக்கக் கருத்துத் தெளிவானதே. ஒரு மாகாண சபை அமைச்சரின் நியமனம் மற்றும் நீக்கம் என்பன ஆளுநராலேயே நிறைவேற்றப்பட வேண்டும் என்பதும் அந்தக் கடமைகளை ஆளுநர், முதலமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே நிறைவேற்றலாம் என்பதும் தெளிவு.

நியமன அதிகாரம் ஆளுநரிடமும், ஆலோசனை வழங்கும் பொறுப்பு முதலமைச்சரிடமும் உள்ளது என்பது தெளிவானது.

முதலமைச்சரின் ஆலோசனை கட்டாயம் என்பதும் தெளிவானது. எனவே முதலமைச்சருக்கு நியமனம், பதவிநீக்கம் தொடர்பாகவுள்ள ஆலோசனை அதிகாரம் வலியுறுத்தப்பட்டுள்ளதே தவிர எதுவித அதிகாரமும் இல்லையென்று கூறப்படவில்லை என்பதே எனது கருத்தாகும் என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம், முறைப்பாட்டாளரை சட்டபூர்வமாக நீக்கும் அதிகாரத்தை இந்த இடைக்கால நிவாரணம் பாதிக்காது என்பது கவனிக்கப்பாலது.

எனவே முதலமைச்சருக்கு சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்கள், பொறுப்புக்கள் எதையும் நீதிமன்றம் மறுதலிக்கவில்லை என்பதும் சட்டப்படி தாங்கள் இப்பொழுதும் செயற்படலாம் என்பது எமது கருத்தாகும்' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை திரிபுபடுத்திக் கூறுகின்றார் என்று சபையின் சிறப்பு அமர்வில் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த அமர்வில் முதலமைச்சர் பங்கேற்கவில்லை. (ந-5)

## மனித...

உரிமை கரிசனைகள் உள்ள 30 நாடுகளின் பட்டியலில் இலங்கையைத் தொடர்ந்தும் உள்ளடக்கியுள்ளது. பிரிட்டன் அயலுறவு மற்றும் கொமன்வெல்த் பணியகத்தின் 2017ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் ஆண்டு அறிக்கை நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. அதில் "மனித உரிமைகள் முன்னுரிமை நாடுகள்" என்ற 30 நாடுகள் கொண்ட பட்டியலில் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், பஹ்ரெய்ன், பங்களாதேஸ், மியன்மார், புருண்டி, மத்திய ஆபிரிக்கக் குடியரசு, சீனா, கொலம்பியா, வடகொரியா, கொங்கோ, எகிப்து, ஈரான், ஈராக், இஸ்ரேல், லிபியா, மாலைதீவு, பாகிஸ்தான், ரஷ்யா, சவூதி அரேபியா, சோமாலியா, தென்சூடான், சிறிலங்கா, சிரியா, சூடான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் வெனிசுவேலா, யேமன், சிம்பாப்வே ஆகிய நாடுகளும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. (ந)

# திருவடிநிலை இந்து மயானத்தில் மணல் அகழ்ந்தவர்கள் சிக்கினர்

## பிரதேச இளைஞர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம், திருவடிநிலை மயானத்தில் மணல் அகழ்ந்தவர்கள் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட ஜே.சி.பி. வாகனமும், டிப்பர் வாகனமும் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகளே பொதுமக்களால் பிடிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 6 மணியளவில் நடந்துள்ளது.

சுழிபுரம், திருவடிநிலை புனித கடற்கரையோரத்தில் உள்ள இந்து மயானத்தில் அண்மைக்காலமாக இரவு வேளைகளில் மணல் அகழ்வு நடந்துள்ளது. சடலங்களைப் புதைக்கும் புதைகுழிகள் அமைந்துள்ள இடத்தில் மணல் அகழப்பட்டுகின்றமையால் எலும்புக் கூடுகள் வெளி வந்துள்ளன. எலும்புக் கூடுகளின் எச்சங்களுடன் சேர்த்தே மணல் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்று மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை டிப்பரில் மணல் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது. மாலையும் மணல் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது. அதை அவதானித்த காட்டுப்புலம், பாண்டவெட்டை இளைஞர்கள் ஒன்று கூடி ஒரு டிப்பரையும் ஒரு ஜே.சி.பி வாகனத்தையும் நேற்று மடக்கிப் பிடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான ந.பொன்ராசா, செ.கிருஸ்ணராசா ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்றனர். இந்த விடயம் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவித்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சாரதிகள் இருவரையும் கைது செய்தனர். அவர்களையும் வாகனங்களையும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் எனவும் வாகனங்களும் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, முன்னரும் ஒரு தடவை மணல் கடத்தியவர்கள் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். எனினும் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ந-37)



ஐ.நாவின் அரசியல் விவகார

## ஆசிய–பசுபிக்பணிப்பாளர் நல்லிணக்கம்பற்றிப்பேச்சு

கொழும்பு, ஜூலை18

நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கானதிணைக்களத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கானபணிப்பாளர் மாரி யமாஷிடா இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஐ.நாவின் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான ஆதரவுப் பணியகத்திலும் பணியாற்றும் இவர், இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகள், அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயவே, இங்குவந்துள்ளார் என்றுதெரிவிக்கப்பட்டது. இந்தப் பயணத்தின் ஒரு கட்டமாக அவர், இலங்கை அரசு மற்றும் இராணுவஅதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம்இராணுவத்தலைமையகத்துக்குச் சென்ற மாரி யமாஷிடா, இராணுவத் தளபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது, இராணுவத்தினர் முன்னெடுக்கும் சமூகப் பணிகள் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்தார்.

ஐ.நா. அமைதிப்படையில் இலங்கைப் படையினர் பணியாற்றுவது தொடர்பாக இருக்கும் பிரச்சினைகள்மற்றும்தடைகள்குறித்தும் இதன்போது பேசப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இராணுவத்தின் அயல்நாட்டுநடவடிக்கைகளுக்கான பணியகத்தின் பணிப்பாளர் நாயகம், மேஜர் ஜெனரல் மேர்வின்பெரேராவும்பங்கேற்றார். (4)

## றெஜீனாவுக்குஉரியநீதிகோரி கிளிநொச்சியில்கவனவீர்ப்பு

*பாடசாலை மாணவர்கள் நடத்தினர்*

யாழ்ப்பாணம், ஜூலை18

கிளிநொச்சி இராமநாதபுரம் பாடசாலை மாணவர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் மாணவி றெஜீனா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நீதிகோரியும், போதைப்பொருளை ஒழிக்க கோரியும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாடசாலையில் இடம்பெற்றஇந்தக்கவனயீர்ப்புப்போராட்டத்தில்'சிறுவர்கள் என்னபாலியல்பொம்மைகளா?''பெற்றோரே, பெரியோரே சிறுவர்களான எங்களைப் பாதுகாருங்கள்', 'உன் போதைக்கு பேதை தேவையா? ''இன்று றெஜீனா நாளை யார்?' 'விழித்தெழுவோம் சிறுவர்களைக் காப்போம்', 'பள்ளிப் பிஞ்சுகள் பாலியல் பசுக்குத் தீனிகளா?' போன்ற வாசகங்கள்எழுதப்பட்டபதாதைகளையும்ஏந்தியிருந்தனர். பாடசாலை மாணவர்களின் இந்தக் கவனவீர்ப்பு காலை 7.30 மணிக்கு ஆரம்பித்து ஒரு மணித்தியாலம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.



## ஹெரோய்ன் வாங்குவதற்கு பெற்றதாயின் சங்கிலி அறுப்பு

கொழும்பு, ஜூலை18

ஹெரோயின் வாங்குவதற்காகத் தாய் பணம் கொடுக்காததால் தாயின் தங்கச் சங்கிலியைப் பறித்துச்சென்று போதைப் பொருள் வாங்கி உட்கொண்டார் மகன்.

சம்பவம் குருநாகலில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

அதே இடத்தைச்சேர்ந்த 42வயதானவர் போதைப்பாவனைக்கு அடிமையாகியுள்ளார். ஹெரோய்ன் வாங்குவதற்காகத் தன் தாயை நச்சரித்தபோதும் அவர் பணம் கொடுக்க மறுத்துள்ளார். உடனே தாயென்றும் பாராமல் அவரதுகழுத்திலிருந்ததங்கச்சங்கிலியைபலவந்தமாகப் பறித்து எடுத்துக்கொண்டு சென்று அதனைவிற்று ஹெரோய்ன் போதைப்பொருளை வாங்கி உட்கொண்டுள்ளார். சந்தேநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்க நீதிமன்று உத்தர விட்டது. (4)

# பிரதேசசெயலகமோசடிகளுக்கு எதிராக விசாரணை இடம்பெறும்

*மாகாண உறுப்பினர் லிங்கநாதன் கூறுகிறார்*

**வவுனியா, ஜூலை 18**

**வவுனியாவடக்குப்பிரதேசசெயலகத்தில்இடம்பெற்றமோசடிவிடயங்கள் தொடர்பாக விசாரணைகள் தொடரும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.**

வவுனியாவிலுள்ளஅவரதுபணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இருந்து நான் வெளியேறியதாகவும், அரச பணியாளர்களை அச்சுறுத்தியதாகவும்கூறி வவுனியா வடக்குப் பிரதேச செயலக ஒரு சில ஊழியர்களின் ஏற்பாட்டில் (நேற்றுமுன்தினம்) ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இப்படியான ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்றுதான் நான் அன்று வேண்டுமென்றே வெளிநடப்புச் செய்தேன். காரணம் கிட்டதட்ட 8 ஆண்டுகளாகப் பிரதேச செயலாளரும், அவருடன் இணைந்த 7 உத்தியோகத்தர்களும்வவுனியாவடக்கிலே பாதிக்கப்பட்டமக்களுக்குக்கிடைக்கும் சலுகைகள், பணம் என்பனவற்றைச் சுரண்டி தாங்கள் ஏப்பம் விட்டு மிகுதியைமாத்திரம்வழங்கும்ஒருநிலமை இருக்கிறது.

அவர்களிடம் சென்று ஒரு வேலையைச்செய்யமுடிந்தால்அவர்செல்வந்தராக இருந்தால் மாத்திரமே சாத்தியமாகும்.

ஒவ்வொருபுதன்கிழமைகளிலும்கால்கடுக்க நடந்து செல்லும் ஏழை மக்களால்ஒருஏக்கர்காணிக்குக்கூடஉறுதி எடுக்கமுடியாதநிலையே இருக்கிறது.

பலமுறை முயற்சி செய்தும் அவர்களின்இரும்புக்கோட்டையைஉடைத்து அங்கேஇருக்கும்உண்மைநிலையை உணரமுடியாத காரணத்தால்தான் வெளிநடப்பு என்றநாடகத்தின் ஊடாக அவர்களைமக்கள்மத்தியில்அடையாளப்படுத்தும் ஒரு முயற்சியாக நானே அவர்களை வெளியில் எடுத்தேன்.

காஞ்சூர மோட்டையில் நடைபெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கத்தையும் நெடுங்கேணிப் பிரதேசசபை உறுப்பினர்களையும் அழைத்துச் செல்லுமாறு நானே கூறிஇருந்தேன். அதற்கும் வெளிநடப்புச் செய்ததற்கும் ஒருசம்பந்தமும் இல்லை.

அண்மையில்பொதுநிர்வாகஉள்நாட்டலுவல்கள் அமைச்சு ஒவ்வொரு பிரதேசசெயலகங்களுக்கும்200மில்லியன் ரூபாவை ஒதுக்கி இருந்தது. ஆனால் இதுவரை மக்கள் பிரதிநிதிகளானஎங்களுக்குத்தெரியப்படுத்தப்படவில்லை. இதைத்தான் நான் கேட்டேன். இது தொடர்பாகநாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்திஆனந்தனுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் ஏற்பட்டமுரண்பாடேநான்கூட்டத்தில் இருந்துவெளியேறக்காரணமேதவிர வீட்டுத்திட்ட அடிக்கல் சம்மந்தமாக இல்லை.

பலகோடிரூபா வடக்குப்பிரதேசசெயலகத்தில் மக்களுக்குச் செல்லவேண்டிய காசு தங்களால் கையாளப்பட்டுள்ளது. இதுதொடர்பாக18குற்றசாட்டுகள் இதுவரை என்னிடம் கிடைக்கப் பெற்றிருக்கின்றனஅவற்றை. கூடியவிரைவிலே கொழும்பு சென்று எனது சட்டதரணிஉடாகஇலஞ்சஊழல்ஆணைக்குழு, கணக்காளர் நாயகம், நாடாளுமன்ற கணக்காய்வு ஆகிய மூன்றுக்கும்நான் கையளிக்க உள்ளேன்.

நான் பொதுமக்களிடம் ஒன்று கேட்டுகொள்கிறேன். உங்களுடையகோரிக்கைகளைச் செவிமடுக்காது அவர்களின் அதிகாரங்களை முறைகேடாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் இருந்தால்நெடுங்கேணியில்உள்ளஎன்னுடையவீட்டுக்குஅல்லதுகோவில்குளத்தில் உள்ள பணியகத்துக்கு அல்லது அலைபேசியிலோதகவல்தாருங்கள். நான் அதற்கான நீதிய்ப் பெற்றுத் தருவேன். காணிவிடயங்கள், சமுர்த்திப்பிரச்சினைகள், கிரவல்விடயங்கள் ஒரு இரவிலே 30 ஏக்கர் காணிமாற்றியவிடயம், சமுர்த்திவங்கியில்நடைபெற்றமோசடி உள்ளிட்ட 18 விடயங்களுக்கு எதிராக எனது நடவடிக்கை தொடரும் -என்றார்.

இந்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் குறித்தபிரதேசசெயலர் க.பரந்தாமனிடம் உதயன் வினவியபோது குற்றச்சாட்டுக்களைமறுத்தார். (4,110)

## புதிய பாலத்தினூடாக சந்நிதிக்குச்செல்லலாம்

யாழ்ப்பாணம், ஜூலை18

தொண்டைமானாறுசெல்வச்சந்நிதி ஆலயத்துக் செல்லத் தற்காலிகமாக அமைக்கப்படும் பாலம்அகற்றப்படவுள்ளது. இனிஅதுஅமைக்கப்படாது. பதிலாகப் புதிதாக அமைத்த பாலம் பயன்பாட்டுக்கு விடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதற்கான முன்னேற்பாடுகள்பற்றியகலந்துரையாடல்பருத்தித்துறைப்பிரதேசசெயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக்கலந்துரையாடலில்திணைக்களங்களைச்சேர்ந்தஅதிகாரிகள், ஆலயநிர்வாகத்தினர் கலந்துகொண்டிருந்தனர்.

திருவிழாவைச் சிறப்பாக நடத்துவதற்குரிய ஏற்பாடுகள்மற்றும்ஒவ்வொருதிணைக்களத்தினருக்கும் உரிய வேலைகள் என்பன பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

முக்கியமாக வலிகாமம் பகுதிகளில் இருந்து செல்லும் பக்தர்கள் திருவிழாக் காலங்களில் கூடுதலாகப் பாவிக்கும் கடலின் ஊடாகத் தற்காலிகமான பாலம் அகற்றப்படவுள்ளது.

கட்டுமானப்பணிகள் இடம்பெற்றுவந்த நிரந்தரமான பாலம் அதன் பணிகள் நிறைவுற்ற காரணத்தால் திருவிழாக் காலத்தின் இறுதி மூன்று நாள்களும் இருவழிப் பாதையாகத் திறந்துவிடப்படவுள்ளது. ஆலய வளாகத்தினுள் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதனைத் தடுப்பதுடன் அனைத்து விற்பனை நிலையங்களிலும் சுகாதார நிலையங்களில் சட்ட ஒழுங்குமுறைகளைப்பின்பற்றவேண்டும்.

அத்துடன் ஆலய எல்லைக்குள் பொருத்தப்படும் ஒலிபெருக்கிச்சாதனங்கள் அனைத்தும் கோவில் நிர்வாகத்தினரால் கட்டுப்படுத்தப்படும்-என்றுமேலும்தெரிவிக்கப்பட்டது. (4,114)

## யாழ். தவிர்ந்த 4 மாவட்டங்களிலிருந்து முதலமைச்சரைத் தெரிவு செய்யுங்கள்

*பெயர் குறிப்பிடப்படும் இருவரும் வேண்டாம்*

யாழ்ப்பாணம், ஜூலை18

முதலமைச்சர் ஆவதற்குரிய தகுதியானவர்யாழ்ப்பாணம்தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இல்லையா? தற்போது முதலமைச்சர் வேட்பாளர்களாகப் பேசப்படும் இருவரையும் எந்தச் சந்தர்ப்பத்திலும்நான்ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்

வவுனியாவினுள்ள அவரது பணியகத்தில்நேற்றுஇடம்பெற்றஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபைஉறுப்பினர்களுக்குப் பேரவைச் செயலகத்தால் கூட்டத்துக்கு அறிவித்தல்வரும் போது அந்தக் கூட்டத்துக்கு நாங்கள் வரமுடியவில்லை என்றால் முற்கூட்டியே அறிவிக்க வேண்டும். இல்லாவிடின் அந்தக்கூட்டத்துக்குச்செல்ல வேண்டும்.

225நாடாளுமன்றஉறுப்பினர்களில் 64 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில்சித்தியடையாதவர்களாக இருக்கின்றார்கள். அவ்வாறானவர்கள்நாடாளுமன்றஉபகுழுக்களிலும் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். ஆகவேகல்வியியலாளர்கள்தான் சமூகத்தை வழிநடத்த வேண்டும். அல்லது போரால்பாதிக்கப்பட்டஇடத்தைக் கல்வியியலாளர்கள்தான் மாற்றியமைப்பார்கள் என்று சொல்லிவிட முடியாது. அதற்கு வடக்கு மாகாணசபையின் கடந்தகால நிகழ்வுகள் எம் கண்முன்னே இருக்கின்றன. அவ்வாறுபார்க்கின்றபோதுகிழக்குமாகாணமுன்னாள் முதலமைச்சர் பிள்ளை யான் பரவாயில்லை என்றே கூறுவேன்.

உண்மையான வெளிப்படையான அர்ப்பணிப்புத் தன்மையுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவைசெய்யக்கூடிய மனநிலை இருந்தால் அதுவே முதலமைச்சருக்கான தகுதியாக இருக்கும். இதை விடுத்து கல்வியையும் பட்டங்களையும்தகுதியாகக்கொள்ள முடியாது. ஆகவே ஒரு கட்சி இன்னாரைத் தான் போடுவோம் என்றால் அடுத்த முறை மற்றைய கட்சியைச் சேர்ந்தவருக்கோ ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியாவைச் சேர்ந்தவர்களையோ நியமிக்கலாம். இந்த நான்கு மாவட்டங்களிலும் திறமையானவர்கள் இல்லையா? இது தொடர்பாகச் சிந்திக்கப்பட வேண்டும் -என்றார்.

வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளராகசி.வி.விக்னேஸ்வரன்என்று ஒரு சாராரும், இல்லை மாவை சோனாதிராசாதான் என்றும் மற்றொரு சாராரும் கருத்துக் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4.110)

# பேராதனைப் பல்கலை பொறியியல் பீடம் பூட்டு

## 80 வீத வரவு இல்லாதோர் குழப்பம் செய்ததால்


கொழும்பு, ஜூலை 18
பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் மறு அறிவித்தல் வரும்வரைக்கும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
அதன்படி பீட மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.
80 வீத வரவு உள்ள மாணவர்களுக்கே பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படும் நிலையில், அவ்வாறு கணிப்பீடு செய்யாமல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்குமாறு சில மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தநிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
குறித்த பீடத்துக்குரிய மொத்த மாணவர்களில் 97 வீதமான மாணவர்களுக்குச் சரியான வரவு வீதம் இருப்பதாகவும், எஞ்சிய 03 வீதமான மாணவர்களுக்கே வரவு வீதம் குறைவாக இருப்பதாகவும், அந்த 03 வீதமான மாணவர்களே எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் உபுல்பீ. திசாநாயக்க கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# பௌத்த மைய நிலையம் அமைக்கக் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 18
மட்டக்களப்பில், கோறளைப்பற்றுவடக்குவாகரைப் பிரதேசத்துக்குட்பட்ட புணானை கிழக்குக் கிராம அலுவலர்பிரிவில் பௌத்தமதவிவகார அமைச்சின் ஆதரவுடனும் பௌத்த மக்களுக்கான மைய நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று மட்டக்களப்பு மாவட்டச் செயலர் மா. உதயகுமாருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டதாவது.
போர்க் காலத்தில் இடம்பெயர்ந்து கடவத்தமடு என்னும் பகுதிக்குச் சென்று அரச மானிய வீடு, மானிய உணவுப் பொருள் உதவியைப் பெற்று வாழ்ந்துவிட்டு தற்போது திம்புலாகலை பிக்குவின் ஆதரவுடனும், இராணுவத்தின் ஆதரவுடனும் புணாணை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக விநாயகர் ஆலயத்தை அண்மித்து விகாரை அமைத்துவிட்டு மீள்குடியமர்வு என்றபெயரில் 25 சிங்கள குடும்பங்களுக்கு மேல் குடியேறியுள்ளனர்.
தற்போது உயர்கல்வி அமைச்சின் ஆதரவுடனும், பௌத்த மதவிவகார அமைச்சின் ஆதரவுடனும் பௌத்த மக்களுக்கான மைய நிலையம் அமைக்க முயற்சிக்கின்றனர். இது திட்டமிட்ட ஒருசிங்களமயமாக்கல் முயற்சி - என்றுள்ளது. (4)

# புதிய அரசமைப்பு வந்தால் நாடு 9 துண்டுகளாகிவிடும்

## குணவன்ச தேரர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 18**
**புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் நாடு ஒன்பது துண்டுகளாகப் பிளவடையும் என்று எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இலங்கைஎன்றமரத்தில்ஒவ்வொருமரக்கிளைகள் வெட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வரலாறு அடையாளம் காணமுடியாத சூழ்ச்சிக்கான தளத்தை அரசு உருவாக்கியுள்ளது.
தற்போதுபுதியஅரசமைப்பைஉருவாக்கப்பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். புதியஅரசமைப்புஉருவாக்கப்பட்டால்நாடு ஒன்பது துண்டுகளாகப் பிளவடையும் வாய்ப்புள்ளது. எனவேஇந்தஅரசுக்குஎதிராகஅனைத்துச் சமூகத்தினரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் - என்றார். (4)




# தீக்குச்சி தயாரிப்பாளர் கண்டியில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 18
தீக்குச்சி தயாரிக்கும் 11 தொழிற்சாலைகளின் பணியாளர்கள் கண்டி கடிகார கோபுரத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
3 மாதங்களாகத் தீக்குச்சித் தயாரிப்பதற்குத் தேவையான வெடிமருந்துகளும், இரசாயனப் பொருள்களும் அரசால் வழங்கப்படவில்லை என்று கூறி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
3 மாதங்களுக்கு முன்னர் இது சம்பந்தமாக உரியஅதிகாரிகளுக்குத்தெளிவுபடுத்தியபோதிலும், இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த நாட்டில் தீக்குச்சித் தயாரிப்பை மிகவும் சூட்சுமமாகநிறுத்திவிட்டுவெளிநாட்டில்இருந்து இறக்குமதி செய்வதற்கு அதிகாரிகள் திட்டமிடுகின்றனர் என்று அவர்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.
சுமார்5ஆயிரம்பேர்வரையில்ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். அதனால் அங்கு வாகனநெரிசல்ஏற்பட்டதுஎன்றுதெரிவிக்கப்பட்டது. (4)

### ஆபாசப் படங்களை தரவேற்றினரென

# பொலிஸ் நிலையத்தில் அடிபிடிப்பட்ட 6 பேருக்கும் பிணை

கொழும்பு, ஜூலை 18
குருணாகல்பொலிஸ் நிலையத்தில் மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்ட ஆறு மாணவிகளும் தலா ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
முறைப்பாடு ஒன்றை விசாரிப்பதற்காகக் குருணாகல்பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட ஆறு பேரேபொலிஸ்நிலையத்தில்மோதலில்ஈடுபட்டுள்ளனர்.
முகப்புத்தகத்தில் ஆபாசமான புகைப்படங்கள், ஆபாசமான வார்த்தைகளைப் பதிவேற்றுதல் தொடர்பாக முறைப்பாடுசெய்யப்பட்டதற்கு அமையவே அவர்கள்விசாரணைக்காகக்குருணாகல் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.
ஆறு பேருக்குமிடையில் மோதல் இடம்பெற்றதால் சிரமத்துக்குமத்தியில்மோதலைப் பொலிஸார் கட்டுப்படுத்தினர். 6 பேரும்கைதுசெய்யப்பட்டனர்.
அவர்கள்குருணாகல் நீதி மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.
அதன்போதே அவர்கள்தலாஆயிரம்ரூபா சரீரப்பிணையில்விடுவிக்கப்பட்டனர். (4)

# மாணவர் நலன்கருதியாவது தூக்குத் தண்டனை வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 18
பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு தூக்குத் தண்டனையை நடைமுறைபடுத்த வேண்டும். அதற்கு அரசதலைவர்நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
வலப்பனை சிறிசுமங்கல தேசிய பாடசாலையில் கல்வி அமைச்சால்அமைக்கப்பட்டதமிழ்கற்கைநெறிக்கான கட்டடத் திறப்பு விழாவும் மாணவர்களின் கற்றல் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்தியமாணவர்களுக்கானபரிசளிப்பும் நேற்றுநடைபெற்றது.
அதில் முதன்மை விருந்தினராக இராதாகிருஸ்ணன் கலந்துகொண்டார். பாடசாலையின் அதிபர் கபில அத்தநாயக்க தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.
அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:
இலங்கையில் தூக்குத் தண்டனைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்ற கேள்வி இப்பொழுது அனைவரிடம்ஒருமுக்கியவிடயமாகமாறியிருக்கின்றது. கல்வி இராஜாங்க அமைச்சர் என்ற நிலைப்பாட்டில் இருந்துபார்க்கின்றபொழுது எதிர்கால மாணவ சமுதாயத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால் கட்டாயமாக அந்தச்சட்டத்தைநடைமுறைப்படுத்த வேண்டும்.
பாடசாலைமாணவர்களைக்குறிவைத்தே போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பாடசாலைகளுக்கு அருகில் இந்த நிலைஏற்பட்டுள்ளது. அநேகமான பாடசாலைகளுக்கு அருகில் தேடுதல் நடத்திய பொழுது பொலிஸார் பலரைக்கைதுசெய்திருக்கின்றார்கள். பெற்றோர்கள் பல எதிர்பார்ப்புகளுடன்தங்களுடையபிள்ளைகளைப்பாடசாலைகளுக்குஅனுப்புகின்றார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்புகள்நிறைவேறவேண்டுமாக இருந்தால் இந்தச் சட்டம் நடைமுறைபடுத்தப்பட வேண்டும்.
இன்று இந்தச்சம்பவத்தால்பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. ஒரு சில சம்பவங்கள் மாத்திரமே ஊடகங்களில்வெளிவருகின்றன. பல சம்பவங்கள் வெளிவருவதில்லை. அதற்குக் காரணம் பெற்றோர்கள் வெளியில் சொல்ல முடியாமல் இருக்கின்றார்கள். அவர்கள் கல்வி அமைச்சையும் இந்தஅரசையுமேநம்பியிருக்கின்றார்கள். எனவே நாங்கள் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும். எங்களுடைய நாட்டின் சட்டதிட்டங்களுக்குப் பொதுமக்கள் அஞ்சுவதில்லை. அதற்கு மதிப்பளிப்பதில்லை. எனவே மக்களைக் கட்டுப்பாடாக வைத்திருக்க வேண்டுமானால் நிச்சயமாகச் சட்டங்கள் மிகவும் இறுக்கமாக இருக்க வேண்டும்.
சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற பொழுது யாருக்கும் உடனடியாகத் தூக்குத் தண்டனை வழங்க முடியாது. அதனைப் பலமுறை நீதிமன்றில் விவா தம் செய்து அதில் குற்றவாளிகளாக இனம் காணப்படுகின்றவர்களே இந்தத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள். எனவே நிரபராதிகள் தண்டிக்கப்படமாட்டார்கள். குற்றஞ்செய்தவர்கள் எவராக இருந்தாலும்நிச்சயமாகஅவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் மாத்திரமே எங்களுடைய எதிர்கால மாணவர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். இல்லாவிட்டால் ஆண்டவனால் கூட எங்களுடைய மாணவர்களைக் காப்பாற்றமுடியாது - என்றார். (4)

## 7 நோயாளர் காவு வண்டிகள் வடக்குக்குக் கிடைக்கவுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை18

வடக்கு மாகாணத்தில் 1990 இலக்க இந்திய அரசின் உதவியின் கீழான அவசர நோயாளர் சேவைக்காக 7 நோயாளர் காவு வண்டிகள் வடக்கு மாகாணத்துக்குக் கிடைக்கவுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களப்பணிப்பாளர்மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். இந்திய அரசின் நிதி உதவியில் எதிர்வரும் 21ஆம் திகதி வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கவுள்ளஅவசர நோயாளர்காவுவண்டிச் சேவைக்காகத் தற்போது 20நோயாளார் காவுவண்டிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இவை தற்போது பொலிஸாரின் கண்காணிப்பின் கீழேயே செயற்படும். இவற்றுக்கானசாரதிகள், உதவியாளர்கள், மருத்துவ உதவியாளர்கள் என 82பேர் வடக்கு மாகாணத்தில் இருந்து தேரிவுசெய்யப்பட்டுஇந்தியஅரசால்பயிற்றுவிக்கப்பட்டு சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். குறித்த சேவையின் ஆரம்பநிகழ்வுக்குஇந்தியத் தூதர், இலங்கையின்தலைமைஅமைச்சர் ஆகியோர் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர். குறித்த நோயாளர் வண்டிச் சேவை இலங்கையில் ஏற்கனவே இரு மாகாணங்களில்சேவையில் உள்ளது. மூன்றாவது மாகாணமாக வடக்குக்குக் கிடைத்துள்ளது. இந்த 20 நோயாளர் காவு வண்டிகளில் 7 வண்டிகள்யாழ்ப்பாண மாவட்டத்துக்கும், 4 வண்டிகள் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய 3 மாவட்டங்களுக்கும் தலா 3வண்டிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளன.

வீதி விபத்து மற்றும் வெளியில்ஏற்படும்அவசரப் பணிகளுக்கான நோயாளர்சேவைகளையும், மருத்துவமனையில் இருந்து ஏனைய மருத்துவமனைக்கான நோயாளர் காவுவண்டிச் சேவையை இதுவரை காலமும் மருத்துவமனைகளே மேற்கொண்டன. இந்தநிலையில் வடக்கு மாகாணத்தில் அதிக நோயாளர் காவு வண்டிப் பற்றாக்குறை காணப்பட்டது - என்றார். (4-105)

## கைத்துப்பாக்கி பெற்றதற்கான ஆதாரங்கள் அடுத்த அமர்வில்

*உறுப்பினர் அஸ்மின் கூறுகிறார்*

யாழ்ப்பாணம், ஜூலை18

வடக்கு மாகாண சபையின் மகளிர் விவகார அமைச்சர்அனந்திசசிதரன்கைத்துப்பாக்கிபெற்றுக் கொண்டமைக்கான ஆவணங்கள் அனைத்தும் உள்ளன. அவற்றை அடுத்த மாகாண சபை அமர்வில்பகிரங்கப்படுத்துவேன்என்றுவடக்குமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார். வடக்கு மாகாணசபையின்நேற்றுமுன்தினம்இடம்பெற்ற அமர்வில், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று அனந்தி கைத்துப்பாக்கி வைத்திருக்கிறார் என்று அஸ்மின்கூறியிருந்தார். இதனைமறுத்துஅனந்தி ஊடகங்களுக்குச்செய்திக்குக்குறிப்புஅனுப்பியிருந்தார். இது தொடர்பில் அஸ்மினுடன் தொடர்பு கொண்டுகேட்டபோதேஅவர்மேலும்தெரிவித்ததாவது:

உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக்கூறி பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அனந்தி கைத்துப்பாக்கி பெற்றுள்ளார். இதனை மறைக்க அவர் ஊடகங்களுக்குப்பொய்யானதகவல்களைவழங்கிவருகின்றார். அவர் கைத்துப்பாக்கி பெற்றதற்கான சகல ஆவணங்களும்என்னிடம்உள்ளன. அவற்றைவடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் பகிரங்கப்படுத்துவேன் -என்றார். (4)

*பன்னாடுகள் உதவாது*

# போராடாவிட்டால் விடிவு கிடையாது!

*கட்சியாகப் பிரிந்து நிற்கும்வரை எதுவும் நடக்காது என்கிறார் சிவநேசன்*

**வவுனியா, ஜூலை 18**

**விடுதலைப் போராட்டத்தை நாம் கையில் எடுக்காமல் விடுவோமாக இருந்தால், எத்தனை வருடங்கள் சென்றாலும் எமது மக்களுக்கு விடிவு கிடைக்கப்போவதில்லை. அதனை அனைவரும் சிந்திக்கவேண்டும். நாம் கட்சியாகப் பிரிந்து நிற்கும்வரை இது சாத்தியப்படப்போவதில்லை. இங்கேதான் ஒற்றுமையின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்தார்.**



வவுனியாவில்நேற்றுமுன்தினம்நடைபெற்ற வீரமக்கள் தின நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பன்னாடுகள் எம்மைக் காப்பாற்றும், அதன் அழுத்தம் மூலமாகத் தமிழர்கள் ஒரு தீர்வைப் பெற்றுவிடலாம் என்ற நப்பாசை எங்களிடம் இருக்கிறது. இதை அடிக்கடி கூறியும் வருகிறோம். ஆனால் இது சாத்தியப்படாது. நாம்தமிழ்மக்களுடைய விடு தலைக்காகத்தான் போராடிக்கொண்டிருந்தோமா? ஆயுதங்களை ஏந்தும்போது தெளிவான சிந்தனையுடன்தான் ஏந்தினோமா? என்ற கேள்வி எழுகிறது.

எமதுஅகிம்சைப்போராட்டம்பேரினவாத அரசால் ஆயுதப் போராட்டமாக மாற்றப்பட்டது. இதுவரை உயிரிழந்தபொதுமக்கள், போராளிகளை வருடத்துக்கு ஒரு முறை நினைவேந்தினாலும்கூட எமது போராட்டங்களை ஒருநிலைப்படுத்த வேண்டியகட்டாயம்எமக்குஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொருஇயக்கங்களும்தமது நினைவு தினங்களை வெவ்வேறு நாள்களிலே நினைவுகூர்ந்து வருகின்றது.

எம்மைப் பொறுத்தவரை அனைத்து நிகழ்வுகளும்ஒருங்கமைக்கப்பட்டஒரு ஈழவிடுதலைப்போராட்டமாகமாற்றப்பட வேண்டியதேவைஎங்களிடம்இருக்கிறது. எங்களுடைய வரலாற்றை எடுத்துப் பார்க்கின்றபோது அழிக்கப்பட்ட, தோல்வியடைந்த இனமாகப்பன்னாடுகளால் பார்க்கப்படுகின்ற ஒரு நிலமை இருக்கிறது. ஆனால் இந்தப் போராட்டமானது தோல்வியுடன் முடிந்து போகின்ற ஒன்றா? இந்தத் தோல்விதான் தமிழ் மக்களின்இறுதிமுடிவாஎன்பதைத்தமிழர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட சகல தரப்பினரும் ஒன்றாகக்கூடி, பின்னோக்கிப்பார்க்கவேண்டியகாலகட்டம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. முள்ளிவாய்க்காலிலே இந்தப் போராட்டம் நிறைவு பெற்றதாகக் கூறுகின்றார்கள். அது அங்கு முடக்கப்பட்டது என்பதை நாம்மறுப்பதற்கில்லை. ஆனால்இந்தப் போராட்டம்ஆரம்பித்தகாலத்தில்இருந்து அதன் வரலாற்றை எடுத்துப் பார்ப்போமாக இருந்தால் எங்களுடைய எதிரியுடன்போராடி உயிர்நீத்த உயிர்களைவிடச் சகோதரப் படுகொலை மூலமாக உயிர்நீத்ததோழர்களின்தொகைதான் அதிகம் என்பதைச் சகலரும் உணர்ந்திருக்கிறார்கள்.

எனவே நாம் தமிழ் மக்களின் விடுதலைக்காகத்தான் போராடினோமா என்கின்ற ஒரு கேள்வி இன்று எழுகிறது. அதுமட்டுமல்லாமல்நாம்தமிழ்மக்களுடைய விடுதலைக்காகத்தான் போராடிக்கொண்டிருந்தோமா? ஆயுதங்களை ஏந்தும்போது தெளிவான சிந்தனை யுடன்தான் ஏந்தினோமா? என்கின்ற கேள்வி எழுகிறது. நாம் இவற்றை எல்லாம் சிந்திக்கவேண்டிய காலகட்டம் உருவாகியுள்ளது. அகிம்சையைவிரும்பினோம்விடுதலைகிட்டவில்லை. ஆயுதத்தை எடுத்தோம் அப்பொழுதும் பயனில்லை. அப்படி என்றால் எங்களுடைய அடுத்த கட்டம் என்னவென்று சகலரும் சிந்திக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை நாங்கள் மட்டுமா சிந்திப்பது? அனைத்துத்தமிழ்த்தரப்பும் சிந்திக்கவேண்டிய கட்டாயம் இருக்கிறது. இங்கு உயிர்நீத்த போராளிகளின் எண்ணங்களைநிறைவேற்றும்வகையில்தான் நாம் நடந்து கொள்கிறோமா என்றும் சிந்திக்கவேண்டும்.

இதுபேரினவாதிகளின்நாடுஅன்றி, சிறுபான்மையின மக்களைப் பெரும்பான்மையாகக்கொண்டமைந்தநாடு. கடந்த தேர்தல்களில் அதனைப் பார்க்க முடிந்தது. போராட்டம்ஆரம்பிக்கப்பட்டபோது தமிழ் மக்களிடம் இருந்து மலையக மக்கள் பிரிக்கப்பட்டார்கள். இணைந்து போராடியமுஸ்லிம்மக்கள்பேரினவாத சக்திகளால் திட்டமிட்டுப் பிரிக்கப்பட்டார்கள். பிரிவினையைஆயுதமாகவைத்தே தனது அடக்குமுறைகளை அரசுகள் செய்து வந்துள்ளன. சாதி ரீதியான, இன ரீதியானபிளவுகளைஇன்றும்அவர்கள் ஏற்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புமக்களின் விடுதலையைப் பெற்றுத்தரும் என்கிற நம்பிக்கை இன்று மக்களிடமிருந்து உடைந்துபோவதற்குக்காரணம், அவர்களும்ஒற்றுமையாகஇல்லைஎன்பதே. தனிமனிதனின் விருப்பு வெறுப்புகளுக்காகத்தான் இங்கேஅரசியல்நடத்தப்படுகின்றது. அப்படியானால் இந்த இனத்தினுடைய எதிர்காலம் என்ன?

எனவேஎங்களுக்குள்இருக்கும்பேதங்கள் முரண்பாடுகள் அனைத்தும் உடனேயேகளையப்படவேண்டும். ஆயுத பலம் இன்று இல்லாமல் போயுள்ளதால் ஊருக்கு ஒரு சண்டியன், கிராமத்துக்கு ஒரு சண்டியன் என்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. இன்று அனைத்தையும்விட்டு அரசிடம்சென்று அமைச்சுப் பதவிகளைப் பெற்று அபிவிருத்தியைச் செய்யலாமே என்று பலர் பேசி வருகிறார்கள். அப்படி என்றால் இங்கே உயிர்நீத்த தோழர்கள் எதற்காக மரணித்தார்கள்? துப்பாக்கியை ஏன் ஏந்தினார்கள்என்பதைநாம்சற்றுஉணர்ந்து கொள்ளவேண்டும். வெளிநாடுகளிலே இருக்கும் இளைஞர்கள் அனைவரும் விடுதலைவேட்கையுடன்இருக்கிறார்கள். யூதர்களைஅழித்துஒழித்தார்கள், அவர்கள்அழிந்தாபோயினர்? அவர்கள்இன்று ஒருநாட்டையேஉருவாக்கி இருக்கிறார்கள். தமிழர்கள் ஒன்றும் பலவீனமானவர்கள் அல்ல யூதர்களுக்கு இணையானவர்களும் அல்ல அதற்கும் மேலானவர்கள். இனிமேல்நாம்போராடவேண்டியது அறிவியல் போராட்டமாகத்தான் இருக்கவேண்டும். அதனை எம் கரங்களிலே எடுக்கவேண்டும். ஒவ்வொரு தமிழர்களும் தமது மூளைப் பலத்தை இனத்துக்காகப்பயன்படுத்தவேண்டும். நாம் புத்திசாலிகளாக இருந்தமையால் தான் யாழ்ப்பாண நூலகத்தைமுதலில் எரித்தார்கள். எனவே நாம் எமது அறிவைப் பயன்படுத்துவதன் மூல மாகத் தான்எமக்கானவிடுதலையைப்பெற்றுவிடமுடியும் -என்றார். (4,110)

# என்னிடம் துப்பாக்கி இல்லை: கூறுகிறார் அனந்தி

யாழ்ப்பாணம், ஜூலை18

என்னிடம் எந்தவகையான துப்பாக்கியும்இல்லை. மக்கள்என்மீது கொண்டிருக்கின்ற அன்பை ஜீரணிக்க முடியாத அரசியல் காழ்ப்புணர்ச்சியாளர்களே பொய்ப் பரப்புரைசெய்கின்றனர்என்று வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் குறிப்பிட்டார்.

அனந்தி பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் கைத்துப்பாக்கி வைத்திருக்கிறார் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் சபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றஅமர்வில்குற்றஞ்சாட்டியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில்அனந்திஅனுப்பியசெய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நான் அரசியலில் பிரவேசித்த காலம்தொடக்கம்எனதுபாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதை உலகம் அறியும். எனக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு உரிய தரப்பிடம் கோரிக்கைகளை முன்வைத்திருந்தேன். ஆனால் அந்தப்பாதுகாப்பைநான்முழுமையாகநம்பியிருக்கவில்லை. எனது கைகளும், எனது உறவுகளும் தான் எனக்குப்பாதுகாப்பு.

விடுதலைக்கான பயணத்தில் பெண்களும் ஆண்களுக்கு நிகராகவே உரமூட்டப்பட்டுள்ளனர். அந்தஅடிப்படையிலிருந்துமக்கள் சேவைக்காக அரசியலுக்குள் பிரவேசித்தஒருவராகவேநான்இருக்கின்றேன். நாங்கள் உயிரைத் துச்சமெனக்கருதிமுடிவெடுத்தவர்கள். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகஅரசியலுக்குவரவில்லை. மக்களால்தெரிவுசெய்யப்பட்டஒருவருக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பை வழங்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பு. தனிப்பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சியால் எனது செயற்பாடுகளை முடக்குவதற்காகப் பெண் என்று கூடப் பாராது சிலர் எத்தகைய நிலைக்கும் செல்லக்கூடியவர்களாகஇருக்கின்றார்கள். இத்தகைய அச்சுறுத்தல்களால்தான் நான் பாதுகாப்பைஅதிகரிக்குமாறுகோர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். பாதுகாப்பு அமைச்சிடம்கைத்துப்பாக்கியைப் பெற்றுக்கொண்டு வடக்கில் மேன்மைத் தன்மையைக் காட்ட வேண்டிய அவசியம் எனக்குக்கிடையாது. அவ்வாறான துப்பாக்கி எதனையும்நான் இதுவரையில்பெற்றுக்கொள்ளவில்லை. நான் துப்பாக்கியைப் பெற்றுக் கொண்டதாகக் கூறுபவர்கள் அதனை மக்கள் முன்னிலையில் நிரூபிக்கவேண்டும். தன்இனமக்களால் நிராகரிக்கப்பட்டு, பின்கதவால் அரசியலுக்குள் பிரவேசித்து உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்துவிட்டு,பாதிக்கப்பட்டவர்களின் அடையாளமாக மக்கள் ஆணை பெற்றஎன்போன்றவர்களைவிமர்சித்து தமிழினத்தைக் கூறுபோட நினைப்பவர்களை எம் மக்கள் அடையாளம்காணவேண்டும்.

இவர்கள்தமிழ்த்தேசியவாதிகளாக நடித்துக்கொண்டு அநியாய சக்திகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றாற்போல செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறானவர்களின் போலிப்பரப்புரைகளுக்குக்காலம் பதிலளிக்கும் என்றுள்ளது. (4,8)

# வெடி வைத்து பிடித்த 600 கிலோ மீன்கள் மீட்பு

## மாத்தளனிலிருந்து சந்தேகநபர்கள் ஓட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 18
தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளில் ஒன்றான, வெடிபொருள்பயன்படுத்தி பிடிக்கப்பட்டதாகக்கூறப்படும் 600 கிலோ மீன்கள் நேற்று முன்தினம் பறிமுல் செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் சந்தேகநபர்கள் தப்பியோடிவிட்டனர் என்று மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்றுகொண்டிருந்தபோது எங்களைக்கண்டவுடன் சந்தேகநபர்கள் தப்பியோடிவிட்டனர்.

கைப்பற்றப்பட்ட மீன்கள் முல்லைத்தீவு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, அந்தவாடியின் உரிமையாளர் என்றுதெரிவித்துஒருவர்திணைக்களத்துடன் தொடர்புகொண்டு, வாடி தன்னுடையது என்றும் மீன்கள் தன்னுடையது அல்ல என்றும் கூறியுள்ளார் என்று திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர். (4,ரி3)

# வடக்கு உட்பட நாடுமுழுதும் உள்ள 330 செயலகங்களுக்கும் தலா 200 மில்லியன் ரூபா

## 12 வேலைத் திட்டங்களுக்கு ரணில் சிறப்புத் திட்டம்

**யாழ்ப்பாணம், ஜூலை 18**
**வடக்கு உட்பட இலங்கையிலுள்ள 330 பிரதேச செயலகங்களின் அபிவிருத்திக்கும் தலா 200 மில்லியன் ரூபா வீதம் 66 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான சிறப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுகிறது. தலைமை அமைச்சர் பணியகம் இது தொடர்பில் சகல மாவட்டச் செயலகங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

இந்தநிதியைப்பிரதேசசெயலகங்கள் அந்தப்பகுதி அமைச்சர், பிரதிஅமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்களின்ஏற்புடன்அபிவிருத்தி திட்டங்களைமுன்கொண்டு செல்லமுடியும்என்றும்அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறுகிடைக்கும். 200 மில்லியனில்12வகையான திட்டங்களே மேற்கொள்ள முடியும். ஒவ்வொரு வகையான திட்டங்களிலும் உச்சபட்சமாகப் பயன்படுத்தக்கூடிய நிதி விவரம் என்பன தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தநிதிதொடர்பில்கிடைக்கும் நிதியில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களைத் தயாரிப்பதற்கான முன்னோடி வேலைகளில் மாவட்டச் செயலகங்கள் பிரதேச செயலகங்கள் என்பன மிகவேகமாகச் செயற்படுகின்றனஎன்றுதெரிவிக்கப்பட்டது.

அதன்படி, கிராமத்திலுள்ள குளங்கள், அணைக்கட்டுக்கள் சீரமைப்பு அதிகளவாக 3.5 மில்லியன், வீதிகளுக்குத் தார் அல்லது கிரவல் அல்லதுகொங்கிறீற்அமைத்தல் - 2.5 மில்லியன்ரூபா, பாடசாலைகளுக்கான மலசலகூடங்களைத் திருத்துதல் - ஒரு லட்சம், புதிதாக அமைத்தல்ஒருமில்லியன், பாடசாலை விளையாட்டு மைதான சீரமைப்பு - ஒரு மில்லியன், வாராந்த சந்தைச் சீரமைப்பு - ஒரு மில்லியன், சிறுவர் பூங்கா புதிதாக அமைத்தல் 10 மில்லியன், மின்சாரவசதி - 30 ஆயிரம், கோவில்கள் சீரமைப்பு-5லட்சம், சுற்றுலா, தொல்பொருள் அபிவிருத்தி -6லட்சம், வீடுகள்திருத்தம் - 3 லட்சம் வழங்கப்படும்.

இவைதவிர, காணிஉரிமப்பத்திர விநியோகச் செலவு மற்றும்சிறுதொழிற்சாலைகள் ஆரம்பித்தலுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,105)

# சைவ, இளஞ் சைவப் புலவர் பரீட்சைகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 18
இந்த வருடத்துக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன என அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் இதனை நடத்தியிருந்தது.

**பரீட்சையில் சித்திபெற்றோர் விவரம் வருமாறு,**

**இளஞ்சைப்புலவர் பரீட்சை**
அன்னலட்சுமிஇராமர்(கண்டி), ரோபிகா சண்முகலிங்கம் (முழங்காவில்), கோகிலா சிதம்பரப்பிள்ளை (கோவிற்குளம்), சுதேந்தினி கணபதிப்பிள்ளை (வெற்றிலைக்கேணி), சுசிலாதேவிகிருஸ்ணராஜன் (சூசைப்பிள்ளையார்குளம்), மகேஸ்வரிவிஜயரத்தினம் (நுணாவில்), புவனராணி இரகுநாதன் (அரியாலை), இந்திரராசாமோகன்(உடுவில்), செல்லத்துரை பிருந்தாபரன் (திருநெல்வேலி), கலாமோகன் பிரகான் (வாழ்வகம் சுன்னாகம்), லோஜிதா மகேந்திரன் (மீசாலை), பகீரதன் சுகிர்தன் (திருக்கோவில்), சமந்திசந்திரசேகரம்(கொழும்பு13), ஆறுமுகம் சசிநாத் (கனகராயன்குளம்), சாமித்தம்பி திருநாவுக்கரசு (கோட்டைக் கல்லாறு).

# திருகோணமலை மீனவர் 24 பேர் முல்லையில் கைது

## 30ஆம் திகதிவரை மறியல்

முல்லைத்தீவு, ஜூலை 18
தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளில் முல்லைத்தீவுக்கடலில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் 24மீனவர்கள் 5படகுகளுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு புலிபாய்ந்த கல் கடலில் வைத்துக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினர் மீனவர்களைக் கைதுசெய்தனர்.

குறித்தகடற்பகுதியில்சட்டவிரோதக்கடற்றொழில்நடவடிக்கைஇடம்பெறுவதாகக்கிடைத்த தகவலின்படி அங்கு சென்று அவர்களைக் கைது செய்ததாகத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

அவர்களது படகுகளில், தடை செய்யப்பட்ட தொழில்முறைகளுக்கான சுருக்குவலை, தூண்டில்கள், ஒளிபாய்ச்சி மீன்பிடிக்கும் கருவிகள் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீனவர்கள் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 30 ஆம் தகிதி வரை மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (4,ரி3)

# வாடிகள் அமைத்துத் தங்கியிருக்க காரணம் இருப்பின் சமர்ப்பிக்கவும்

## வடமராட்சி கிழக்கில் அத்துமீறியோருக்குக் கிளிநொச்சி நீதிமன்று நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 18
வடமராட்சிகிழக்கில்அரசநிலத்தில் வாடி அமைத்து தொழில் புரிபவர்கள், குறித்த பகுதியில் அத்துமீறித் தங்கியிருப்பதற்கான நியாயமான காரணம் இருப்பின் அதனை ஓகஸ்ட் 8ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கிளிநொச்சி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

வடமராட்சி கிழக்கில் கடலட்டைத் தொழிலில் ஈடுபடும் பிற மாவட்ட மீனவர்கள் அந்தப் பிரதேசத்தில் உள்ள அரச நிலத்தை ஆக்கிரமித்து அனுமதி இன்றி வாடி அமைத்துத் தொழில் புரிகின்றனர். அவர்களுக்குஎதிராக1979ஆம்ஆண்டின் 7ஆம் இலக்க அரச காணியின் ஆட்சியை மீளப்பெறும் சட்டத்தின்கீழ் மருதங்கேணி பிரதேசசெயலாளர்கடந்தஜூன் 24ஆம்திகதிவழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

வழக்கு கடந்த 10ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வாடி உரிமையாளர்கள் தலா 3 சரீரப் பிணைகளிலும் ஒருலட்சம்ரூபாரொக்கப்பணம் பிணையிலும் செல்ல மன்று அனுமதித்து வழக்கை நேற்று வரை ஒத்திவைத்திருந்தது.

நேற்றுநீதிபதி மா. கணேசராசா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 9 வாடி உரிமையாளர்களில்ஒருவர் அந்தப்பகுதியிலிருந்துவெளியேறுவ்தாகத்தெரிவித்தார். எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் வெளியேற வேண்டும் என்று அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஏனைய8வாடிஉரிமையாளர்களும்அந்தப்பகுதியில்தங்கியிருப்பதற்கானநியாயபூர்வக் காரணம் ஏதும் இருப்பின் அதைச் சமர்ப்பிப்பதற்காக எதிர்வரும் ஓகஸ்ட் 9ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கி வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. அங்கு வாடி அமைத்துள்ளவர்கள் பிறமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களைவெளியேற்றுமாறு பிரதேசத்தைச்சேர்ந்த மீனவர்கள் சில வாரங்களுக்கு முன்னர் போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (4,105)

# 92 தடிகளை வெட்டினாரென கைதானவருக்கு விளக்கமறியல்

சட்டவிரோதமாகத் தடிகளை வெட்டியகுற்றச்சாட்டில்ஒருவரைக் கைது செய் துள்ளதாக முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரணைமாதா நகர்ப் பகுதியில் காட்டுத்தடிகளை வெட்டினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடம் இருந்து 92 தடிகள் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவர் விசாரணையின் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்ப டுத்தப்பட்டார். அவரைவிளக்கமறியலில்வைக்குமாறுநீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (4,6)

# கணித அடைவு மட்டத்தை அதிகரிக்க விளையாட்டின் மூலமாகக் கணிதம்

## தென்மராட்சியில் நேற்று ஆரம்பிப்பு

சாவகச்சேரி, ஜூலை 18
ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் வகையில் விளையாட்டின் மூலமாகக் கணிதம் என்னும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்திருமதிஅ. வேதநாயகம்ஆரம்பித்து, பாடசாலைகளில்தரம்11இல் கற்கும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அது தொடர்பான விளக்கங்களைப் பாட ஆசிரியருடன் இணைந்துமேற்கொண்டுவருகிறார்.

கணித பாடத்திட்டத்தில் உள்ள அனைத்துப்பாடஅலகுகளையும் படங்களாகப்பதிவுசெய்துஇவற்றை இணைப்பதன் மூலமாக விடையைக் காணமுடியும் என்பது இந்தச் செயற்றிட்டத்தின் கருத்து.

சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைக் குழுக்களாக அமைத்து அவர்களிடம் பாடரீதியான படங்களைக் கையளித்து அவற்றைச் சேர்ப்பதன் மூலமாக கேள்விக்கான விடைகளைக்கண்டறியமுடியும் என்பது தொடர்பான விளக்கங்களைச் செயன்முறை மூலமாகக் காண்பிக்கப்படுகிறது.

பாட அலகின் ஆரம்பம் தொடங்கி எந்தெந்த முறைகளின் ஊடாக விடையைக்கண்டுபிடிக்கமுடியும் என்பதுவழங்கப்படும்படங்களில் காணப்படுகின்றன.

குழுவாக ஒன்றிணைந்து இந்தப் படங்களை ஒன்றிணைக்கும் போதுசரியானவிடைகிடைக்கும். இந்தச் செயற்றிட்டத்தால் கணித பாடத்தில் புரியாத பல விடயங்களைப்புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்ததென மாணவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் செயற்றிட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தின் ஆரம்ப நிகழ்வைச் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில், கல்லூரி அதிபர் திருமதி லலிதமலர் முகுந்தன் ஆரம்பித்துவைத்தார். (4-9)



# இராணுவ சுழியோடிகள் பயிற்சி நிறைவு நிகழ்வு

## இராணுவத் தளபதி பங்கேற்றார்

முல்லைத்தீவு, ஜூலை 18
முல்லைத்தீவு நாயாறு பிரதேசத்திலுள்ள இராணுவ சுழியோடிகள் பயிற்சிபாடசாலையில் 38 இராணுவசுழியோடிகள்பயிற்சியைநிறைவு செய்துள்ளனர். அவர்களது பயிற்சி நிறைவுநிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ள இலங்கை இராணுவத்தளபதிலெப்டினன்ட்ஜெனரல்மகேஷ்சேனநாயக்க உலங்கு வானூர்தியில்கேப்பாபிலவுக்குச்சென்றார். 90 நாள்கள்கொண்டபயிற்சியில் படையினருக்குச் சுழியோடும் தொழில்நுட்பங்கள் மற்றும் தண்ணீரில் சாகசங்கள் புரிவது தொடர்பான சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. பயிற்சியின்போது திறம்படச் செயற்பட்ட இராணுவ வீரர்களுக்கு இராணுவத்தளபதிவெற்றிப்பதக்கங்களைவழங்கிக்கௌரவித்தார். அதன்பின்னர்உரையாற்றினார்என்றுதெரிவிக்கப்பட்டது. (4,ரி3)

# தூக்குத் தண்டனைக்கு ஐரோப்பா கடும் எதிர்ப்பு

**கொழும்பு, ஜூலை 18**

**தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர எடுத்துள்ள முடிவு குறித்து, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்கள், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம், தமது அதிருப்தியை வெளியிடவுள்ளனர்.**

உலகளாவிய ரீதியாகத் தூக்குத் தண்டனைக்கு எதிராகக் கடைப்பிடிக்கும் பொதுவான நிலைப்பாட்டுக்கு அமைய, கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதரகங்கள் இந்த அதிருப்தியை வெளிப்படுத்தவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எங்கெல்லாம், தூக்குத்தண்டனை நடைமுறைப்படுத்தப்பட்டாலும், அதனை நிறுத்துமாறு அரசைக் கோருவோம்.

உலகளாவிய ரீதியாகத் தூக்குத் தண்டனைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை வாக்களித்தது.

இலங்கை ஒரு ஐரோப்பிய நாடாக இருந்தால், அது ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினராக முடியாது. இது ஒன்றும் புதிதல்ல. தூக்குத்தண்டனையை ஒழிக்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியமும், அதன் உறுப்பு நாடுகளும், உலகம் முழுவதும் பரப்புரை செய்து வருகின்றன.

இந்தவிடயத்தை மிகவிரைவில், இலங்கை அரசிடம், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதரகங்கள், கொண்டுசெல்லும். என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறைச்சாலைக்குள் இருந்து கொண்டே, போதைப்பொருள் வணிகத்தில் சிலர் ஈடுபடுவது கண்டறியப்பட்டதை அடுத்து, போதைப்பொருள் குற்றங்களுக்காகத் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டவர்களுக்குத் தண்டனையை நிறைவேற்ற இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

போதைப்பொருள் குற்றங்களுக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 18 பேரின் விவரங்கள், கடந்த வெள்ளிக்கிழமை சிறைச்சாலைத் திணைக்களத்தால் நீதியமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவர்களைத் தூக்கிலிடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வரும் போதிலும், இவர்களில் பலர் தமது தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடுசெய்துள்ளதால், தண்டனையை நிறைவேற்ற முடியாத நிலை இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வேலெசுதா எனப்படும், விதானபத்தரனகு சமந்த குமார, மற்றும் சூசை எனப்படும், தர்மராஜா சுதேஸ் ஆகியோரே சிறைக்குள் இருந்து போதைப் பொருள் வணிகத்தில் ஈடுபடுவதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எனினும், இவர்கள் இருவருமே தூக்குத் தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர். இதனால் இவர்களை உடனடியாகத் தூக்கிலிட முடியாது.

இதனிடையே தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட ஆயிரத்து 240 பேர் இலங்கையின் பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 874 பேர் தமது தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி2)



மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் திருகோணமலை மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக மக்கள் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உயர்த்திய எரிபொருள் விலையை உடனடியாக அரசு குறைக்கும்படி கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ரி2,40)




## மத்தளவை இந்தியாவுக்கு வழங்குவதால் பேராபத்து

*சாடுகிறது தேசிய சுதந்திர முன்னணி*

கொழும்பு, ஜூலை18

மத்தள வானூர்தித் தளத்தை இந்தியாவுக்கு வழங்க எடுத்துள்ள தீர்மானம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தைவிட அபாயமானதாகும். இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

அரசுமத்தளவானூர்தித் தளத்தை இந்தியாவுக்கு வழங்க எடுத்திருக்கும் தீர்மானம் தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவிடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


தேசியமூலோபாயத்தை அடிப்படையாகக் கொண்டே கடந்த அரசினால் மத்தள வானூர்தித் தளம் அமைக்கப்பட்டது.

அந்தளவு முக்கியத்துவமளித்து அமைக்கப்பட்ட இந்த வானூர்தித் தளத்தைச், சாதாரண வானூர்தித்தளமாகவே அரசு தரம் குறைவாகக் கருதி வந்தது. தற்போது மத்தள வானூர்தித் தளத்தை இந்தியாவுக்கு வழங்கத்திட்டமிட்டுள்ளது.

அரசுமத்தளவானூர்தித் தளத்தைக் குறைத்து மதிப்பீடுசெய்து இந்தியாவுக்குவழங்கமுதன்மைக் காரணம் அதன்பெயர்ப் பலகையில் பொறிக்கப்பட்டிருக்கும் பெயர் மீதானகோபமேயாகும். அதனால்தான் வானூர்தித் தளத்தின் களஞ்சியசாலையில் அரசு நெல்லைக் கொண்டுவந்து சேகரித்தது. இவர்களின் இந்த செயல்பாட்டால் வானூர்தித் தளத்துக்கான பன்னாட்டு தரச் சான்றிதழை மீண்டும் பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. நாட்டின்தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய அரசின் நடவடிக்கையானது மிகப்பெரியகாட்டிக் கொடுப்பாகும்.

அரசின் இந்தச் செயலானது இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் மூலம் நாட்டைக் காட்டிக்கொடுத்ததையும்விடப்பெரும் ஆபத்தானதாகும்.

அதனால்மத்தளவிமான நிலையத்தை இந்தியாவுக்கு வழங்கும் நாள் வரும்வரைக்கும் பார்த்துக்கொண்டிருக்காமல் இதனைத்தடுத்துநிறுத்த அனைத்து மக்களும் அணிதிரளவேண்டும்- என்றார். (ரி2,61)



## மாணிக்க கங்கையில் முதலை; விழிப்புடன் இருக்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை18

கதிர்காமம் மாணிக்க கங்கையில் முதலை ஒன்றை வனவிலங்கு அதிகாரிகள் நேற்றுக் காலை பிடித்துள்ளனர்.

ஆறு அடிநிளம் கொண்ட இந்த முதலை, யாலை வனப் பகுதியில் விடபட்டுள்ளதாகக் கதிர்காமம் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்

பருவகாலம்ஆரம்பித்துள்ளதால்மாணிக்ககங்கையில் நீராடும் மக்கள் மிக அவதானமாக நீராடுமாறு வனவிலங்கு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் மக்கள் சென்று நீராட வேண்டாமென்றும் கேட்டு கொண்டுள்ளனர். (ரி2)

# பரீட்சைக்கு முன்பதாகவே வெளியாகும் விடயங்கள்

கொழும்பு, ஜூலை18

வினாத்தாளில் உள்ள விடயங்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியிடப்படுவதாக முன்னாள் அரசதலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்ககுமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிக்கும் சிலருக்குத் தனியார் வகுப்பு ஆசிரியர்களுடன் இருக்கும் தொடர்பே இதற்குப் பிரதான காரணம்.

உயர்தரப்பரீட்சையில் சிறப்புச்சித்திபெற்ற மாணவர்களின் கல்வி அறிவு மிகவும் கீழ் மட்டத்தில் இருப்பதாகப் பல்கலைக்கழகங்களின் ஊடாகத் தெரியவந்துள்ளது. என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



நிட்டம்புவ பொது நூலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (ரி2)

## இலங்கையிடம் விளக்கம் கோருகிறது ரஷ்ய அரசு

கொழும்பு, ஜூலை18

நாமல் ராஜபக்சவின் சிறப்புப் பரப்புரைப் பிரிவுக்கு ரஷ்யாநிதி அளித்தது என்று நிதிஅமைச்சர் மங்களசமரவீர அண்மையில் தெரிவித்த கருத்துத் தொடர்பில் இலங்கை அரசிடம் ரஷ்யா விளக்கம் கோரியுள்ளது.

கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகப்பேச்சாளர் ஒருவர் இந்தத்தகவலை வெளியிட்டுள்ளார். மங்கள சமரவீரவின் கருத்தை நாங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதுகுறித்து இலங்கை அயலுறவு அமைச்சிடம் விளக்கம் கோரியிருக்கிறோம். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ச ரஷ்யாவிடமிருந்து உதவிகளைப்பெற்றார் என்று அண்மையில் மாத்தறையில் நடந்த ஒரு கூட்டத்தில் மங்களசமரவீர குற்றம்சாட்டியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே இலங்கை அரசிடம் ரஷ்யா விளக்கம் கோரியுள்ளது. (ரி2)

## நாடு கடத்தப்பட்ட 18 பேர் இலங்கை வந்தடைவு

கொழும்பு, ஜூலை18

ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதமாகக்குடியேறிய 18 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டநிலையில், நேற்றுக் கட்டுநாயக்க வானூர்தித் தளத்தை வந்தடைந்தனர்.

பேர்த் நகரில் இருந்து நாடு கடத்தப்பட்ட இவர்களே, நேற்றுக்காலை கட்டுநாயக்க வானூர்தித் தளத்தைவந்தடைந்ததனர் 18 அகதிகளுக்கும், பாதுகாப்பாகதலா இருவர் வீதம், 36 ஆஸ்திரேலியப் பாதுகாப்பு அதிகாரிகளும், இந்த வானூர்தியில் வந்தனர்.

இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட இலங்கை அகதிகள் கட்டுநாயக்க வானூர்தித்தளத்தில்தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி2)

## மைத்திரிபால ஜோர்ஜியாவுக்கு பயணமானார்

கொழும்பு, ஜூலை18

அரசதலைவர்மைத்திரிபால சிறிசேன மூன்றுநாள் உத்தியோகபூர்வ பயணமாக ஜோர்ஜியாவுக்குப் பயணமாகியுள்ளார். திறந்த அரச பங்குடமை தலைவர்கள் சந்திப்பில் கலந்துகொள்வதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. 6ஆவது உலக வனப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு இடம்பெறும் உலகவனப்பாதுகாப்புகுழுவின் 24ஆவதுகூட்டத்தொடரில் பங்குபற்றவிருப்பதாகவும்கூறப்படுகிறது. (4)

# பாடகரை கட்டிப்பிடித்த பெண்ணுக்கு சிறை

ரியாத், ஜூலை 18

சவுதியில் இசை நிகழ்ச்சி ஒன்றில் பாடகரை கட்டிப் பிடித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து சவூதி ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில், "பாடகர் மஜித் அல் மோகன்திஸ் வெள்ளிக்கிழமை தைப் நகரில் நிகழ்ச்சி ஒன்றில் பாடிக் கொண்டிருந்தார். அப்போது மேடைக்கு திடீரென வந்த பெண் ஒருவர் மொகன்திஸ்ஸை கட்டிப் பிடித்துக் கொண்டார். உடனடியாக அங்கிருந்த பாதுகாவலர்கள் அந்தப் பெண்ணை அவரிடமிருந்து பிரித்து அழைத்து சென்றனர். அந்தப் பெண்ணை பொலிஸார் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பெண்ணுக்கு 2 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்" என்று செய்தி வெளியிட்டுள்ளன. (ம)





தாய்லாந்தில் உள்ள சுமார் 10 கிலோ மீற்றர் நீளமுடைய லுவாங் குகையில் சிறுவர் கால்பந்தாட்ட அணியொன்று சிக்கிக்கொண்டது. சுமார் 17 நாள்களுக்குப் பின்னர் சிறுவர்களும் அவர்களின் பயிற்சியாளரும் மீட்கப்பட்டனர். சிறுவர்கள் குகைக்குள் இருந்தபோது அவர்களுக்கு ஒக்சிசன் வழங்குவதற்காகச் சென்ற தாய்லாந்துக் கடற்படையைச் சேர்ந்த சமன் குனான் என்ற சிப்பாய் தனது ஒக்சிசன் தீர்ந்த நிலையில் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்கள் சமன் குனானின் உருவப்படத்தை வரைந்து அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். (ம)

# இளவரசர் சாரிக் கட்டாரில் தஞ்சம்

ரியாத், ஜூலை 18

ஐக்கிய அரபு இராச்சியத்தைச் சேர்ந்த இளவரசர் பின் அல் சாரிக், தனது உயிருக்கு ஆபத்து என்று தெரிவித்து கட்டாரில் தஞ்சமடைந்தமை வளைகுடாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



ஏற்கனவே வளைகுடா நாடுகளுக்கும் கட்டாருக்கும் இடையில் போர்ப் பதற்றம் நிலவிவரும் நிலையில் இளவரசர் பின் அல் சாரிக் கட்டாரில் தஞ்சமடைந்துள்ளமை மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இளவரசரான 31 வயதுடைய ஷேக் ரஷித் பின் அல்சாரிக், ஐக்கிய அரபு இராச்சியத்தின் மீது பரபரப்பான குற்றச்சாட்டை சுமத்தி நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகர் அபுதாபியின் ஆட்சியாளர்கள் தம்மை மிரட்டி வருகின்றனர் என்றும் உயிருக்கு ஆபத்து இருப்பதால் கட்டாரில் தஞ்சமைந்ததாகவும் அவர் தெரிவித்தார். சாரிக்கின் இந்தக் கருத்தை ஐக்கிய அரபு இராச்சியத்தின் அயலுறவுத்துறை ஏற்க மறுத்துள்ளது. ஐக்கிய அரபு இராச்சிய வரலாற்றில் முதன்முறையாக ஆட்சியாளர்கள் மீது அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் வெளிப்படையாகக் குற்றம் சுமத்துவது இதுவே முதன்முறையாகும்.

கட்டார் பயங்கரவாதத்துக்குத் துணை போகிறது என்று தெரிவித்து அதன் மீது சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், பக்ரைன், ஓமான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள நிலையில் அல் சாரிக் விவகாரம் மேலும் பரபரப்பையும் பதற்றத்தையும் உருவாக்கியுள்ளது. (ம)

# நவாஸ் செரிப் மேன்முறையீடு

இஸ்லாமபாத், ஜூலை 18

சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் செரிப், அவரது மகள் மரியம் செரிப் சார்பில் இன்று மேன்முறையீடு மனு தாக்கல் செய்யப்படுகிறது.

லண்டன் அவன்பீல்ட் குடியிருப்பு தொடர்பான ஊழல் வழக்கில் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் செரிப், 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட அவரது மகள் மரியம் நவாஸ் மற்றும் ஓராண்டு தண்டனை விதிக்கப்பட்ட மருமகன் சப்தர் ஆகியோர் ராவல்பிண்டி நகரில் உள்ள அடிடாலா சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், ஊழல் வழக்கில் பாகிஸ்தான் பொறுப்புடைமை நீதிமன்றம் விதித்த தண்டனையை எதிர்த்து சிறையில் இருக்கும் மூன்று பேரின் சார்பிலும் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்ய நவாஸ் செரிப்பின் வழக்கறிஞர்கள் தீர்மானித்தனர். முன்னதாக, நேற்றுமுன்தினம் அடிடாலா சிறக்கு சென்ற காவாஜா ஹாரிஸ் தலைமையிலான வழக்கறிஞர்கள் முறையீட்டு மனுக்களில் தங்களது கட்சிக்காரர்களின் கையொப்பங்களைப் பெற்றனர்.

தேசிய பொறுப்புடைமை நீதிமன்றம் விதித்த சிறை தண்டனையை கைவிட வேண்டும். நவாஸ் செரிப் மீதுள்ள மேலும் இரு ஊழல் வழக்குகளின் விசாரணையை அடிடாலா சிறை வளாகத்தில் நடத்த பிறப்பிக்கப்பட்ட உத்தரவை கைவிட வேண்டும். நிலுவையில் இருக்கும் மேலும் இரு ஊழல் வழக்குகளை தற்போதைய பொறுப்புடைமை நீதிமன்ற நீதிபதி முஜம்மது பஷீர் விசாரிக்க கூடாது. ஏற்கனவே, இந்த வழக்குகளின் சாதக பாதகங்கள் பற்றி அவர் வெளிப்படையாக பொதுவெளியில் விமர்சித்துள்ளதால் முஹம்மது பஷீருக்கு வேறு நீதிபதியிடம் இந்த விசாரணையை ஒப்படைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளுடன் 7 முறையீட்டு மனுக்கள் இன்று தாக்கல் செய்யப்படுகின்றன. (ம)

## மாலியில் சோகம்

# துப்பாக்கி சூட்டில் 14 பேர் உயிரிழப்பு

பமாகோ, ஜூலை 18

மாலியில் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கவுமகா நகரில் அல் குவைதா ஆதரவு ஆயுதக் குழுவொன்று நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 14 பேர் உயிரிழந்தனர்.

கடந்த 2015ஆம் ஆண்டு முதல் அந்த ஆயுதக் குழு செயற்பட்டு வருகிறது. அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி பொதுமக்களையும் ஐக்கிய நாடுகள் அமைதிப் படையையும் கொன்று குவிப்பது அந்த ஆயுதக் குழுவின் நோக்கம். அவ்வாறுதான் இந்தத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது என்கின்றன பன்னாட்டு ஊடகங்கள். (ம)





# 100 மைல் ஆழத்தில் வைரக் குவியல்கள்

வொஷிங்டன், ஜூலை 18

பூமிக்கு அடியில் சுமார் 100 மைல் ஆழத்தில் பல மில்லியன் டொலர்கள் பெறுமதியுடைய வைரக் குவியல்கள் உள்ளன என்று அமெரிக்க ஆய்வாளர்கள் குறிப்பிட்டனர்.

மலைகள், பாறைகள் போன்று பல லட்சம் தொன் எடையுள்ள வகையில் இந்த வைரக் குவியல்கள் உள்ளன. ஆனால் அவற்றை துளையிட்டோ வெட்டியெடுக்கவோ முடியாது. அது மிகமிகக் கடுமையான முயற்சி என்று ஆய்வாளர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம)

# அமெரிக்காவின் முட்டாள்தனத்தால் ரஷ்யாவுடனான உறவு குலைந்தது

## புடினுடனான சந்திப்பின்போது இப்படித் தெரிவித்தார் ட்ரம்ப்

ஹெல்சின்கி, ஜூலை 18
"அமெரிக்காவில் இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் செய்த முட்டாள் தனத்தாலேயே ரஷ்யாவுடனான உறவு சீர்குலைந்தது" என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் குற்றம்சாட்டினார்.
ரஷ்யாவுடனான உறவு சீர்குலைவதற்கு தனது நாடுதான் காரணம் என்று ட்ரம்ப் ஏற்றுக்கொண்டமை உலகெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - ரஷ்ய அதிபர் புடின் இருவரும் பின்லாந்து நாட்டின் தலைநகர் ஹெல்சின்கியில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.
இந்தப் பேச்சுக்கு முன்னதாக தனது கீச்சகத்தில் வெளியிட்ட பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் ட்ரம்ப்.
"ரஷ்யாவுடனான உறவு மோசமாகச் சென்றமைக்கு அமெரிக்காவின் முட்டாள்தனமே காரணம். தற்போதைய தேடலும் ரஷ்யாவுடனான உறவைச் சீர்குலைத்துக் கொண்டுள்ளது" என்று ட்ரம்ப் மேலும் குறிப்பிட்டார்.
ட்ரம்ப் 'தற்போதைய தேடல்' என்று குறிப்பிட்டுள்ள விடயம் ரொபேட் முல்லர் நடத்தும் விசாரணையைத்தான் என்கின்றனர் பன்னாட்டு அரசியல் அவதானிகள். அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததா என்பது தொடர்பிலேயே முல்லர் விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)







## முடிகிறது பனிப்போர்

ஹெல்சின்கி, ஜூலை 18
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் -ரஷ்ய அதிபர் புடின் இருவரும் சந்தித்துப் பேச்சு நடத்தியதை அடுத்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பனிப்போர் முடிவுக்கு வருகிறது என்று கருதப்படுகிறது.
பின்லாந்துத் தலைநகர் ஹெல்சின்கியில் இருவரும் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர். சுமார் நான்கு மணிநேரம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவர்கள் இருவரும் இவ்வாறு தெரிவித்தனர்.
"பனிப்போர் நிலவிய காலத்துக்கு பின் நடந்துள்ள இந்தச் சந்திப்பு வெற்றிகரமாக நடந்துள்ளதாக இருவரும் கருதுகிறோம். இரண்டு மிகப்பெரிய அணு ஆயுத நாடுகளான அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் பன்னாட்டுப் பாதுகாப்பைக் கவனிப்பது பொறுப்பாக உள்ளது. அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு எந்த விதத்திலும் இல்லை" என புடின் தெரிவித்தார்.
"நடந்து முடிந்துள்ள இந்தச் சந்திப்பு வெளிப்படையாகவும், ஆழமானதாகவும், நேரடியானதாகவும் இருந்தது.
இந்த நான்குமணி நேர சந்திப்பு கடந்த கால கசப்புகளை போக்கும் என முழுமையாக நம்புகிறேன்" என்று ட்ரம்ப் தெரிவித்தார். (ம)

## தூதரகங்கள் திறக்கப்படலாம்

வொஷிங்டன், ஜூலை 18
ட்ரம்ப்-புடின் சந்திப்பை அடுத்து அமெரிக்க ரஷ்யத் தூதரகங்கள் மீண்டும் திறக்கப்பட வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது.
அமெரிக்கா - ரஷ்யா இடையில் நிலவிய மோதலை அடுத்து அமெரிக்காவுக்கான ரஷ்யத் தூதரகமும், ரஷ்யாவுக்கான அமெரிக்கத் தூதரகமும் பூட்டப்பட்டன. உக்ரைன் விவகாரம், சிரிய விவகாரம் என்று ஏகப்பட்ட விவகாரங்களில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் கருத்து மோதல் தொடர்ந்து வந்ததால் இரு நாடுகளும் பரஸ்பரம் பகைமை பாராட்டியே வந்தன.
இதனால் தூதரகங்கள் தொடர்ந்து பூட்டப்பட்டே இருந்தன. புடின்-ட்ரம்ப் சந்திப்பை அடுத்து மீண்டும் தூதரகங்கள் திறக்கப்பட வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது. (ம)



ட்ரம்ப்-புடின் சந்திப்பின் போது செய்தியாளர் ஒருவர் எழுந்து இரண்டு அதிபர்களுக்கும் தனது எதிர்ப்பைப் பதிவுசெய்தார். அணுவாயுதங்கள் அழிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் அவர் வலியுறுத்தினார். (ம)

> அமெரிக்கா - ரஷ்யா இடையில் நிலவிய மோதலை அடுத்து அமெரிக்காவுக்கான ரஷ்யத் தூதரகமும், ரஷ்யாவுக்கான அமெரிக்கத் தூதரகமும் பூட்டப்பட்டன.



## மனிதன் மிருகமான கதை



யகார்தா, ஜூலை 18
இந்தோனேஷியாவில் உறவினரை கடித்துக் குதறிய முதலையைப் பழிவாங்கும் நோக்கில், பண்ணையில் வளர்க்கப்பட்டு வந்த 300க்கும் மேற்பட்ட முதலைகளை ஒரு கும்பல் வெட்டிச் சாய்த்து விட்டுச் சென்றது.
இந்தோனேசியாவில் பப்புவா என்ற மாநிலம் உள்ளது. அங்குள்ள சோராங் நகரில் மிகப்பெரிய முதலைப்பண்ணை உள்ளது. குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகே இருப்பதால், இந்தப்பண்ணையை வேறு இடத்துக்கு மாற்றக்கோரி அந்தப் பகுதி மக்கள் பண்ணையாளர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், தொடர்ந்து அந்தப் பண்ணை செயல்பட்டு வந்துள்ளது. இந்த நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன் 48 வயதான சுகிட்டோ என்பவர், முதலைப்பண்ணைக்கு அருகே இருக்கும் புல்வெளிப்பகுதியில் தனது கால்நடைகளுக்கு புற்கள் அறுத்துக்கொண்டிருந்தார். அப்போது, அந்தப் பகுதிக்குள் வந்த முதலை ஒன்று சுகிட்டோவின் காலைக் கடித்துள்ளது.
இதில் இருந்து தப்பிக்க நினைத்த சுகிட்டோ முதலைப் பண்ணைக்குள் ஓடியபோது, ஏனைய முதலைகளால் தாக்கப்பட்டு, கடித்துக் குத றப்பட்டு உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் குறித்து சுகிட்டோ உறவினர்கள், பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்து பண்ணையை வேறு இடத்துக்கு மாற்றக்கோரி வலியுறுத்தினர்.
முதலையின் தாக்குதலால் உயிரிழந்த சுகிட்டோவின் குடும்பத்துக்கு இழப்பீடு தருவதாக பண்ணை உரிமையாளர்கள் ஒப்புக்கொண்டனர். எனினும் சுகிட்டோவின் இறுதிச் சடங்கை முடித்து விட்டு கையில் கத்தி, கம்பு, கூரிய ஆயுதங்களுடன் புறப்பட்ட அந்தப் பகுதி மக்கள், முதலைப் பண்ணைக்குள் புகுந்தனர். முதலைப் பண்ணையில் பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியர்கள் தடுத்தும், கிராம மக்கள் கேட்கவில்லை. பண்ணைக்குள் இறங்கி, அங்கிருந்த 300க்கும் மேற்பட்ட முதலைகளை தாங்கள் கொண்டு வந்திருந்த ஆயுதங்களால் வெட்டிச் சாய்த்து கொலை செய்தனர்.
இது குறித்து பண்ணை நிர்வாகத்தினர் சார்பில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. "முதலைகளை வெட்டிக்கொன்றவர்களை நேரில் பார்த்தவர்கள் சாட்சி அளிப்பதாகக் கூறியுள்ளனர்.
இதன் அடிப்படையில், விசாரணை நடத்தி, விரைவில் சம்பந்தப்பட்டர்கள் கைது செய்யப்படுவார்கள்" எனத் தெரிவித்தார். (ம)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# குரோசியாவின் வெற்றியும் தமிழர்களின் சுயமதிப்பீடும்!

உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டி ரஷ்யாவில் கோலாகலமாகநடந்துமுடிந்துள்ளது. பெரும்எதிர் பார்ப்புகளைக் கொண்டிருந்த பெரிய அணிகள் தோல் வியுற்று போட்டியிலிருந்து வெளியேற, அதிகம் எதிர் பார்க்கப்படாத, வயதானவர்களின் அணி என எள்ளி நகையாடப்பட்ட குரோசியா இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணியைத் தோற்கடித்ததன் மூலம் தம் மீதான விமர்ச னங்கள் அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தது அந்த அணி.

நீண்ட போராட்டத்திற்குப் பின்னர், அந்த அணி இந்தச் சாதனையைப் படைத்துள்ளது. குரோசியா இலங்கை யைவிடச் சிறிய நாடு. 56ஆயிரம் சதுர கிலோ மீற்றர்கள் பரப்பளவைக் கொண்டது. 48 லட்சம் பேரை மட்டுமே மக்கள் தொகையாகக் கொண்டது. பெரும்பான்மையி னராகக்குரோட்இனத்தவர்கள்வாழ்க்கின்றார்கள். செர்ப் மற்றும் ட்ச்சுக்காரர்கள் சிறுபான்மையினராக வாழ்கிறார் கள்.

தன்னுடைய இருப்பைத் தக்க வைப்பதற்காகக் குரோ சியாபலபோராட்டங்களைநடத்தியிருக்கிறது. 1941இல் யுகோஸ்லாவியா இந்த நாட்டைக் கைப்பற்றியது. அது முதல் தனது விடுதலைக்கான பயணத்தை குரோசியா ஆரம்பித்தது. ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லருக்கு ஆத ரவாக இருந்த யுகோஸ்லாவிய அரசுடன் ஒத்துழைக்க மறுத்து, கிளர்ச்சியில் இறங்கின குரோசியாவின் பெரும் பான்மையான பகுதிகள். அதன் விளைவாக ஒரு கூட்ட ரசு (சமஷ்டி) முறைமைக்கு யுகோஸ்லாவியா இறங்கி வந்தது. 1991 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25ஆம் திகதி தன்னை ஒரு சுதந்திர நாடாகக் குரோசியா அறிவித்தது. அதைத் தொடர்ந்து சுமார் 4 வருடங்கள் குரோசியாவின் சுதந்திரத்துக்கான போர் நடந்தது.

யுகோஸ்லாவியாவில் பெரும்பான்மையினர் சேர்பியர் கள். பின்னாள்களில் இதே சேர்பியர்கள் ,பொஸ்னியா வில் மேற்கொண்ட இனப்படுகொலை உலகப் புகழ் வாய்ந்தது. அத்தகைய சேர்பிய இராணுவம், குரேட் மக்களுக்குஎதிராகநிகழ்த்தியஅட்டூழியங்களும், கொலை களும், வன்புணர்வுகளும் வார்த்தைகளால் வடிக்க முடி யாதவை. “ஏய்சுலோபோ..சாலட்களைஅனுப்பு..இறைச் சிக்கு நாங்கள் தூயக் குரோசியர்களின் சதைகளை அறுக் கிறோம்” என்கிறவன்மம்மிக்கபாடல்போர்க்காலத்தில் சேர்பியர்களிடம் பிரபலம் என்கிற தகவலும் உண்டு.

இந்த வன்முறை மிக்க, இனப்படுகொலைக்கு அஞ்சாத இராணுவத்துடன் போரிட்டு தனது விடுதலையை முழு மையாக 1995இல் அடைந்தது குரோசியா. அதன் பின் னர் துரிதமான வளர்ச்சியை நோக்கி முன்னேறி வரு கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்திலும் இணைந்து கொண் டது. வாழ்வதற்கு ஆகச் சிறந்த நாடுகளில் ஒன்று என்று இன்று பட்டியலிடப்படும் அளவுக்கு அதன் வளர்ச்சி பாராட்டத்தக்கது.

1998 முதல் நடந்த எல்லா உலகக் கிண்ணக் கால் பந் துப் போட்டிகளிலும் பங்கேற்றுள்ளது குரோசியா. அணி யின்தலைவரானமொட்ரிச்தனது12ஆவதுவயதிலேயே சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டவர். தனது தாத்தா தன் முன்னே சுட்டுக்கொல்லப்படுவதைத் தன் கண்களாலேயேகண்டவர். அணியில்இருந்தஒரேயொரு அனுபவசாலியான வீரர். ஐரோப்பிய கழகங்களுக்காக புகழ்பெற்ற வீரர்களுடன் இணைந்து ஆடிய அனுபவம் அவருக்கு மட்டுமே பெருமளவில் இருந்தது. ஆனாலும் அணியை ஒருங்கிணைத்து, பயிற்றுவித்து, திறம்பட வழிநடத்தி, அவமானங்களையும் கேலிசெய்யும் விம சர்னங்களையும் கடந்து வெற்றியின் அருகே அணியை அழைத்துச் செல்ல அவரால் முடிந்தது.

குரோசிய அணியின் இந்தச் சாதனை அதன் வெறும் கால்பந்தாட்ட அடைவு மட்டும் அல்ல; உலக வரை படத்தில் தன்னை, தனது சுயத்துடன் நிலை நிறுத்துவ தற்குமானது. சுதந்திர தாகத்துடன் மிக நீண்ட காலப் போராட்டத்தை நடத்திய குரோசியாவின் இந்த வளர்ச்சி எமக்கும் நல்லதொரு உதாரணம். போருக்குப் பின்னர் 10 வருடங்களைக் கடந்துவிட்ட நாம், எமது பயணம் எத்தகையது என்பதை சுயமதிப்பீடு செய்து கொள்வதற்கு குரோசியாவின் வெற்றி துணை நிற்கட்டும்.



# சவால்களை எதிர்நோக்கும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள்

ப்ரியமதா பயஸ்

**சமூகத்தில் இப்போது தலை விரித்தாடும் சமூக ஊடகங்களுடன் தொடர்பில் இருப்பவர்கள், தமக்கான கருத்துச் சுதந்திரம் மூலம் ஓரளவு தமது பிரச்சினைகளை (பொருளாதாரம், மருத்துவம்) நண்பர்களோடு பகிர்ந்து தமது வாழ்வை நகர்த்துகின்றனர். ஆனால், இப்படியான சமூகத் தொடர்பு இல்லாத முன்னாள் புலி உறுப்பினர்களின், அதுவும் உடல்காயங்களுடன் அங்கவீன மாக இருப்பவர்களின் நிலமை சொல்லி மாளாதது.**

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இலங்கையில் தமிழரின் மரபுரிமை உட்பட்ட சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய இயக்கங்களில் தனித்துவமானதொரு பேரியக்கமாகும். புலிகள் இயக்கம் ஆரம்பித்த காலம் தொடக்கம், இன்றுவரை இலங்கைத் தமிழர்கள் உரிமை, அரசியல், சக வாழ்வு, சமூகம் என்ற சகல சந்தர்ப்பங்களிலும் அவர்களது பெயர், பேச்சுக்குப் பேச்சும், வரிக்கு வரியும் உச்சரிக்கப்படாமல் இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், வேண்டப்பட்ட விடுதலைக்காகவும் தம்மை விரித்துக்கொண்டு களம் புறப்பட்டவர்களாகவே அவர்கள் மக்கள்முன் தெரிந்தனர். கால ஓட்டம், புலிகள் பக்கத்தில் கருத்தாழம்மிக்க, ஒரு பற்றற்ற மாறுதலை உருவாக்கி முகமறியா மனிதர்கள் ஆக்கி இருக்கின்றது.

சீருடையும், சீரிய நன்னடத்தையும் கொண்டு சமூகத்துள் உலவியவர்கள், 2009ஆம் ஆண்டு இறுதிப் போருக்குப் பின்னர் சிறை, புனர்வாழ்வு, சமூகத்துடன் இணைப்பு என்ற மூன்று சம்பிரதாயமற்ற சடங்குகளுக்கு முகம் கொடுத்து, தாம் உயிர் கொடுக்கத் தயாராக இருந்த சமூகத்துக்குள் நிராயுதபாணிகளாக வரும்போது முற்றிலும் மாறுபட்ட மனிதர்களாக வாழ்வியலை எதிர்கொள்கின்றனர்.

### முத்திரை குத்தப்பட்டவர்களாக நிலை நிறுத்தப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள்

விரும்பியோ, விரும்பாமலோ அவர்கள் ஏற்றுக் கொண்ட பாத்திரத்திலிருந்து விடுபட முடியாமல் முத்திரை குத்தப்பட்ட மனிதர்களாக நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான முன்னாள் புலி உறுப்பினர்கள் அங்கவீனர்களாகவும், போரில் தம் உடலில் ஏற்றுக் கொண்ட விழுப்புண் காரணமாக, உடல் பலமற்றவர்களாகவும் நடமாடுகின்றனர். பெரும்பாலான முன்னாள் புலி உறுப்பினர்கள் சிறை வாசத்தின்பின் திடீரென சாவடையும் உடல்நிலையிலேயே காணப்படுகின்றனர். இது தொடர்பான உள்ளார்த்தம் பொதுவானதாகவே வைத்துக்கொள்வோம். ஆனாலும், சமூகம், வாழ்வியல் என்ற கண்ணோட்டத்தில் இவர்களது தளம், பொதுமக்கள் வாழ்வில் இருந்து சரிவர இரண்டாகப் பிரிக்கப்படுகிறது.

போருக்கு முன்னர் மதிக்கப்பட்ட அவர்கள் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் அடங்கி ஒடுங்கி வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஒருசிலர் தமது வாழ்வியலையும், வாழ்க்கைப் போக்கையும் மாற்றிக் கொண்டு, வெளிநாடுகளில் தஞ்சமடைந்து வாழ்கின்றனர். பெரும்பாலானவர்கள் புனர்வாழ்வுக்குப் பின்னர் வெளிநாடுகளுக்கு தப்பிச்செல்ல முடியாத இக்கட்டான சூழலில், வாழ்க்கையை நகர்த்துகின்றமை முற்றிலும் உண்மையான விடயம்.





**பேச்சுச் சுதந்திரம் அற்றவர்களாகிப் போனதாக உணரும் முன்னாள் புலி உறுப்பினர்கள்**

சமூகத்துக்குள் கலகலப்பாக, ஒரு அங்கமாக இருந்த புலி உறுப்பினர்கள், சுயமான பேச்சுச் சுதந்திரமோ, நியாயம் நீதிகளை எடுத்துரைக்கும் சுதந்திரமோ அற்றவர்களாகிப் போனார்கள். தாம் உண்டு, தம்பாடு உண்டு என வாழ வேண்டிய நிர்ப்பந்தம் சூழல் காரணியாக அவர்களை முடக்கி வைத்திருப்பது, அவர்களது தனிப்பட்ட வாழ்வியலிலும், மனதளவிலும் கடுமையான தாக்கத்தைச் செலுத்துவதை உணரமுடிகின்றது.

மக்களோடு மக்களாக தங்களை நிலைநிறுத்திக்கொள்ள முடியாத ஒரு விசித்திரமான பிரிவு நிலையை அவர்கள் சந்திக்கின்றார்கள். கால ஓட்டத்தில் மாற்றம் கண்டுவரும் அரசியல், சமூக சூழ்நிலைகளே இதற்கான காரணம் என உணரமுடிகிறது.

பெரும்பாலும் அங்கவீனமுற்ற போராளிகளின் நிலமை மிகவும் கவலைக்குரியதாகவே இருக்கின்றது. தமது வாழ்வியல் போக்கை மாற்ற வலு இல்லாமையால், அவர்கள் தமது வாழ்நாளோடு போராடும் நிலமை பரிதாபத்துக்கு உரியதாக ஆகி இருக்கின்றது.



சமூகத்தில் இப்போது தலை விரித்தாடும் சமூக ஊடகங்களுடன் தொடர்பில் இருப்பவர்கள், தமக்கான கருத்துச் சுதந்திரம் மூலம் ஓரளவு தமது பிரச்சினைகளை (பொருளாதாரம், மருத்துவம்) நண்பர்களோடு பகிர்ந்து தமது வாழ்வை நகர்த்துகின்றனர். ஆனால், இப்படியான சமூகத் தொடர்பு இல்லாத முன்னாள் புலி உறுப்பினர்களின், அதுவும் உடல்காயங்களுடன் அங்கவீனமாக இருப்பவர்களின் நிலமை சொல்லி மாளாதது.

**இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் ஒரு சில முன்னாள் புலி உறுப்பினர்கள்**

குறிப்பிட்ட ஒருசிலரின் நிலமை சொல்லொணாத் துயரமானது. சமூகத்துக்குள் தாம் ஒரு முன்னாள் புலி உறுப்பினர் என்று சொல்வதால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் தொடர்பில் அவர்கள் இருதலைக்கொள்ளி எறும்பாகவே திண்டாடுகின்றனர்.

அரச, இராணுவ பார்வை அவர்களில் இருந்து விலகாமல் கழுகுக்கண்கள் அவர்களை மொய்த்துப் பிடித்த வண்ணம் உள்ளதும் உண்மையானதே.

இந்த முன்னாள் புலி உறுப்பினர்களின் வாழ்வியலை மேம்படுத்த பலர் முன்வருகின்றபோதும், அவர்களுக்கான உளவளத்தைத் தர எவரும் முன்வராமை கவலைக்குரியது. ஒருமனிதனால் மன ஆரோக்கியத்தைப் பேணமுடியாமல் போனால், உடல் நலிவுறுவது இயற்கையே. நலிவுறும் உடலையே தூக்கி நிறுத்தும் வல்லமை மன ஆற்றுப்படுத்தலுக்கும், மனத் தைரியத்துக்கும் உண்டு. இதைப் பொறுப்பானவர்கள் நன்குணர்ந்துகொள்ள வேண்டும்.

**பொறுப்புடன் அவர்களது மனதை அண்மிக்கும் செயற்பாடுகளே தற்போது அவசியமானவை**

வீரமுழக்கங்களும், வீர வணக்கங்களும் அவர்களின் மன உணர்வுகளைத் தற்போது பிரித்துப்போடும் நிலையில் இல்லை. காரணம், அவர்கள் நோயினாலும், விழுப்புண்ணாலும், வறுமையாலும் நலிவுற்று இருக்கின்றனர். அவர்களுக்கு ஆக்ரோசமான பேச்சுக்களையோ, வீர வசனங்களையோ கேட்கும் மனநிலை இல்லை. எனவே பொறுப்புடன் அவர்களின் மனதை அண்மிக்கும் செயற்பாடுகளே தற்போது தேவையானவை. தாம் அனாதரவாக்கப்பட்டுள்ளோம் என்ற உள்ளுணர்வு அவர்களிடம் இருப்பதை நான் நேரடியாக கண்டு, கேட்டு உணர்ந்துள்ளேன். ஆகையினால் அவர்களின் மனநிலையில், மாற்றத்தை ஏற்படுத்தி உடல்நிலையைத் தேற்றிட நாம் முன்வர வேண்டும். ஒருசிலருக்கானது என்றில்லாமல், ஒட்டுமொத்தமாக அவர்களது உள நலனில் அக்கறை காட்ட வேண்டிய தலையாய கடமை இன்றைய எமது தமிழ்ச் சமூகத்துக்கு உண்டு.

அண்மையில் ஒரு முன்னாள் புலி உறுப்பினர் (திலீபன் என்ற பெயர் கொண்டவர்) படுத்த படுக்கையாக தன் உடல் உபாதையோடு போராடும் விடயம் வெளிக்கொணரப்பட்டது. யுத்தம் முடிவடைந்தும் 9வருடங்களின் பின் இப்படி ஒரு உயிர் வாழ்வோடு போராடிக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டமை துரதிஷ்டவசமான விடயமே. காலம் முந்திய நிலையில் அவர் கண்டறியப்பட்டு இருந்தால், அவரது வாழ்க்கை நிலமையை கண்டிப்பாக மாற்றி அமைத்திருக்க முடியும். எனவே அவர்கள் தொடர்பில் பாராமுகமாக சமூகம் இருப்பது கவலைக்குரியது. குறிப்பிட்ட பல வருடங்கள் அவர்கள் உணவுக்கும் உடைக்கும் தமது தலைமையில் தங்கி வாழ்ந்தவர்கள். சுயமான பொருளாதாரம், வாழ்வியல் என்பது போராட்டத்துக்கு அடுத்த மாறுபட்ட படிநிலை. இதனை அவர்கள் யாதார்த்தமாக உணர்வது மிகவும் கடினமானது. முற்றிலும் மாறுபட்ட ஒரு வாழ்க்கையைச் சந்தித்தவர்கள் சமூகத்தின் தற்போதைய மாற்றத்துள் நுழைவது சவாலான விடயமே.

**சமூக ஆர்வலர்களும் பொறுப்புள்ளவர்களும் முன்னாள் போராளிகள் விடயத்தில் கரிசனை கொள்ளவேண்டும்**

இதனை சமூக ஆர்வலர்களும் பொறுப்புள்ளவர்களும் நன்கு உணர்ந்து அவர்கள் தொடர்பில் கண்டிப்பாக கரிசனைகொள்ள வேண்டும். அவர்கள் வாழ்வியலை நுணுக்கமாக வழிப்படுத்த உறுதுணை புரிய வேண்டும். "சமூகத்துள் இணைப்பு" என்ற சொற்பதமே, அவர்களை பிரிவினைப்படுத்திய பின்பே சமூகத்துக்குள் நகர்த்தி இருக்கின்றது. இந்த நிலமையை மாற்றி அவர்களின் உள, உடல் நலனில் கரிசனை கொள்ளல் மனித பொது நீதியாக ஆகியுள்ளது.

> பெரும்பாலும் அங்கவீனமுற்ற போராளிகளின் நிலமை மிகவும் கவலைக்குரியதாகவே இருக்கின்றது. தமது வாழ்வியல் போக்கை மாற்ற வலு இல்லாமையால், அவர்கள் தமது வாழ்நாளோடு போராடும் நிலமை பரிதாபத்துக்கு உரியதாக ஆகி இருக்கின்றது.

தமது நிலமை தொடர்பில் பலர் வெளிப்படையாக பேசமுடியாமல் உள்ளமையும், இங்கு நோக்க வேண்டிய விடயம். அரசியல் நகர்வு, சுதந்திரம் என்ற பக்கம் பார்க்காமல், சக சமூகமாக அவர்களை நோக்கும்போது, தனித்து அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் விசித்திரமாக உள்ளன. அவை, சமூக நிலையில் தாக்கம் செலுத்துவதை அவர்கள் உணராமலும் இல்லை. உதவி, வாழ்வு என்று அவர்கள் ஏமாற்றப்பட்ட கதைகளும் இல்லாமல் இல்லை. சமூகப் பொறுப்புணர்வு ஒன்று கண்டிப்பாக இவர்கள் தொடர்பில் ஏற்படுத்தப்படுதல் தற்போது இன்றியமையாததாக ஆகியுள்ளது.

## ஆசிரியருக்கான கடிதம்

# மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதைத் தவிர்ப்போம்

பொது நிகழ்வுகள், கோவில் உற்சவங்கள் போன்ற நிகழ்வுகளில் ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுவதால் சுற்றுச் சூழல் அமைதி பாதிக்கப்படுவதாகவும், மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதாகவும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் சமூக நலன் விரும்பிகளும் கடந்த பல ஆண்டுகளாக கருத்து வெளிப்படுத்தி வருகின்றனர்.

அத்தகைய ஒலிபெருக்கிப் பாவனையைத் தடைசெய்ய வேண்டுமென்ற கருத்தும் இறுக்கமான விதத்தில் சமூக மட்டத்திலிருந்து கடந்த சில ஆண்டுகளாக முன்வைக்கப்பட்டு வந்துள்ளது. இருந்தபோதிலும் இவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கொலிபோன்று கவனத்தில் கொள்ளப்பட்டதில்லை. ஒலிபெருக்கிப் பாவனைக்கான அனுமதியை வழங்கச் சட்டப்படி உருத்துடைய பொலிஸ் தரப்பினரும் இருதரப்பாரையும் சமாளிக்கும் வகையில் இரவு வேளையில் குறித்த தொரு நேரம்வரை மட்டுமென ஒலிபெருக்கிப் பாவனைக்கான அனுமதியை வழங்கினாலும், குறித்த நேரத்தையும் தாண்டி ஏதாவதொரு நிகழ்வில் ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுவதால் அண்டை அயலிலுள்ள பொதுமக்கள் இரவு வேளையில் நித்திரையின்றி பெரும் சிரமப்படும் நிலை நிலவுகிறது.

ஆயினும் குறித்த நிலைப்பாட்டை ஆய்ந்தறிந்து, யாழ்ப்பாணக் குடாநாட்டில் செயற்படும் நகரசபை நிர்வாகமொன்று எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் இடம்பெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை என்பவற்றுக்குத் தோற்றும் மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாதிருப்பதற்காக ,குறித்த பரீட்சைகள் நடந்து முடியும்வரை தனது நகரசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒலிபெருக்கிப் பாவனையை முற்றுமுழுதாகக் கண்டிப்புடன் தடைசெய்துள்ளது.


சில விடயங்களில் சட்டம் ஒழுங்கைக் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தினால் மட்டுமே எதிர்பார்க்கும் பயனை ஈட்டமுடியும் என்பது இன்றைய காலகட்டத்துக்கு மிகமிகப் பொருத்தமானதொன்றே.

சாவகச்சேரி நகரசபை நிர்வாகத் தரப்பின் இந்தக் கண்டிப்பான நடவடிக்கையைப் பாராட்டும் அதேசமயம், குறித்த தரப்பினரது இந்த முன்னுதாரணத்தை ஏனைய உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களும் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்த முன்வந்தால், சுற்றுச்சூழல் மாசடைவினின்றும் எமது சமூகம் விடுபடுவதுடன், மாணவர் தரப்பினரும் தமது கற்றல் செயற்பாடுகளை இடையூறு எதுவுமின்றி முன்னெடுத்து பரீட்சைகளில் சாதனைபடைக்கவும் வாய்ப்பமையும்.

இது விடயம் தொடர்பாக உள்ளூராட்சிச் சபைகளின் நிர்வாகத் தரப்புக்கள் கவனம் செலுத்த வேண்டுமென்பது எனது எதிர்பார்ப்பாகும்.

*ப.பகீரதன்,சாவகச்சேரி*

இலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியை நிறுவிய ரோகண விஜயவீரவின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'தி புரோஸன் பயர்' ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆஸ்கர் பரிந்துரைக்கு செல்லும் முதல் சிங்கள மொழித் திரைப்படம் இதுவாகும். மக்கள் விடுதலை முன்னணியை (ஜே.வி.பி.) நிறுவிய ரோகண விஜயவீரவின் வாழ்க்கையை மையமாக வைத்து இயக்குநர் அனுருத்த ஜயசிங்க என்பவரால் 'கின்னேன் உபன் சீத்தல' எனும் சிங்களத் திரைப்படம் (தி புரோஸன் பயர்The Frozen Fire) எடுக்கப்பட்டுள்ளது. ரோகண விஜய வீரவின் கதாபாத்திரத்தில் முன்னணி சிங்கள திரைப்பட நடிகர் கமல் ஹத்தர ஆராச்சி நடித்துள்ளார்.
இந்தத் திரைப்படம் ஆஸ்கர் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சிறந்த திரைப்படத்துக்காக இலங்கை திரைப் படம் ஒன்று ஆஸ்கருக்கு பரிந்துரை செய்யப்படுவது இதுவே முதல்முறை.
இந்தப் படம் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆஸ்கர் திரைப்பட விருது வழங்கும் விழாவிலும் திரையிடப்பட உள்ளது. .




## ஆஸ்கருக்கு செல்லும் முதல் சிங்கள படம் 'தி புரோஸன் பயர்'



## இன்றைய நாள்

**மேடம்:** நேர்மையுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். கடந்த கால உழைப்பிற்கான நன்மை வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**இடபம்:** பேச்சில் சாமர்த்தியம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சியால் சாதனை இலக்கை அடைவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

**மிதுனம்:** மனதில் தற்பெருமை எண்ணம் மேலோங்கும். குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. மாணவர்கள் போட்டி பந்தயத்தில் ஈடுபட வேண்டாம்.

**கடகம்:** செயலில் கூடுதல் அக்கறை தேவை. தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற அவகாசம் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். சிலர் திடீர் செலவால் கடன் வாங்க நேரிடும்.

**சிங்கம்:** மனதில் அன்பும், கருணையும் மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** உடல்நலனில் அக்கறை தேவை. தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்குநிறைவேற அவகாசம் தேவைப்படும். இலாபம் சீராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்குவர்.

**துலாம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். நண்பரின் ஆலோசனையால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க நவீன மாற்றம் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** சிலர் சுயலாபம் பெற உங்களை நெருங்குவர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். திட்டமிட்ட செயல் எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**மகரம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். வாழ்வில் கூடுதல் நன்மை பெற புதிய வாய்ப்பு உருவாகும். தொழிலில் உற்பத்தி விற்பனை திருப்திகரமாக இருக்கும்.

**கும்பம்:** நல்லவர் செயலையும் தவறாக கருதும் சூழல் ஏற்படலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**மீனம்:** குடும்ப கஷ்டத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். பணி நிறைவேற கூடுதல் முயற்சி அவசியம். தொழில் வியாபாரத்தில் படிப்படியாக வளர்ச்சி ஏற்படும்.

facebook

Search for people, places and things

**கணவன்:**
"என்னடி இது தோசை இவ்வளவு கறுப்பா இருக்கு...????"

**மனைவி:**
"கறுப்பு.. உழைப்போட வண்ணம்...!!

**டாக்டர் :**
"ஏன்யா நேர்ஸ் கையைப் பிடிச்சு இழுத்த..?"

**நோயாளி :**
"அவங்கதான் சார் என்னை இழுத்து மூச்சுவிடச் சொன்னாங்க.."





'ஹாண்ட் பேக்கா' இது நான் உண்மையா 'பண்ணி'னு நினைச்சிட்டேன்...!!"

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 3 | | 8 |
| | | 3 | 5 | | | | 9 | |
| 1 | 8 | | 9 | | | | 5 | |
| | 1 | | | 3 | | | | 9 |
| | 3 | | | 4 | | | 7 | |
| 9 | | | | 5 | | | 6 | |
| | 6 | | | | 1 | | 3 | 4 |
| | 2 | | | | 5 | 8 | | |
| 3 | | 1 | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 9 | 6 | 3 | 7 | 8 | 5 | 4 |
| 3 | 8 | 6 | 5 | 4 | 9 | 7 | 1 | 2 |
| 4 | 7 | 5 | 1 | 2 | 8 | 3 | 6 | 9 |
| 9 | 1 | 8 | 3 | 6 | 2 | 4 | 7 | 5 |
| 7 | 4 | 3 | 8 | 1 | 5 | 2 | 9 | 6 |
| 5 | 6 | 2 | 7 | 9 | 4 | 1 | 3 | 8 |
| 6 | 9 | 4 | 2 | 7 | 3 | 5 | 8 | 1 |
| 8 | 3 | 1 | 4 | 5 | 6 | 9 | 2 | 7 |
| 2 | 5 | 7 | 9 | 8 | 1 | 6 | 4 | 3 |

நேற்றைய விடை



"பேருந்து மூலம் மேகத்தை உருவாக்கி மழையைப் பொழிவிக்க அரசு முயற்சி...!"

## சிந்திக்க.....

**கொடுத்தால் குறையாதது?**
அன்பு , கல்வி

**பணத்தைவிட மதிப்புமிக்கது?**
போதுமென்ற மனம்
ஈகை குணம்

**உலகில் விலைமதிக்க முடியாதது?**
தாயின் அன்பு
குழந்தையின் சிரிப்பு

**மதிப்பற்றது?**
ஈயாதவன் செல்வம்
உழைக்காதவன் வணங்கும் கடவுள்

**தவிர்க்கவேண்டியது?**
அன்பின்றிப் பெறும் உணவு
வரவுக்கு மேல் செய்யும் செலவு

**அழகு எங்கு உள்ளது?**
காண்பிக்கும் கண்ணில்
விரும்பும் மனதில்

**சுவையான உணவு?**
பசித்த பின் உண்பது
பகிர்ந்து உண்பது

**அறிவு எனப்படுவது?**
அறிதல்
அறியாமையை உணர்தல்

**மறக்க முடியாதது?**
வெற்றி
தோல்வி

**மறக்கக் கூடாதது?**
எமக்கு செய்த உதவி
எமக்காக அழுத கண்ணீர்

**முட்டாள் என்பவன்?**
ஒரே தவறைத் தொடர்ந்து செய்பவன்
தான் ஒரு முட்டாள் என்பதை அறியாதவன்

**எல்லோராலும் முடியாதது?**
சிந்திப்பது
சிந்தனையை அடுத்தவருக்குப் புரியுமாறு வெளிப்படுத்துவது

**சிரிப்பை வரவழைப்பது?**
அரசியல்வாதிகளின் பேச்சு
ஆன்மிகவாதிகளின் சொற்பொழிவு

சிலந்தி™@nandhu_twitts

மரங்கள அண்ணாந்து பார்த்த காலம்போய்....

'கட்டவுட்கள அண்ணாந்து பார்க்கிற காலம் வந்துடுச்சு...!!






இன்னும் சில வருடங்களில்,
இந்த உலகம்,
இத்தகைய நவீன
பிச்சைக்காரர்களை,
காண வேண்டியிருக்கும்.

எங்கும் புதுமை
எதிலும் புதுமை

உதயன்

# புதன் பொய்கை

Uthayan Print

ஜூலை 18 2018

@UthayanP



பெரும் சாதனை செய்வதற்கு மூன்று நிலைகளைக் கடந்தாக வேண்டும் அவை; ஏளனம், எதிர்ப்பு, அங்கிகாரம் ஆகியவை.

– சுவாமி விவேகானந்தா

## இக பர சுகம் நல்கும் சுக வாழ்வுக்கு

# கோலோச்சிய பாத நிகழ்வு!

கே.எ.சேர் பொன் இராமநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அமைந்த பூமியில் தனது பாதங்களை ஒவ்வொன்றாக வைத்தபோது மெய் சிலிர்க்குமாறு அவரது உள்ளமதில் தோன்றிய கருப்பொருள்கள் மூன்றாகும். அவையாவன. சைவசமயம், கலைகள், தமிழன்னை ஆகிய னவாகும். இவை ஒருங்கே சேர்ந்து அரங்கே றிய நிகழ்வுதான் மருத்துவ கலாநிதி ஜெயலக் ஷ்மி யுதிஷ்டிரனின் பரதநாட்டிய நிகழ்ச்சியாகும். இந்த அற்புதமான நிகழ்ச்சி கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலா சபதி கலையரங்கில் உள்ளம் பூரிக்குமாறு அரங் கேறியது. செந்தமிழும், சைவமும், தமிழ் அன் னையும் பண்பாடும் இந்த மண்ணில் தழைத் தோங்க எந்தவித நெருக்கீடுகளும் இல்லாமல் மிகவும் கச்சிதமாக அரங்க வரவேற்போடு நடை பெற்றது.

**பெருமை**

மருத்துவத் துறையில் கடமையாற்றம் மருத்துவர் ஜெயலக்ஷ்மி யுதிஷ்டிரன் மருத்துவத் துறையிலும் இந்த மண்ணில் அதி சிறந்து விழங்கி பதரக் கலை யிலும் மேன்மையுற்று, அரங்கேற்ற வியூகத் தில் மண்டபம் அதிசயிக்கும் வண்ணம் ஆர்ப் பரிக்குமாறு நடைபெற பாவ ராக தாள விஸ் வாச விமோசனம் அளித்தார். அடேயப்பா! அற்புதம்! பரவசம்!! பேரானந்தம்!!!. என் னென்று சொல்ல! ஏதென்று சொல்ல! எப்படிச் சொல்ல? இது கற்பனையல்ல என் நெஞ்சில் தைத்துவிட்ட இரசனை. யான் தனியாக இருந்து தொந்தரவு இல்லாமல் இரசிக்க வேண்டும் என்று விரும்புபவன். எனக்குப் பக்கதில் யாருமே வந்து அமரக்கூடாதென்று கைலாசபதி அரங்கினை வரமாக வேண்டிக் கொண்டேன். அது கிடைத்தே விட்டது. மாலை 4 மணியில் இருந்து பரதநாட்டிய நிகழ்வு இனிதே-முடிந்து இரவு 7.15 வரை மண்டபம் எனக்கு மட்டுமல்ல, எவருக்கும் இடையூறு விளைவிக்கவில்லை. பலே !! அவர் ஒரு பல்துறைக் கலைஞர்.

மருத்துவத் துறையிலும் சாதனை!. நடன ஆற்றுகையிலும் அபார சாதனை!!. வாய்ப் பாட்டுக் கலையிலும் ஆராதனை!!! சிறப்பாக ஆங்கிலத்தில் பெசுவதிலும் போதிய சம்பா வினை.





**பரதமாட்சி**

நாட்டியசாஸ்திரம் தந்த பரதமா முனிவருடைய பொருள் ததும்பும்படியாகவும், பாவ ராக தாளம் நிறையும் படியாகவும். லயம் போகம் அதிகாரம் மானஸம், வாசி கம், தாயகம் மற்றும் நிருத்தம், வாத்தியம், இச்சை, ஞானம், கிரியை, ததும்புப் படியாகவும் தன்மை, முன்னிலை, படர்க்கை, ஸ்தானங்களை வெல்லும்படியாகவும் ஜெய லக்ஷ்மி மகா லக்ஷ்மியாக சபைக்கு விருந்தளித்தார்.

> நாட்டிய சாஸ் திரம் தந்த பரதமா முனிவரு டைய பொருள் ததும்பும்படியாக வும், பாவ ராக தாளம் நிறையும் படியா கவும். லயம் போகம் அதிகாரம் மானஸம், வாசிகம், தாயகம் மற்றும் நிருத்தம், வாத் தியம், இச்சை, ஞானம், கிரியை, ததும்புப் படியாகவும் தன்மை, முன்னிலை, படர்க்கை, ஸ்தானங்களை வெல்லும் படியாகவும் ஜெயலட்சுமி மகாலட் சுமியாக சபைக்கு விருந்த ளித்தார்

**பதரதானம்**

ஐம்புலன்களையும், ஐம்பூதங்களை யும், ஐந்திணைகளையும், ஐவகைப் பிரபுக்களையும், ஐவகைக் குரவர்களையும், ஐந்தருக்களையும், ஐவகைத் தொழிலதிபர்களையும் ஓங்கே சேரும்படியாக நாட்டிய நாயகனாம் சிவப்பிரம்மத்தை வாலாயம் செய்து அட்டதிக்கப் பாலகர் களுக்கும், தேவர்களுக்கும், கலைமகள், அலைமகள், மலைமகள் ஆகியோரும் வருகை தரும்படியாக எழுந்த ருள வகைபுரிந்த உருப்படி மல்லாரி ஆகும்.

இறைவன் எழுந்தரும் போது நாதஸ்வரத்திலே நாட்டை அல்லது கம்பீர நாட்டையில் வசிக்கப்படும் இராக லய ஞான கம்பீர உருப்படிக்கு திரி காலங்களிலும் பாட நர்த் தன வித்தகி ஜெயலட்சுமி ஆட வல்லானையே கைலாசபதி அரங்கிற்குப் பரததான உபகாரம் செய்தார். மல்லாரி தானவாரியாகப் சேர்பித்தது. தொடர்ந்து 'குனித்தபுருவம்' விருத்த பாவ அம்சங்களோடு மனிதப் பிறவிக்கு இனித் வரமாக தனித்து வம் பெற்றது. காம் போதி இராகத் தல் பனித்த சடை பரவசமாகிற்று. சாகித்திய பாவங்களினால் இதமா னது பதவர்னம். அடேயப்பா! சௌக்க காலப் பிரயோகங்கள் சல் லாபத்தில் உல்லாசமாய் தவழ்ந்திட ஜெயலக்ஷ்மியின் பாவரச சுகானு பவம் இரசிகப் பெருமக்களைக் கட்டிப் போட்டு இரசிக்க வைத்தது எனலாம்.

நவரசப் பாத்ரிரமாய் உருவெடுத்து நாயகா நாயகி தோழ் அம்சங்களோடு உடை நடை உடல் மிளிரவும் சிருங்காரம், வீரம், நகை, சாந்தம், கருணை, இழிவு, அற்புதம், பயம், கோபம் பிரகாசிக்குமாறு இக பர சுகம் நல்கும் இன்ப வாழ்விற்கு அடி கோலிய உயர்வுதரு உணர்வுதரு உருப்படி பத வர்ணமே அற்புதம். பரவசமடைந்தோம். ஆகா! சிதம்பர தரிச னம் கிடைத்தது. நந்தனாருக்கு வாய்த்த தில்லைக் காட்சியோடு நாமும் பக்தி பூர்லமாக அனுபதித்தோம். கைவழி கண்ணும் கண்விழி கருத்தும் கருத்துவழி இரசமும் சென்று மேடையைக் கொலுவாக்கிற்று. ஒருவரை நோக்கி ஒருவரிடத்தே எடுத்துச்சென்று ரஸானுபவத்தைத் தூண்டுவதே அபிநயமாகும். உடலின் உறுப்புக்களால் நாட்டிய சாஸ்த்திரத்தின் வழி வெளிப்படும் உணர்வுக்கு இந்த உலகத்தில் நிகராக எதயுமே சொல்லிவிட முடியாது. இந்த நிகழ்வு யாழ் மண்ணுக்கு வரமும் உரமுமாகி றது. தொடக்கம் மண்டலம் வரை ஜெயலட்சுமி மிகவும் ஜொலித்துக் கவிந்து ஜெயித்துள்ளார். தொடர்ந்த இரசிகப் பெருமக்களைசிருங்காரப்ப டுத்திய உருப்படிப் பதம் ஆகும்.

முழுக்க முழுக்க காதல் சுவாஸ்யங்களோடு நளி னமாகவும் யாவன்யமாகவும், மனோலயமாக வும் நித்திய கல்யாணியாய் அனுபவித்த தெய்வீக சிவாம்சனிடத்து இச்சைகொண்ட பெண்ணவள் கொண்ட விரகதாபம் எம்மையும் உள்ளூரக் கிளர்ச்சிக்குள்ளாகிற்று. சாமுத்திரிகா லட்சனங் கமழ ஜெயலட்சுமி நர்த்தகி என்ற மாதுவுக்கு இறைவன் சகல பரதப் பேறுகளையும் குறையா மல் நிறைவாகக் கொடுத்துள்ளான்.

சபையை மயக்கும் படியாக ரஞ்சனி இராக "தீம் தீம் தீம்" ஜில்லான குளு குளு ஜனரஞ்சக சுகானு பவத்தை சேமிக்கவும் சோபிக்கவும் உபயமாக் கிற்று. உடலும் உள்ளமும் மெய்சிலுக்கும் படியா கத் தில்லான இரகசியங்களுக்குச் சம்பாத்தியம் ஆயிற்று.

சுமார் மூன்று மணித்தியாலம் ஒரு நடன சாம்ராஜ் யத்தில் தெய்வீக அனுக்கிரகத்துடன் வாழ்ந்து வரம் பெறுவதற்கு சிறப்பாக நட்டுவாங்க நர்த்தகி ஜீவா ரட்ணராயவினது லயம் பிசகாத மனோலய சுத்தமும் நறுக்காத அபினய








ஜதிச்சொற்கட்டும் தாள வின்னியாசத் தீர்மானங்களும் அடவு உபகரிப்பும் மேடைக் கம்பீரமும், நட்மடவாங்க ஆழுமையும் அருமை! அபாரம்.
மிகவும் இரம்மியமான பேரானந்த ராஜ தினேசின் கம்பீரமான கனதியான காத்திரமான குரல்வண்ணம் நடன மாதுவையும் நடன அரங்கையும் இரசிகப் பெருமக்களையும் வசீகரித்துக் கேட்போரின் செவிப்பசிக்கும் போதும்படி வேண்டிய தீனிகளை இனிக்க இனிக்க அள்ளித்தந்து அவருக்கு பல சபாஷ். அவரும் ஒரு மருத்துவ மாணவன்.



**பேறானது வயலின் இசை**

திருமதி உமா வைகுந்தனின் வயலின் வாத்தியப் பிருந்தகானம் மருத்துவக் குணம் மிக்க மாணிக்க நாதத்தை நடகன சாம்ராச்யத்தில் தித்திக்கவைத்தது. மிருதங்க ஆட்சிக்க இடமளித்து கடைசிவரை சோடை போகாதவாறு நடனத்திற்கு அபயமளித்த லய நாத வினோதன் வல்லை வசந் கலைஞரின் கைகளுக்குப் பலானகோடிப் பாராட்டுக்கள். ரொம்ப பிரம்மாதம். மெச்சும்படியான வாசிப்பு. பரமேஸ்வரன் கோகலகுமாரின் வேனுகான குழலோசையும், அற்புதனின் கீபோட் கற்பனையும் சபைக்க இன்பரசத்தை வழங்கின. குமணனின் ஒலியமைப்பு நுறு புள்ளிகளைத் தட்டிச்சென்றன. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் முதன்மை விருந்தினர் உரையானது மேற்படி நிகழ்வுக்கு நீண்ட ஆயுளைக் கொத்து வரம் தந்தது. அந்த வரம் இந்த மண்ணில் இனியும் கிடைக்கும்.

---

## கோலாகலமாக இடம்பெற்ற
# பட்டம்விடும் போட்டி





யாழ்ப்பாணம் - அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் பல்வேறு நிகழ்வுகளின் ஒருபகுதியாக பட்டம் விடும் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சரஸ்வதி சன சமூக விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் அரியாலை திறந்தவெளி விளையாட்டரங்கில் இந்தப் போட்டி நடைபெற்றது. உள்ளூர் வெளியூரைச் சேர்ந்த பலர் பல வடிவங்களில் கட்டப்பட்ட பட்டங்களுடன் போட்டிகளில் கலந்து கொண்டனர். (ம-37)

இரா. நிசாந்தன்

# மிகப்பெரும் அசம்பா விதத்தை தடுத்து நிறுத்திய சிறு பாடல்

தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் நெறி முறைகளை அழகுற எடுத்துரைக்கப்படும் தன்மைகள் ஏராளம் அமைவுறுகின்றன. ஒரு பாடலுக்குள் பல அர்த்தங்களும், நயங்களும் ஒரு சேர இழையோடியிருக்கும். ஒரு பாடலினால் போட்டியும், போரும் ஏற்பட்டுள்ள தன்மைகளையும் எம் இலக்கியங்களில் கண்ணுறலாம். அவ்வகையில் ஒரு பாடலால் அண்ணன் தம்பியருக்கு இடையில் நிகழ இருந்த போரானது நிகழாது தடுக்கப்பட்டுள்ள அழகிய கதையாடல் ஒன்றை இங்கு நோக்குதல் சிறப்புடையதாகும்.



**அதிவீரராம பாண்டியன் நைடதம் எழுதுதல்**

அதிவீரராம பாண்டியன் என்பான் வெற்றிவேற்கை எனும் நீதி நூலை இயற்றிய பெருமைக்குரியவன். அவன் ஒரு முறை நளனது வரலாற்றினை தன் மொழி நடையில் நைடதம் எனும் பெயரில் நூலாக சமைத்தான். நைடதம் எனும் இவனது நூலைப் படித்த புலவர்கள் நைடதம் புலவர்க்கு ஔடதம் எனப் பாராட்டினர். இந்த நிலையில் தான் எழுதிய நைடதம் எனும் அந்த நூலை, பாண்டிய நாட்டில் நல்லூர் எனும் இடத்தை ஆட்சி செய்யும் தன் அண்ணனும், தமிழ் அறிஞனும், கவிஞனுமாகிய வரகுண பாண்டியனிடம் கொடுத்தனுப்பி, தன் நூலின் குறை நிறைகளை கருத்திடும்படி வேண்டினான்.

**நைடதத்தை வரகுண பாண்டியன் படித்தல்**

நைடதம் கிடைக்கப் பெற்ற வரகுண பாண்டியன் அதனைப் படித்தான். அவனது மனைவியும் தமிழார்வம் கொண்டவள். அவளிடம் தன் தம்பியின் நூலைக் கொடுத்து அதைப் படித்து கருத்தினை கூறும் படி பணித்தான். வரகுண பாண்டியன் மனைவியும் அந்த நூலை நன்றாகப் படித்து விட்டு, "உங்கள் தம்பி எழுதியுள்ள நைடதம் நளன் சுயம்வரத்தில் தமயந்தியை மணந்தது தங்கள் நாடு சென்று இல்லற வாழ்வில் இன்பம் அடைந்தது வரை கவிஞர்கள் பாராட்டும் அளவிற்குப் பாடியுள்ளார். ஆனால் கலி தொடர்ந்த பின் கலிநீங்கும் வரை நளனும் தமயந்தியும் துயரமடைந்த அவலச் சுவையை வெளிப்படுத்தும் பாடல்களில் சுவை இல்லை. அந்தப் பாடல்கள் நன்றாக விளக்கவில்லை" என்று கூறினாள். அதைக் கேண்மையுற்ற வரகுணராம பாண்டியன் தன் மனைவியிடம் "என் தம்பி அழகும் அறிவும் உள்ள பெண்ணை மணந்து இல்லற வாழ்வில் இன்பத்தின் எல்லை கண்ட காலத்தில் நளன் தமயந்தியின் இல்லற வாழ்வைப் பற்றிப் பாடும்போது இன்பச் சுவையை அழகாகப் பாடியுள்ளான். இளைஞனான அவன் கலியினால் அவர்கள் துன்பம் அடைந்ததைப் பாடும்போது அவலச்சுவை குறைந்திருப்பது இயல்பே. நீயே உன் கருத்தை எழுதியனுப்பு" என்று கூறினான். இதன் படி வரகுண பாண்டியன் மனைவியும், "நைடதத்தில் உள்ள பாடல்களில் அழகும் சுவையும் முதற் பகுதியில் இருந்தது போல் இல்லாமல் போகப் போகக் குறைந்து கொண்டே போயுள்ளது. அது எப்படியெனில் வேட்டை நாய் முதலில் வேகமாக ஓடி போகப் போக இளைத்துப் போவதைப்போலும் கரும்பை தின்னும் போது முதலில் சுவையாகவும் போகப்போகச் சுவை குறைந்து கொண்டே உள்ளது போன்றும் தாங்கள் எழுதிய நைடதத்தின் பாடல்கள் உள்ளன" என்று அவள் தன் கணவன் கருத்தாக இவற்றை எழுதி அனுப்பினாள்.

நைடதம் கிடைக்கப் பெற்ற வரகுண பாண்டியன் அதனைப் படித்தான். அவனது மனைவியும் தமிழார்வம் கொண்டவள். அவளிடம் தன் தம்பியை நூலைக் கொடுத்து அதைப் படித்து கருத்தினை கூறும் படி பணித்தான். வரகுண பாண்டியன் மனைவியும் அந்த நூலை நன்றாகப் படித்து விட்டு, "உங்கள் தம்பி எழுதியுள்ள நைடதம் நளன் சுயம்வரத்தில் தமயந்தியை மணந்தது தங்கள் நாடு சென்று இல்லற வாழ்வில் இன்பம் அடைந்தது வரை கவிஞர்கள் பாராட்டும் அளவிற்குப் பாடியுள்ளார். ஆனால் கலி தொடர்ந்த பின் கலிநீங்கும் வரை நளனும் தமயந்தியும் துயரமடைந்த அவலச் சுவையை வெளிப்படுத்தும் பாடல்களில் சுவை இல்லை அந்தப் பாடல்கள் நன்றாக விளக்கவில்லை" என்று கூறினாள்.

**அதிவீரராம பாண்டியனின் கோபம்**

இத்தகு பதிலை கண்ணுற்ற அதிவீரராம பாண்டியன், கோபத்தின் உச்சத்திற்கே சென்று விட்டான். உடன் தன் அண்ணனிடம், வரகுண பாண்டியா, நீ என்னைக் குறைசொல்லியிருந்தால்நான் பொறுத்திருப்பேன். ஆனால் நீயோ என் பாடல்களை, என் தமிழை பழித்திருக்கின்றாய். ஆக இதற்கு நீ என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும், இல்லையெனில் என்னுடன் போருக்கு வர வேண்டும் என பதில் ஓலை அனுப்பினான். இதனைக்கண்ட வரகுண பாண்டியனோ தன் தம்பியிடம் மன்னிப்புக் கேட்டாலும், அல்லது போர் செய்தாலும் அது தனக்கு பழியினைக் கொடுக்கும் என அஞ்சினான்.

**வரகுணபாண்டியன் மனைவி பதில் அனுப்புதல்**

இந்த நிலையில் அவன் மனைவி, வரகுண பாண்டியனிடம், தாங்கள் கவலைப் படாதீர்கள், நான் ஒரு பாடல் மூலம் தம் தம்பியின் கோபத்தை போக்கிக் கொண்டு தங்களிடம் மன்னிப்பு வேண்டுவான் எனக் கூறினாள். அதன்படி ஒரு பாடலை எழுதி அதன் கருத்தையும் இணைத்து ஓர் ஓலையை மீண்டும் அனுப்பி வைத்தாள். பாடல் இது தான்,


***செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை***
***வேந்தனையும், பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே***
***மிஞ்சு விரதமே மேதினி ஆண்ட***
***பரதனையும், இராமனையும் பார்***

இதன் பொருள், சூரியன் மகன் சுக்ரீவனையும், இலங்கையின் வேந்தன் (இராவணன் விபீசனனையும் கருதலாம்;) பாண்டவரில் அர்ச்சுனையும், அண்ணன் தம்பி பாசத்திற்கு உதாரணங்களாக பார்க்காதே, அண்ணன் மீண்டும் அயோத்தி திரும்பும் வரை நானும் அயோத்திக்குள் கால் பதிக்க மாட்டேன் எனக் கூறி விரதம் மேற்கொண்ட பரதனையும் இராமனையும் அண்ணன் தம்பி பாசத்திற்கு உதாரணமாக பார்ப்பாயாக என்பதாகும்.

அதாவது, சுக்ரீவன் தன் அண்ணன் வாலியைக் கொல்வதற்கு இராமன் உதவியை நாடி அவனைக் கொன்றவன். அது போல வீபீஷணன் தன் அண்ணன் இராவனனை இராமன் கொல்வதற்கு வழி கூறியவன். மேலும் அர்ச்சுனன் தன் அண்ணன் கர்ணனைக் கொன்றவன். ஆனால்பரதனோ தன் அண்ணன் நாடு திரும்பும் வரை தானும் தவவாழ்வு மேற்கொண்டவன். ஆக பரதன் இராமன் அண்ணன் தம்பி பாசத்தையே உயர்வாக நீ கண்டு கொள்வாய் என இதன் விரிவினைக் கண்ணுறலாம். இதைப் படித்ததும் அதிவீரராம பாண்டியனின் கோபம் குறைந்தது உடன் தன் அண்ணனிடம் மன்னிப்புக் கோரி பதில் ஓலை அனுப்பி வைத்தான். இவ்வாறு, ஒருபோரையே தடுத்து நிறுத்திய பெருமையினை இப்பாடல் எம் இலக்கியத்தில்பதிவுசெய்துள்ளதன்மை வியக்கத்தக்க தும் நயக்கத்தக்கதுமாக உள்ளதல்லவா?



# மன்னிப்பை போதிக்கும் இஸ்லாம்



இஸ்லாமிய மார்க்கம்

இறைவனை மறந்து, மானுடமே மனநிலை சரியில்லாத நிலையில் பாதை மாறியபோது, முகம்மது நபியின் (ஸல்) மூலம் இஸ்லாம் என்ற மார்க் கத்தை, மக்களிடம் கொண்டு செல்கிறான் இறைவன்.

நபியும் (ஸல்) தனக்கு இறைவன் 'வஹி' மூலம் அறிவித்த இறைச்செய்தியை மக்களிடம் எடுத்துக் கூறினார். ஆனால், அவர்களை இறைத்தூதராக ஏற்க மறுத்த மக்காவாசிகள், நபிகளாருக்கு பல இன்னல்கள் கொடுத்து மகிழ்ந்தார்கள். நபியையும் (ஸல்) மற்றும் இஸ்லாமை தன் வாழ்நெறிக்கொள்கையாக ஏற்றுக் கொண்டவர்களையும், அபு சுப்யான், ஹாரிஸ் பின் ஹிஸாம், இத்தாப் இப்னு உசைத் போன்றவர்கள் பல கொடுமைக்கு உட்படுத்தினார்கள். நபிகளார் மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் மீது தங்களின் வெறுப்புத் தீயை அள்ளி வீசி, மக்காவை விட்டு வெளியேற்றினார்கள். காலம் கனிந்து, அல்லாஹ்வின் உதவியால், நபி (ஸல்) மக்காவை வெற்றிபெற்று, மக்காவின் மன்னராக மகுடம் சூட்டப்பட்டார். நபியின் (ஸல்) வெற்றிச் செய்தி, எதிரிகளின் காதில் தீயில் காய்ந்த எண்ணெய்யாக விழுந்தது. நாம் முகம்மதுக்கும், அவரின் தோழர்களுக்கும் செய்த இன்னல்களுக்கு நிச்சயம் பழி தீர்க்கப்படுவோம்என்று அஞ்சிநடுங்கினார்கள். ஆனால், மன்னிப்பை விரும்பும் நபி (ஸல்), "முஸ்லிம்களுக்கு எதிராக யாரெல்லாம் கொடுமைகளை கொப்பளித்தார்களோ அவர்கள் மீது, குற்றப்பத்திரிகை, தாக்கல் செய்யப்பட மாட்டாது. அவர்கள் அனைவரும் விடுதலை பெற்று விட்டார்கள்" என்று கூறி பொதுமன்னிப்பை வழங்கினார். தனக்கு எதிராகப் பல வகையில் கொடுமை செய்தவர்களைத் தண்டிக்கும் அனைத்து அதிகாரமும் பெற்றிருந்தும், அவர்களுக்கு மன்னிப்பு வழங்கியது நபிகளாரின் சிறந்த ஆளுமைக்கு அழகைக் கூட்டி யது.

தீங்கிழைப்போருக்கும், நன்மை செய்யும் பண்புதான் இறை நம்பிக்கையாளர்களின் அடையாளம் என்று திருக்குர்ஆன் பல இடங்களில் போதனை செய்கிறது. அதனை தன் வாழ்நாளின் ஒவ்வொரு தருணத்திலும் நபிகளார் வெளிப்படுத்தினார். "நல்லதைக் கொண்டு கெடுதியைத் தடுப்பீராக! அவர்கள் கூறுவதை நாம் நன்கு அறிவோம்." (திருக்குர்ஆன் 23:96)

"நன்மையும், தீமையும் சமமாகாது. நல்லதைக் கொண்டே (பகைமையை) தடுப்பீராக! எவருக்கும், உமக்கும் பகை இருக்கிறதோ அவர் அப்போதே உற்ற நண்பராகி விடுவார். பொறுமையை மேற்கொண்டோர் தவிர மற்றவர் களுக்கு இது (இந்தப் பண்பு) வழங்கப் படாது. மகத்தான பாக்கியம் உடையவர் தவிர மற்றவர்களுக்கு இது வழங்கப்படாது". (திருக்குர் ஆன் 41:34,35)

தன்னை அழிக்க நினைத்தவர்களையும், தன் அன்புப் பார்வையால் மன்னித்து, அவர்களையும், இஸ்லாம் மார்க்கத்தை ஏற்கச் செய்த பெருமை, நபியைச் சாரும். அவர் தன் வாழ்நாள் முழுவதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதை மகிழ்ச்சியாய் செய்து வந்தார். நாமும் அவ்வாறே செய்யக்கடவோம்.

## நிந்தவூரில் சிறப்புற இடம்பெற்ற

# 'புலமை புதல்வி' நூல் வெளியீடு


ஏ.எல்.எம்.சலீம்









நிந்தவூரைச் சேர்ந்த பன்னூலாசிரியர் மர்ஹூம் ஹிதாயத்துல் லஹ் மீர்சாவின் "புலமை புதல்வி" சமூக நாவல் நூல் வெளியீட்டு விழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டிலும், பேரவையின் தலைவர் கவிஞர் டாக்டர் ஏ.எம்.ஜாபிர் தலைமையிலும் நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் விழா நடைபெற்றது. இந்த வெளியீட்டு விழாவில் பிரதி சுகாதார அமைச்சர் எம்.பைஸால் காசிம், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.அப்துல் நிஸாம் ஆகியோர் முதன்மை அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அத்துடன் தென்கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவப் பீட பீடாதிபதி கலாநிதி எஸ்.குணபாலன் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சபீனா கஸ்ஸாலி உட்பட பலர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டதுடன் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வர்த்தக முகாமைத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் ரி. வேல்நம்பி நூல் பற்றிய நயப்புரையும் ஆற்றினார்.

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.அப்துல் நிஸாம் உரையாற்றுகையில், "பன்னூலாசிரியராக திகழ்ந்த எம்மை விட்டுப் பிரிந்த மர்ஹூம் ஹிதாயத் துர்லா மீர்ஸா, சமுதாயத்தைப் பற்றிய கவலை கொண்டவராக என்றும் திகழ்ந்ததுடன் அதனைத்தன் எழுத்துக்கள் மூலமும் வெளிப்படுத்தி வந்தார். தத்துவார்த்தக் கருத்துக்களுடன் இன ஒற்றுமைக்கான கதாபாத்திரங்களை அவரது எழுத்துக்களில் காணமுடியும்" என்றார்.

பேராசிரியர் வேல்நம்பி நூல் பற்றிய நயப்புரையாற்றுகையில், 'நூலாசிரியர் ஹிதாயத் துல்லா மீர்ஸா எம்முடனில்லாவிட்டாலும் இந்த நூல் மூலம் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார். வாசகர்களை ஈர்த்தெடுக்கக் கூடிய வகையில் சிறந்த கதாபாத்திரங்களுடன் இந்தச் சமூக நாவல் அமைந்துள்ளது. சமூகத்தை ஆற்றுப்படுத்தும் வழிகாட்டும் முடிவு நூலின் சிறப்பம்சமாகும் என்றார்.







# ‘ஆகாயத்தாமரைகள்’

## புயலின் சமூக விடுதலைக்கான சீரிய இயக்கம்

**ஆகாயத்தாமரைகள் சிறுகதை தொகுப்பு மீதான ஒரு பார்வை**

சி. ரஞ்சிதா

**புனைகதை இலக்கிய வடிவங்கள்**

புனைகதை இலக்கிய வடிவங்களுள் சிறுகதை முதன்மை இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. மேலைத்தேயத்தவர்களின் வருகையோடு இதற்கான ஆரம்பங்கள் கிடைத்தன எனலாம். அந்தவகையிலே ஈழத்தில் தமிழ்ச்சிறுகதை எழுதுவதற்கான ஆரம்ப முயற்சிகளை ஆர்னோல்ட் சதாசிவம் பிள்ளை மேற்கொண்டார். அதன் தொடர்நிலையாக தமிழ் சிறுகதைகளின் எழுத்துப் பாரம்பரியம் பன்முகத்தன்மையோடு வள்ர்ச்சி கண்டு வருகிறது. தனக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

**பிறப்பும் பணியாளுமையும்**

இந்த வளர்ச்சிப் பாதையில் 'புயல்' என்ற புனைப்பெயரு டைய சிறுகதை எழுத்தாளர் பெ.ஶ்ரீகந்தநேசன் குறித்து நோக்கத்தக்கவர். இவர் கடந்த 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எழுத்துலகில் பிரவேசித்த சிறுகதை எழுத்தாளராக திகழ்கிறார்.

இவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள மாங்குளம் கிராமத்தை பிறப்பிடமாக கொண்டவர். தற்போது யாழ்ப்பாணம் அரியாலையில் வசித்து வருகிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டக் கற்கை நெறியை பூர்த்தி செய்து கொண்டு தற்போது ஆசிரியராக பணியாற்றிவருகிறார். தவிர எழுத்துப்பணியோடு சமூக சேவையாளராகவும் தனது பணிகளை ஆற்றிவருகின்றார். 'சிறுகதை, கவிதை, கட்டுரை' எனப்பல பரிமாணங்களில் தனது எழுத்தாளுமையை வெளிப்படுத்திவரும் இவர், 'செழிப்பைத் தேடும் பறவைகள்', 'காகமும் மைனாக்களும்', 'ஆகாயத்தாமரைகள்' என்ற மூன்று் சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார்.

**ஆய்வுக் கண்ணோட்டம்**

இவற்றுள் 'ஆகாயத்தாமரைகள்' சிறுகதை தொகுப்பு தொடர்பான ஆய்வுக் கண்ணோட்டம் இந்தப் பகுதியில் எடுத்து நோக்கப்படுகிறது.

**'வேதனையில் பூத்த வேப்பம் பூக்கள்'**

இந்தச்சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள முதலாவது கதையம்சமாக 'வேதனையில் பூத்த வேப்பம் பூக்கள்' அமைந்துள்ளது. இந்தச்சிறுகதை போர்க்காலச்சூழலை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. வேப்பம் பூக்களை குறியீடாகக் கொண்டு ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கையையும், உளவியலையும் அற்புதமாக பேசுகிறது. இந்தக் கதையின் நாயகி 'வேணுகா' இளம் பெண்ணாக, போர்க்காலச் சுழலுக்கு மத்தியிலும் இயற்கையின் அழகை இரசிப்பவளாகவும், பெண்ணியச் சிந்தனைகளுடன் சுதந்திரமாக வாழ முற்படு பவளாகவும் படைக்கப்பட்டுள்ளாள்.

குறிப்பாக, "ஏன் நாங்கள் திருமணமாகி போனா கணவருக்கு அடிமையாக இருக்க வேண்டும்..? இன்றைய உலகத்திலே எத்தனையோ பெண்கள் ஆண்களுக்கு நிகராக இருக்கவில்லையா..? இந்த ஆண்களும் இப்படித்தான். பெண்ணை இரவில ஒரு கருவியாக பயன்படுத்துறது. பகலில தங்களுக்குரிய வேலைகளைச் செய்கின்ற அடிமைகளாக நடத்துறது..." என்று தொடரும் கேள்வி நிலைகள் பெண்ணிய விடுதலையை வேண்டி நிற்கின்றன.

இந்தச் சிறுகதையின் பெரும் பகுதி போர் அவலத்தால் ஒரு இளம் பெண் எவ்வாறு தவிக்கிறாள் என்பதையும், அவள் கண்டுகொள்கின்ற ஏக்கத்தையும் உணர்வுபூர்வமாக பதிவு செய்கிறது. கதையை வாசிக்கின்ற வாசகனுடைய மனவெளியை துன்பங்களால் தீண்டி கனதி கொள்ளச் செய்கிறது.

*'படார்..படார்..' சப்தம்*
*புகை மண்டலம் கிளம்புகின்றது*
*வானத்திலே மின்னிய ஒளி மறைகின்றது*
*அதுவரை அந்த ஊரே காணாத இடப்பெயர்வு.."*

போன்ற எளிமையான மொழிநடைப் பாங்கும், போரின் கொடூரங்களையும் உயிர்கள் காவுகொள்ளப்பட்டதையும் இரத்தினச் சுருக்கமாக கூறியுள்ள தன்மையும் அவர் கொண்டுள்ள மொழிநடை ஆற்றலை திறம்பட வெளிப்படுத்தி நிற்கிறது.

இந்த அவல இடுகுறிகளின் வெளியுள் வேணுகா தன் பெற்றோரை இழந்து தவிக்கிறாள். இறுதியில் தன்னோடு வாழ்வின் எல்லை வரை வருவதாக உறுதி தந்த 'நேசன்' என்ற உறவையும் பகைவர்கள் பலியெடுத்துவிட எதிர்காலம் தொலைக்கப்பட்ட பரிதாப நிலைக்குரிய பாத்திரமாக நிலைபெறுகிறாள். ஆம், வேதனையில் பூத்த வேப்பம் பூவரக வேணுகா இந்தச் சிறுகதையில் சித்தரிக்கப்படுகிறாள். மேலும் இவள் பெற்றோருடன் இருந்த காலத்தில் வேப்பம் மரத்தின் நிலையையும், அநாதையாக துன்பப்படும் போது அந்த மரத்தின் நிலையையும் காட்சிப்படுத்துவது குறியீட்டு அடிப்படையில் வேணுகாவின் வாழ்க்கையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. 'பூ, காய், பழம்' என பூத்துக்குலுங்கிய வேப்ப மரம், பின்னர் கிளைகள் முறிந்து, இலைகள் அற்று, பட்டை உரிந்து காட்சியளிப்பதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ள பகுதியை இதற்கு சான்றாக குறிப்பிடலாம். ஆசிரியர் தான் வாழ்ந்த கிராமத்தை கதைக்குள் கொண்டுவந்து, பிரதேச உணர்வை வெளிப்படுத்தும் விதமாக வட பகுதிக்குரிய பேச்சு வழக்கு, இயற்கை சூழல் போன்றவற்றை கையாண்டுள்ள தன்மை சிறப்பு.

இதனை, "எரிந்து கருகிப்போன பனைமரங்கள் உயிரற்று வீசிக்கொண்டிருக்கும் காற்றினால், பிடிமானமற்ற மரங்களைப் போல அசைந்தாடிக்கொண்டிருந்தன. பூஞ்சோலையாக காட்சியளித்த அந்த சிறிய கிராமமாகிய மாங்குளம் கூகைகள் நிறைந்த இடுகாடாக காட்சியளித்தது." என்ற பகுதியினூடாக தரிசிக்கலாம். இது ஒரு வகையில் இயற்கை மீது ஆசிரியர் கொண்டிருந்த ஈடுபாட்டின் கற்பிதமோ எனவும் எண்ணத்தோன்றுகிறது.

**'மறக்க முடியவில்லை'**

இந்தச் சிறுகதைத் தொகுதியில் அமைந்துள்ள, 'மறக்க முடியவில்லை', 'இரண்டு வேடங்கள்', 'கடந்த கால ஞாபகங்கள்', 'விபத்து' ஆகிய நான்கு கதைகளும் காதல் என்ற போர்வையில் பெண்களிடம் ஏமாற்றம் கண்டு தவிக்கும் ஆண்களின் மனநிலையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இங்கு, 'மறக்க முடியவில்லை' என்ற சிறுகதையின் ஊடு ஓர் இளைஞனின் உண்மையான காதலையும், ஒரு பெண்ணின் ஏமாற்றுத்தனத்தையும் ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார். மேலும் காதலுக்கு சாதி, அந்தஸ்து கிடையாது என்று கூறிவந்த தத்துவங்களை எல்லாம் உடைத்து, 'காதல் என்பது என்ன..? அதனைத் தீர்மானிக்கும் சக்தி எது..?' போன்ற விடைகாணா கேள்விகளை கதையோட்டத்தில் வாசகர் மத்தியில் ஏற்படுத்திவிடுகிறார்.

சுதா - காவ்யா இருவரும் பல்கலைக்கழகத்திலே கல்வி பயின்று வருகின்றனர். இருவரிடையேயும் காதல் பூக்கள் மலர்கின்றன. ஆனாலும் அன்பின் உன்னதம் தோல்வியைக் கண்டுகொண்டது. சுதா உண்மையாகவே காவ்யா மீது அன்பு கொண்டிருந்த போதும் காவ்யா பணத்தை காரணம் காட்டி அவனை விட்டு விலகியச்செல்கிறாள். வேறொருவனை திருமணம் செய்துகொள்கிறாள். 'பணம் பாதாளம் வரையும் பாயும்' என்பது முதுமொழி. ஆனால் அது உண்மையான காதலையும் அழிக்கும் என்பதை இந்தச்சிறுகதை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. சுதா காவியாவை விழித்து வெளிப்படுத்தி நிற்கின்ற, "காவியா உங்கிட்ட இறுதியாகக்கேட்கிறன். நீஎன்னை பணம் இல்லாததினால் வெறுக்கலாம். பணம் எப்பவும் வரும் போகும். அது ஈசல்' ஒரு காலத்தில் வருவது போலவும், வண்ணத்துப்பூச்சிகள் பறப்பது போலவும்.." போன்ற வார்த்தைக் கோலங்கள் இதனை எடுத்தியம்பி நிற்கின்றன.

இந்தக்கதை இன்றைய இளைஞர் சமூகத்துக்கு சிறந்த படிப்பினையாகவும், அறிவுரை கூறும் பாடவிதானமாகவும் அமைந்துள்ளது.

மேற்படி கதையை ஒத்தவிதமாகவே 'இரண்டு வேடங்கள்' என்ற கதையம்சமும் அமைந்துள்ளது. 'கடந்த கால ஞாபகங்கள்' என்ற கதையம்சம் ஆறுமுகம் என்ற பாத்திரவார்ப்பின் சோக நினைவுகள் கடந்த கால ஞாபகமாக வெளிப்பட்டு நிற்பதை ஆசிரியர் காட்டியுள்ளார்.

**'விபத்து'**

'விபத்து' என்ற சிறுகதை அம்சம் வாடகைக்குக் குடியமரச் சென்ற இளைஞனைக் காதலிப்பது போல ஓர் முகத்தை வெளிப்படுத்துவதோடு வேறு ஆண்களுடனும் கள்ளத்தொடர்பு கொள்ளும் 'நதியா' என்ற பெண் பாத்திரத்தின் கதை நகர்வை எடுத்துக் காட்டுகின்றது. உண்மையில் எதிர்பாராமல் ஒரு சம்பவம் வாழ்க்கையில் இடம்பெற்று அதனால் நாம் பாதிக்கப்படும் போது அதனை விபத்து எனச் சுட்டுகிறோம். அதை ஒத்த விதமாக குமார் என்ற இளைஞனின் வாழ்க்கையில் நதியா என்ற பெண் பாத்திரவார்ப்பு வெளிப்படுத்தி நிற்கின்ற செயற்பாடுகள் எதிர்பாராத தாக்கத்தை வெளிப்படுத்திய காரணம் கொண்டே ஆசிரியர் 'விபத்து' என இச்சிறுகதைக்கு தலைப்பிட்டுள்ளார் என எண்ணத்தோன்றுகிறது.

**'ஆகாயத்தாமரைகள்'**

அடுத்து இந்தச்சிறுகதை தொகுப்பில் இடம்பெறும் கதையம்சமாக 'ஆகாயத்தாமரைகள்' அமைந்துள்ளது. சிங்கள - தமிழ் இனங்களுக்கிடையே நிலவிவரும் முரண்பாடுகளைத் தாண்டி இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் கைங்கரியமாக இக்கதை படைக்கப்பட்டுள்ளது.

"மனிதனாக உலகத்தில் பிறந்தால் எதற்கு சிங்களவன், தமிழன், முஸ்லிம் என்ற வேறுபாடுகள்..? தமிழர் வளர்க்கும் நாய்களும் சிங்களவர்கள் வளர்க்கும் நாய்களும் நான் சிங்களவன், நான் தமிழன் என்று சண்டையா பிடிக்கின்றன..?" என்ற ஆசிரியரின் கூற்று இதனை உறுதி செய்கிறது. முப்பது வருடகாலப் போரை இலங்கை கடந்து விட்டாலும், மனித மனங்களில் அதன் வடுக்களும், கொடூரங்களும் பிரிவினையை அதிகரிக்கும். இதனால் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை என்ற உணர்வின் வெளிப்பாட்டை வழிமொழிந்தே ஆசிரியர் இன ஐக்கியத்தை இக்கதையில் வலுயுறுத்தி நிற்கிறார்.

இங்கு, வாசுகி என்ற தமிழ்ப் பெண்ணினதும் பண்டா என்ற சிங்கள இளைஞனினதும் காதலை எடுத்துக்காட்டும் பகுதி இதற்கு தக்க சான்றாக அமைகிறது. என்னதான் இன ஒற்றுமையை ஏற்படுத்த முனைந்தாலும் ஒட்டுமொத்தமாக இனவுணர்வை அழித்துவிட முடியாது என்பதை வாசுகி - பண்டாவை பிரித்து அவர்களின் காதலை எதிர்த்த சமூகத்தை கதையில் காட்டுவதன் மூலம் அறிய முடிகின்றது. கதையின் இறுதிப்பகுதியில் பிரிந்த காதல் ஜோடிகளை இணைத்து கதையை முடித்துள்ளமை இன முரண்பாடற்ற சமூகத்தை வேண்டி நிற்கும் ஆசிரியரின் தூர நோக்கு வெளிப்பட்டிருப்பதை காணமுடியும்.

இந்தச்சிறுகதை தொகுப்பில் இடம்பெறும் 'நாளைய தேசம் உனது கைகளில்' என்ற கதையம்சம் அப்புக்குட்டி ஐயா என்ற முதியவரின் தன்னலமற்ற உதவியை எடுத்துக்காட்டுகின்றது. கல்வி கற்க வசதியற்று கற்கும் விருப்பம் இருந்தும் கடையொன்றில் தொழில் புரியும் குமார் என்ற சிறுவனின் கல்விக்குப் பண உதவி புரிந்தும் இறுதியில் யாருமற்ற அநாதையாக அப்புக்குட்டி ஐயா இறந்துவிடுவதை இக்கதை வெளிப்படுத்தி நிற்கிறது. தவிர தான் அனுபவித்த துன்பங்களை தன்னைப் போன்ற சிறுவர்களும் அனுபவிக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் படித்து சமூகத்திற்காக சேவை புரிய புறப்படும் இலட்சிய வீரனையும் இந்தக்கதையம்சம் சுட்டிநிற்கிறது.

(22ஆம் பக்கம் பார்க்க...)

**நாளை**

**19.07.2018**

வியாழக்கிழமை

**ஆடி 03**

திதி: ஸப்தமி மு.இ 07.34 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.ப. 02.00 வரை
சுபநேரம்: 07.31 – 09.01 வரை
ராகுகாலம்: 01.31 – 03.01 வரை

# நயினாதீவு இரட்டங்காலி ஸ்ரீமுருகப் பெருமானின் திருவருள் பேறு காண வாரீர்

நயினை நா.க.குமாரசூரியர்



**நயினாதீவு**

சக்திபீடங்கள் அறுபத்துநான்கினுள் சிறப்பிற்குரிய 'புவனேஸ்வரி' பீடத்தில் எழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை வாரிவழங்கும் உலக மாதாவாகிய அன்னை ஸ்ரீநாகபூசணி அம்பிகை கோயில் கொண்டு அருள் உரையும் புண்ணிய பூமியாக நயினாதீவு திகழ்கிறது. புராதன இதிகாசங்கள் இத்தீவை 'மணிபல்லவம்' எனப் போற்றுகின்றன. 'கடுகு சிறியதெனினும் அதன் காரம் பெரிது' என்ற முதுமொழிக்கு இணங்க அளவால் சிறியதெனினும் தொல்புகழால் தலைசிறந்த தீவாக விளங்குகின்றது. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற ஆன்றோர் கருத்துரைக்கு அமைவாக பல ஆலயங்கள் இத்தீவில் அமைவு கொண்டு அருளாட்சி புரிகின்றன.

**'இரட்டங்காலி' ஸ்ரீமுருகப் பெருமான்**

அந்தவகையிலே அருள்மழை பொழியும் ஸ்ரீநாகபூசணி அம்பிகையின் தென் திசையில், நயினாதீவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள 'இரட்டங்காலி' எனும் அழகிய பதியில் ஸ்ரீமுருகப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி பன்னெடுங்காலமாக மெய்யடியார்களுக்கு அருள்புரிந்து வருகிறார்.

எம்பெருமானுடைய விளம்பி வருட மகோற்சவம் இன்றைய தினம் கொடியேற்றத திருவிழாவுடன் ஆரம்பமாகின்றது.



முருகன் ஆலயம் அடியார்களின் பெருமுயற்சியாலும், சிவதர்மம் தழைத்தோங்க வாரிவழங்கும் மெய்யடியார்களின் பெருநிதி உதவியாலும் புதுப்பொலிவு கண்டுள்ளது. திருப்பணி வேலைகள் பல நிறைவேற்றப்பட்டு அழகுறக் காட்சி தருகின்றது.

> புதிதாக அமைக்கப்பட்ட 'அட்சயசுரபி' அன்னதான மண்டபத்தில் உற்சவ காலங்களில் அன்னதானப் பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முருகன் அடியார்கள் அனைவரும் உற்சவ காலத்தில் ஆலயத்துக்கு வருகை தந்து அவன் அருளாலே அவன் தாள் வணங்கி, வாழ்வில் சகல நலன்களும் கைகூட வழிபாடு இயற்றுவோம்.

ஆறுமுகப் பெருமானுக்கும் விநாயகருக்கும் புதிய சித்திரத் தேர்கள்,சப்பை இரதம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. திருவருள் செருக்கு எங்கும் நிலைபெற்றிருக்கும் திருப்பதியாக அடியவர்களுக்கு முருகப்பெருமான் அருள்காட்சி தருகிறார்.

**அருள் சிறப்பு**

நெஞ்சில் ஒருகால் நினைக்கின் பலகாலும் தோன்றும் தெய்வமே! அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும் வேலவனே! நெஞ்சில் அஞ்சேலென வேல் தோன்றும் வேலவனே! அருள் புரிக. உந்தன் காலடியை வணங்கினால் கடவுளர் யாவரையும் வணங்குதல் போலாகும். எமது தாயார் கண்மணி அம்மாள் ஏற்றி வைத்த திருவிளக்கு இன்றும் ஆலய முன்றலில் ஒளி பகர்ந்து கொண்டிருக்கின்றது.

*வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட*
*தீரவேல் செவ்வேல் திருக்கைவேல் வாரி*
*குளித்தவேல், கொற்றவேல், ஆர்மார்பும், குன்றும்*
*துளைத்தவேல் உண்டே துணை..!*

மேற்படி பாடலில் இருந்து வேலின் பெருமைகளை அறிந்து கொள்ள முடிகிறது. நயினை ஸ்ரீமுருகப் பெருமான் ஆலய மூலஸ்தானத்தில் வெற்றி வேலாய் எழுந்தருளி இருந்து அடியவர்களுக்கு முருகப் பெருமான் அருளீந்து வருகிறார்.

'சுற்றிநில்லாதே பகையே துள்ளி வருகுதுவேல்' என்று பாரதியாரால் பேற்றப் பெற்ற முருகா, ஆறுபடை வீடுகளில் அமர்ந்த பெருமானே முருகா!, தந்தைக்கு தந்தையாகி அப்பன் சுவாமியான ஐயனே முருகா! வேண்டத்தக்கதும் அறிவோய் நீ!. வேண்ட முழுதும் தருவாய் நீ!. வேண்டும் வரம் ஒன்று உண்டெனில் அதுவும் உந்தன் விருப்பன்றோ! நின் அருளும் நின் புகழும் வாழ்க.

**முருகன் அருளை நாடுவோம்**

புதிதாக அமைக்கப்பட்ட 'அட்சயசுரபி' அன்னதான மண்டபத்தில் உற்சவ காலங்களில் அன்னதானப் பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முருகன் அடியார்கள் அனைவரும் உற்சவ காலத்தில் ஆலயத்துக்கு வருகை தந்து அவன் அருளாலே அவன் தாள் வணங்கி, வாழ்வில் சகல நலன்களும் கைகூட வழிபாடு இயற்றுவோம்.

*உருவாய் அருவாய் உளதாய் இலதாய்*
*மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்*
*கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்*
*குருவாய் வருவாய் அருள்வாய் குகனே..!*

உருவமுள்ளவராகவும், உருவமில்லாதவராகவும், உள்ள பொருளாகவும், காணவியலாத பொருளாகவும், நறுமணமாகவும், அந்த நறுமணத்தை உடைய மலராகவும், இரத்தினமாகவும் அந்த இரத்தினம் வீசும் ஒளியாகவும், உயிர் இடம்பெறும் கருவாகவும், உடலாகவும், உயிராகவும் நற்கதியான புகலிடமாகவும் அந்த நற்கதியை நோக்கிச் செலுத்தும் விதியாகவும் விளங்கும் குகமூர்த்தியே! தேவரீர் குருமூர்த்தியாக எழுந்தருளிவந்து அடியவர்களுக்கு அருள் புரிவீராக.

---

# 'ஆகாயத்தாமரைகள்'

இந்தச்சிறுகதையம்சம் இன்றைய இளைஞர்களைத் தட்டிக் கொடுப்பதாகவும், தன்னலமற்று பிறருக்கு உதவிபுரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

**'தொடர்கதை'**

இந்தத்தொகுப்பில் இடம்பெறும் இறுதிக்கதையம்சமாக 'தொடர்கதை' அமைந்துள்ளது. இக்கதை மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளையும், அவர்கள் சமூகத்தில் எவ்வாறு மதிக்கப்படுகின்றனர் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. 'கந்தன்' என்ற இளைஞன் கதாபாத்திரத்தை மையப்படுத்தி அசைவுறும் இந்தச் சிறுகதை அவனது பூர்வீகம், வாழ்க்கை, கல்வி போன்றவற்றை தொடர் சம்பவங்களாக குறிப்பிட்டு ஒரு வரலாறு போல வெளிப்பட்டு நிற்கிறது.

இந்தச்சிறுகதையம்சம் மலையக மக்கள் இந்தியாவிலிருந்து கண்டிச்சீமைக்கு வந்ததன் நோக்கம், அங்கு ஆடு, மாடுகளைப் போல அடைக்கப்பட்டு கூடிய உடல் உழைப்பில் குறைந்த ஊதியத்திற்கு வேலை வழங்கப்பட்ட இன்னல்களை பதிவு செய்கிறது.

இந்தச்சிறுகதையை வாசிக்கும் போது,

*"ஊரான ஊரிழந்தேன்*
*ஒற்றைப்பனை தோப்பிழந்தேன்*
*பேரான கண்டியிலே*
*பெத்த தாயை நா மறந்தேன்*
*பாதையிலே வீடிருக்க*
*பழனிச்சம்பா சோறிருக்க*
*ஏண்டி வந்தே கண்டிச் சீம.."*

என்ற மலையக நாட்டார் பாடல் எந்தன் நினைவுகளை ஆசுவாசமாக சுவாத்தியம் செய்கின்றன.

இந்தப்பாடல் மலையக மக்களின் ஏக்கத்தையும் தவிப்பையும் வெளிப்படுத்தவது போலத் தான் கந்தனது குடும்பத்தின் நிலையும் எடுத்துக்காட்டப்படுகின்றது. இத்தகைய இன்னல்களைக் கூட பொருள்படுத்தாமல் கல்வியில் முன்னேறியும் 'இந்தியக்காரர்' ,'கள்ளத்தோணி' என்ற அடைமொழிகள் மலையக மக்களை காலங்காலமாக கீழ்நிலையிலேயே வைத்திருந்தமையை கந்தனின் நேர்முகத்தேர்வில் பிறப்புச் சான்றிதழை பார்த்துவிட்டு வேலைதர மறுக்கும் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது.

ஆனாலும் 'முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்' , 'இளங்கன்று பயமறியாது' போன்ற வாசகங்களுக்கேற்ப கந்தன் தொழில்வாய்ப்பைப் பெற்று சொந்த வீடு, காணி என்பவற்றைப் வாங்கி தன்னுடைய சமூகத்தை முன்னேற்றவதாக கதை முடிகின்றது.

**சமூக விடுதலைக்கான ஆரம்பம்**

எனவே, 'ஆகாயத்தாமரைகள்' என்னும் சிறுகதை தொகுப்பில் இடம்பெறும் கதைகளைத் தொகுத்து நோக்கும் போது இன்றைய சமூகத்தில் நாம் கண்டுகொள்கின்ற சம்பவங்கள் யதார்த்தபூர்வமாக வெளிப்பட்டு நிற்கின்றன. குறிப்பாக இளைஞர்களை, ஆசிரியர்களை சிந்திக்கத்தூண்டுவதாக கதைகள் அமைந்துள்ளன. எந்தவொரு படைப்பாளியும் அனுபவமின்றி ஒரு படைப்பை உயிரோட்டமுடையதாக படைத்துவிட முடியாது. அவ்வகையில் 'ஆகாயத்தாமரைகள்' சிறுகதை தொகுப்பு ஆசிரியரின் அனுபவங்கள், எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் ஒன்றாக சங்கமிக்கும் படைப்பாக அமைந்துள்ளமை சிறப்பு.

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

### பெறுகைக்கான அழைப்பு
### மருத்துவ உபகரணப்பொருள்கள் வழங்கல் - 2018

**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழு தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த மருத்துவ உபகரண பொருள்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருள்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்**

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| Line Ministry - 2018 | Hematology Analyzer – 5 Part | 01 | 30,000.00 |

- விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரண பொருள்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- பெறுகைக்கு மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப் படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
- நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப் படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 18.07.2018 தொடக்கம் 01.08.2018 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைக்கேள்விகள் 02.08.2018 ஆந் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக் கிளை அறையில்** பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 02.08.2018 ஆந் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
- தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் ( T.P:021 229 0111 ,021 2290105, Fax : 021 2290 104 ) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.
- கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்தியகலாநிதி. த. பூங்கோதை**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு**

(N/7296)(11,17)

---

## சிறி குமரன் ரெக்ஸ்

SKT

**ஆடி பிறந்திருச்சி ஆடித்தள்ளுபடி ஆரம்பமாயிருச்சு**

**தட்டாதெரு சந்தியில் அசத்தலான ஆடித் தள்ளுபடி!**



**இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள் அனைத்தும் தள்ளுபடி விலையில்**

**விசேடமாக Office wear சாறிகள் மிக குறைந்த விலையில்**

**இல. 770, கே.கே.எஸ். வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.**

(Sup/1525)(10)

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 16.06.2018 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**

### வைரவன் முருகேசு

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.07.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**துவாரகை வீதி,**
**உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.**

(CS/18299)(11,17)

---

## நினைவலைகள்

### 28 ஆம் ஆண்டு ஓராண்டு





**அமரர்**
### இளையதம்பி இரத்தினேஸ்வரன்

**மண்ணில்** 17.09.1937
**விண்ணில்** 23.07.1990

### Dr.இரத்தினேஸ்வரன் சுரேஸ்

**மண்ணில்** 07.04.1970
**விண்ணில்** 18.07.2017

அப்பா நீங்கள் இவ்வுலகை விட்டுச் சென்று இன்றுடன் 28 ஆண்டுகள். தனது மூன்று செல்வங்களையும் அன்போடும் பாசத்தோடும் வளர்த்து சமுதாயத்திலே பெரியவர்களாகத் திகழ வேண்டும் என்ற உங்கள் எண்ணத்தை நாம் நிறைவேற்றினோம். ஆனால் காலன் அவன் பொறுக்காததால் நீங்கள் இறந்த அதே ஆடிமாதத்திலே மருத்துவனாகத் திகழ்ந்த உங்கள் செல்வத்தை அண்ணாவுக்கும் தம்பிக்கும் பாசப்பிணைப்பாக இருந்த என் மகனைக் கங்காரு நாட்டிலே பறித்தாயோ? நாம் புலம்புகின்றோம். எக்காலத்தில் உங்களை இனிக் காண்போம். உங்கள் இருவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**271/1A, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி.**


(CS/18284)(11,17)

**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 05 . 10 . 1925



**மறைவு** 17 . 07 . 2018

### சரவணமுத்து கந்தையா

மாரீசன்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும் மேதர் ஒழுங்கை மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கந்தையா நேற்று (17.05.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் சிவலிங்கம் (மயூரா), சிவசறோநிதி, இரத்தினலீலா (கியூமெடிக்கா மு.ப. ஆசிரியர்), சிவகுமார் (ரவி), ரேணுகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தனலட்சுமி, சிறீவள்ளல், காலஞ்சென்ற மணிமாறன் மற்றும் வசந்தலீலா, இராசபுலேந்திரன் (இ.போ.ச. வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரன், வத்சலா, கமலகாந், சசிகாந், வனுஜா, சியாமா, சஜீவன், ஜிந்து, கமல்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய், பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சிவலிங்கம் (மகன் - 077 613 9612),**
**சிவகுமார் (ரவி - மகன் - 077 541 5461)**

**மேதர் ஒழுங்கை,**
**மானிப்பாய்.**

(CS 18324/15/18)

**மோட்டார் வாகனம் விற்பனைக்கு**

புத்தம் புதிய சூட்டிப்பெப்
மோட்டார் வாகனம் விற்பனைக்கு
077 774 0377

**E,S Printers**

மக் பிரிண்ட் (MUG) 450/=

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

**VSP Farm**

எம்மிடம் கோழியிறைச்சி மற்றும் முட்டை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கோழி இறைச்சி 1Kg - 480/=

**VSP Farm Shop**
தெணியம்பை வல்வெட்டித்துறை.
077 023 8493

**தினமும் கொண்டாட்டம்**

விருந்தினர் விடுதி
யாழ். ஒடியல் கூழ் - 150/=
இந்தியன் தம் புரியாணி -250/=
மதிய / இரவு உணவு
பிறைற் றைஸ் / நூடில்ஸ்
பைட்ஸ் மற்றும் மேலும் பல

**யாழ்பாடி**
49/51, அம்மன் வீதி, நல்லூர்.
021 222 6868/075 987 5800

## மரண அறிவித்தல்

### ஞானசொரூபன் ஞானஜினோசன்



வேம்போலை, இணுவில் கிழக்கு, இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசொரூபன் ஞானஜினோசன் 17.07.2018 திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் ஞானசொரூபன் (ஆசிரியர் - உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்) - அமிர்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்) தம்பதிகளின் மூத்த மகனும், செல்வரட்ணம் கிருஷாலினி, காலஞ்சென்ற ஞானானந்தம் மற்றும் சரோஜினிதேவி தம்பதிகளின் பேரனும், ஞானகுகர்சன், ஞானவி ஆகியோரின் சகோதரரும், காந்தகுமார் கலையரசி (லண்டன்), சித்தார்த்தன் திவாகினி (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும், ஞானகரன் வாசுகி (உரிமையாளர் - கவீஷா மல்ட்ரிமாட்), ஞானலோசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), சுரேஸ்குமார் ஊர்மிளா (லண்டன்), தர்மிகா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பெறாமகனும், கதீசன், கஜித்தன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், நிலாவினி, ஞானகவீஷன் கருநிதா மற்றும் ஜிருஷன், சாருஷன், நிருஷன் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (CS/18304) (11,17)


**வேம்போலை,
இணுவில் கிழக்கு, இணுவில்.**

தகவல்
**குடும்பத்தினர்.**

advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 08 . 1947



மறைவு 16 . 07 . 2018

### கந்தையா இராஜசிங்கம் (அம்புச்சி)

*(ஓய்வுபெற்ற புத்தளம் சீமெந்து கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)*

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இல.49/85, கோயில் வீதி, குருமன்காடு வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராஜசிங்கம் (அம்புச்சி) 16.07.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (மாம்பழம்) சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் நேசம்மாதம்பதியரின் அன்பு மருமகனும், பிறேமாவதியின் அன்புக் கணவரும், ஜெயப்பிரியா, விஜயலட்சுமி, சுகாசினி, யதுஷன், காலஞ்சென்ற குகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி (பூமணி), இராசலட்சுமி (கனடா), இராசபுஷ்பம், செல்வம் (கனடா), காலஞ்சென்றவர்களான இராஜலிங்கம் (ஈழநாடு), இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அன்ரன், முருகானந்தன், கிருஷ்ணானந்தன், வினுஜா ஆகியோரின் அன்பு மாமனும், அருளானந்தன், ஆனந்தன், நர்ராஜா, கண்மணி, சுகுமார் பிரபாவதி, மகாராஜா கலாவதி, சிறீதரன் மதி, காலஞ்சென்ற கந்தசாமி (பைனா), காலஞ்சென்ற தி.இராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெலக்ஷனா, ஜெரோசன், ஜெனுஷன், விதுனன், விதுஷனா, சிரோனி, சிரோஜித் ஆகியோரின் அன்புப் பேரனும், சகுந்தலா, சாந்தி, கிரி, வாசுகி, கஜன், மயூ, ஐங்கரன், அசானி, அச்சுதன், ரஜீவன், கோகுலன், யாதவன், மிலானி, காலஞ்சென்றவர்கான மங்கா, கருணாகரன் ஆகியோரின் மாமாவும், நிம்மி, காண்டீ, பகீர் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**இல.49/85, கோவில் வீதி,
குருமன்காடு, வவுனியா.**

தகவல்:
**குடும்பத்தினர்**

077 343 3932 / 077 749 7725

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்
## பொது அறிவித்தல்

வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற பிரதேசத்தினுள் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் பொதுச்சுகாதாரத்திற்கும் ஊறு விளைவிக்கும் வகையில் பராமரிப்பின்றிக் காணப்படும் ஆதனங்களை உடனடியாகத் துப்புரவாக்கி சீராக பராமரிக்குமாறு ஆதன உரிமையாளர்கள் /பராமரிப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 14 நாள்களுக்குள் துப்புரவு செய்யப்படாத ஆதனங்கள் நகராட்சிமன்றத்தின் பராமரிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

**கோ.கருணானந்தராசா,**
தவிசாளர்,
18.07.2018 வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்
(in.7305) (13.17)

## INVITATION FOR EXPRESSION OF INTEREST FOR THE PRODUCTION OF VIDEO FILM ON TOURISM PROMOTION IN THE NORTHERN PROVINCE

### CHIEF MINISTER'S MINISTRY
### NORTHERN PROVINCE - 2018

The Chief Minister's Ministry now invites Expression Of Interest (EOI) from suitable individual or firms who have the minimum qualifications given below for carrying out production of video films programme on tourism promotion in the Northern Province. The firm or Individual is responsible for ensuring the quality and timely delivery of the EOI documents and necessary reports required in the bidding documents.

**1. Required qualifications**

The service provider will be required to have the following

- More than 03 years experience working in the smiler field
- Extensive experience in producing tourism related documents for publication and documentaries for public sector organizations with the aim of reaching both local and international audience
- Experience in working with government agencies / international organizations
- Effective knowledge about the Province's culture and heritage and Language skills in Tamil, Sinhala & English should be possessed
- Excellent technical capacities (state of the filming equipment performing high definition) to ensure smooth and high quality production
- Experience in development programme commenter

**2. The key tasks for the service provider**

Under the direct supervision of the Secretary, Chief Minister's Ministry, NP with the guidance of the committee appointed for this propose the service provider will be required to do the following.

- Develop the documentary film's overall concept and scenario.
- Interview selected participants.
- Visit to the selected places as per the instruction given.
- Develop documentary script and story board to be used in the film.
- Perform appropriate video filming and shoots interview with the identified sites and including local & foreign tourist and other stake holders.
- Present 1st & 2nd draft documents of the Video film.
- Produce a final documentary film in DVD of 15 – 20 minutes and a trailer lasting to 2 Minutes (Additional Video)

1. Interested parties may obtain further information from **the Planning Branch, Chief Minister's Ministry Northern Province, A-9 Road, Kaithady (T.P 021 205 7114)** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 16.00 hrs.
2. A complete set of Bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the**, Secretary, Chief Minister's Ministry Northern Province, A-9 Road, Kaithady From 18th July 2018 until 1st August 2018 from 09.00 hrs to 15.00 hrs**on working days upon payment of a non-refundable fees of Rs.500.00 for each Bids .The method of payment should be by cash.
3. Bids shall be **delivered or sent by registered post to the Chairman, Provincial Ministry Procurement Committee, Chief Minister'sMinistry, Northern Province, A-9 Road, Kaithady on or before 11.00 hrs on 2nd August 2018**. Bid number must be written on the left hand upper corner of envelope. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend.
4. Bids shall be valid up to 60 days from **2nd August 2018** after the deadline for Bid Submission

**Mrs.V.Ketheeswaran.**
Chairman,
Provincial Ministry Procurement Committee,
Chief Minister's Ministry,
Northern Province
17.07.2018
(IN/7306)(10)

# விஜயகலாவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பேச்சுச் சுதந்திரத்தைப் பறிப்பதற்குச் சமம்

## வாராந்தக் கேள்வி-பதிலில் முதலமைச்சர் கருத்து

**1.கேள்வி**-வடக்கில் இராணுவத்தின் வசம் இருந்த 92 சதவிகிதமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் கூறியுள்ளதே? இதுஉண்மையா?

**பதில்**- புளுகு, அண்டப்புளுகு, புள்ளிவிபரங்கள் என்று கூறுவார்கள் (Lies, Bloody lies and Statistics). அதுபோலத்தான் இந்தவிடயம் அமைகின்றது. நாங்கள் பதவிக்குவந்த போது, அதாவது 2013 கடைசியில் வலிகாமம் வடக்கில் சுமார் 6500 ஏக்கர் மக்கள் காணிஇராணுவத்தினர் கைவசம் இருந்தது. இப்பொழுது அவற்றில் ஒரு பகுதியை மட்டும் கொஞ்சம் கொஞ்சமாக கையளித்துள்ளார்கள். அதை 92 சதவிகிதம் என்று கூறுவது, தாங்கள் 2009ல் கைவசம் வைத்திருந்த காணிகளின் விகிதாசார அடிப்படையில், தற்போது 8 சதவிகிதமேமிகுதிஉள்ளதென்பதையே அவர்கள் கூறுகின்றார்கள். இது யாழ் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கில் மட்டுமே.



நாம் பதவியேற்றபோது65000ஏக்கர் காணிகளைவடமாகாணம் முழுவதிலும் படையினர் கையகப்படுத்திவைத்திருந்தார்கள். அவற்றுள் பெருமளவானவை அரசகாணிகள். அவற்றைப் பற்றிஎதுவும் கூறாமல், 92 சதவிகிதம் கையளித்துவிட்டதாகக் கூறுவதன் அர்த்தம் அரசகாணிகளைத் தாம் தான்தோன்றித்தனமாய் ஆயிரம் வருடங்களுக்கும் தொடர்ந்துவைத்திருக்கலாம் என்றஎண்ணத்தில். சுமார் 60000ஏக்கர் வடமாகாணக் காணிகள் இப்பொழுதும் படையினர் வசம் இருக்கின்றன என்பதே எமக்குத் தரப்பட்டஏற்றுக் கொள்ளக்கூடிய புள்ளிவிபரங்கள்.

**2. கேள்வி**- முதலமைச்சரிடம் அனுமதிகேட்டுவைத்தியசாலைகளில் புள்ளிவிபரங்கள் பெறவேண்டியஅவசியம் தமக்கில்லை என்றுஇராணுவத்தினர் கூறுகின்றார்களே?

**பதில்**- இன்னமும் அவசரகாலநிலைமை நீடிப்பதாக படையினர் நினைக்கின்றார்கள். அவசரகாலச்சட்டம் இல்லாததற்காலத்தில் எந்தஒருஅரசநிறுவனத்தில் சென்றுவிபரங்கள் சேகரிப்பதென்றாலும். அவை அந்த நிறுவனங்களின் தலைமைஅதிகாரியின் அனுமதியுடனேயேநடைபெறவேண்டும். தம்பாட்டுக்குப் போய் பாதுகாப்புஎன்றஅடிப்படையில் எதுவும் கேட்கமுடியாது. அதற்குச் சட்டம் இடம்கொடுக்காது. பாதுகாப்பு என்ற போர்வையில் பலவிதமான அட்டூழியங்களைப் படையினர் இது காறும் புரிந்து ள்ளார்கள். போர்க்குற்றங்கள் அவற்றுள் அடங்குகின்றன. எனவே இவ்வாறான தருணங்களில் பாதுகாப்பு படையினரின் முறையற்ற நடவடிக்கைகளை மக்களுக்கு எடுத்துரைப்பது அவசியம்.

அத்துடன்போர்முடிந்து 9 வருடங்கள் நிறைவடைந்தபின்னரும், பாதுகாப்பு,பாதுகாப்பு என்றுபயமுறுத்தும் படையினர், அந்தப் பாதுகாப்புக்கானகாரணங்கள் என்ன என்பதை எங்களுடன் பேசிமுடிவுக்குவரவேண்டும். வெளிநாடுகளிடமிருந்துஎமக்குபாதுகாப்புத் தேவைப்படுகிறதா? உள்நாட்டில் தேவைப்படுகின்றதா? என்பதைஅவர்கள் கூற வேண்டும். வெளிநாடுகளைக் குறிப்பிட்டுதேசியபாதுகாப்பைப் பற்றிக் கூறுவது ஒன்று. தேசியபாதுகாப்புவேண்டுமெனில், அதைஏற்றுக்கொள்ளலாம். ஆனால் சும்மா பாதுகாப்பு, பாதுகாப்பென்று மக்களின் காணிகளைப் பிடித்துக் கொண்டும் , வருவாயைஎடுத்துக்கொண்டுமிருப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன் இவர்கள் தாம் நினைத்தவாறு வைத்தியசாலையினுள் நுழைந்து தரவுகள் சேகரித்தால், பொலிசாரின் அதிகாரங்களை படையினர் கைவசப்படுத்தியதாகஅமையும். உண்மையில் இராணுவத்தினர் இவ்வாறானபுள்ளிவிபரங்களைவைத்தியசாலைகளில் இருந்துசேகரிக்கவேண்டுமென்றால், பொலிசாரை நாடி, அவர்கள் ஊடாகவே இதைச் செய்யவேண்டும். இராணுவத்தினருக்குப் போர்க்காலம் போல் இப்பொழுதும் அதிகாரங்கள் இருப்பதாகநினைப்பது தவறு.உண்மையில் வடமாகாணத்தில் படையினர் தொடர்ந்திருக்க வேண்டியஎந்தஅவசியமும் இல்லை. அரசியல் காரணங்களேஅவர்களை இங்கு நிலை நிறுத்தியுள்ளன.

**3. கேள்வி**- வடக்கில் சாதாரணமக்களையும் இராணுவத்தினரையும் பிரிக்கநீங்கள் எத்தனிப்பதாக இராணுவத் தளபதிமகேஷ் சேனநாயக கூறியுள்ளாரே? அதுபற்றி?

**பதில்** - மகேஷ் எனதுநண்பர். அவர் கூறுவதுஅந்தவரையில் உண்மை. எமதுமக்களும் இராணுவத்தினரும் நெருக்கமாக இருப்பதை நான் விரும்பவில்லை. காரணம், அந்த நெருக்கத்தைக் காட்டி இராணுவம் இன்னும் 1000 வருடங்களுக்குஎமது பிரதேசங்களில் இருந்துவர எத்தனிக்கும். அதனால் பாதிப்படையப்போவதுஎமது இனமே. இராணுவத்தின் வேலைவடமாகாணத்தில் முடிவடைந்துவிட்டபடி யால்அவர்கள்திரும்பகொழும்புக்குச் செல்வதேமுறையானது. அப்படி இராணுவம் தரித்துநிற்க வேண்டுமென்றால், நான் ஏற்கனவே கூறியுள்ளேன் 'இராணுவத்தைஒன்பதாகப் பிரியுங்கள். ஒன்பதில் ஒருபங்கை வேண்டுமெனில் ஒவ்வொரு மாகாணத்திலும் நிறுத்துங்கள்'என்று. சலுகைகளையும் பணத்தை யும் தந்து இராணுவம் இங்கு நிலைபெற நினைப்பதுஅவர்கள் எம்மைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகவே. எங்கள் மீதுகரிசனை இருப்பதால் அல்ல.

இவற்றை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். பெரும்பான்மையினரின் அரசியலுக்கு எமதுசாதாரணமக்களின் வறுமையைப் பாவித்து இராணுவத்தினர் உதவவருவதுசரிபோல் தெரியும். வருங்காலத்தில் பாதிக்கப்படப் போவதுஎமது இன மக்களே. படைகளில் சிலருக்குதெற்கில் ஒருகுடும்பம் வடக்கில் ஒருகுடும்பம் இருப்பதுநாடறிந்தஉண்மை.

அடுத்து, அரசாங்கத் திணைக்களங்கள், தகவல்களை இராணுவத்தினருக்கு வழங்குவதுபற்றியும் நண்பர் கூறியிருந்தார். அதுபற்றிஏற்கனவேபதில் கூறியுள்ளேன். இராணுவத்தினர் தமிழர் பகுதிகளில் தமது பணிகளைநிறுத்தப்போவதில்லைஎன்றும் கூறியுள்ளார் இராணுவத்தளபதி.நாம் எதிர்பார்ப்பதுதான் இது. தருணம் வரும் வரையில் தான் இவ்வாறான கருத்துக்களில் தங்கி வாழமுடியும். தருணம் வந்ததும் விட்டு ஏகவேண்டியிருக்கும். உதாரணத்துக்கு இந்திய அமைதிப் படையை இந்தியா திரும்ப அழைக்க வேண்டி ஏற்பட்டது வி.பி.சிங் இந்தியாவின் தலைமை அமைச்சர் ஆகியதால்தான். இங்கிருந்துநாம் ஒருபோதும் திரும்பமாட்டோம் என்ற கூற்றுடன்தான் இந்திய அமைதிப் படையினர் வந்தார்கள். ஆகவேதருணங்கள் எப்போது வரும் என எம்மால் கூறமுடியாது. மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எதனையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

**4. கேள்வி**- கௌரவ விஜயகலா சம்பந்தமாக பொலிஸார் உங்களை வந்து சந்தித்தார்களா?

**பதில்** - ஆம்.திட்டமிட்டகுற்றங்கள் தடுப்புப் பிரிவினர் வந்தார்கள். விஜய கலா பேசிய கூட்டத்தில் நானும் பங்கேற்றபடியால் என்னிடம் சிலகேள்விகள் கேட்டார்கள். கௌரவ அமைச்சர்கள் வஜிரஅபேவர்த்தன,திலக் மாரப்பனபோன்றவர்களிடம் வாக்குமூலம் பெற்றதாகக் கூறினார்கள். விஜயகலாவின் பேச்சில் இடம்பெற்றசிலகேள்விக்கிடமான பகுதிகளைப் பற்றி எனதுகருத்தைக் கேட்டார்கள். 'அந்த நாளும் வந்திடாதோ' என்று ஒருவர் அங்கலாய்ப்பதுகுற்றமாகாதுஎன்று கூறினேன். புலிகள் திரும்பவும் வரவேண்டும் என்றுநாங்கள் பாடுபடுகின்றோம் என்றுஅவர் கூறியது இந்தப் பாதுகாப்புச் சூழலையேஅன்றி, வன்முறைகளைமீண்டும் தொடங்கும் நோக்குடன் அவர் கூறவில்லை என்று கூறித் தனதுகட்சிக்குவிசுவாசமாகவே இது காறும் அவர் நடந்துவந்துள்ளார். அதைப் புரிந்துகொள்ளவேண்டும் என்றேன். அவருக்குஎதிராகநடவடிக்கைஎடுத்தால் அதுஎமதுபேச்சுச் சுதந்திரத்தைப் பாதிப்பதாகும்.

*க.வி.விக்னேஸ்வரன்*
*முதலமைச்சர் வடமாகாணம்*


## மரண அறிவித்தல்



## கந்தையா தணிகாசலம்

யாழ்.பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தணிகாசலம் 14.07.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - அழகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும், குணரதி, சுதாகரன் (சுவிஸ்), குணவதனி, குணரஜனி (சுவிஸ்), சிறிதரன் ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சுபத்திரை, பூமணி, கனகரத்தினம், வடிவேலு மற்றும் இரத்தினம், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் ரகுபதி (சுவிஸ்), சிறிக்காந்தன், ராகினி (சுவிஸ்), யசோ ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, செல்லத்துரை, செல்வராணி, திருநாவுக்கரசு மற்றும் ஆறுமுகம், பத்மாவதி, அருளம்மா, நாகராசா, குமாரசாமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிரிதாஸ் (டோகா), கிருசாணி (சுவிஸ்), நதிஸ் (டோகா), கவிமன் (சுவிஸ்), கவீனா (சுவிஸ்), தர்சி (பிரான்ஸ்), சுதன் (சுவிஸ்), சாரங்கி (சுவிஸ்), ஜெனாங்கி (சுவிஸ்), ராகவி (சுவிஸ்), பைரவி (சுவிஸ்), சுஜீவன், சர்வின், துசானா ஆகியோரின் அன்புப் பேரனும், கஸ்மியா, சுஜீன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2018) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல் வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்
குடும்பத்தினர்.

021 225 2136, 077 843 2078

# வளங்களின் பயன்பாடு

## அறிவும் நுட்பமும் சார்ந்த பொருளியல்

வித்தகன்

புவியியலாளர்கள் மனித இனத்தின் வளர்ச்சி வரலாறானது சூழலுக்கும் மனிதனின் அறிவு வளர்ச்சிக்கும் இடையே நிகழ்ந்த போராட்ட வரலாறு என்று கூறுகின்றனர். சூழலை முதன்மைப்படுத்தும் சூழலாதிக்கவாதக் கோட்பாடுகளையும், மனித நடவடிக்கைகளையும் முதன்மைப்படுத்தும் மானிட ஆதிக்கவாதக் கோட்பாடுகளையும் முன்வைக்கின்றனர். மனித இனத்தின் அறிவு, தொழில்நுட்ப வளர்ச்சி என்பன படிப்படியாக எவ்வகையில் வளத்தைப் பயன்பாட்டுக்கு உட்படுத்தி வந்தது என்பதையும், பயன்படுத்தி வருகிறதென்பதையும் முறைப்படி விளக்குகின்றனர்.

புவியியலாளர் சூழலை அமைவு, அமைப்பு, தரைத்தோற்றம், காலநிலை, மண், இயற்கைத்தாவரம், விலங்கினவாழ்வு என வகைப்படுத்தியுள்ளனர். மனிதன் இவற்றில் செல்வாக்கு செலுத்துவதையும் மனிதன் இவற்றின் செல்வாக்குக்கு உட்படுத்தப்படுவதையும் விபரித்துள்ளனார். தவிர இரண்டிற்கு இடைப்பட்ட நிலையும் உண்டு எனவும் விளக்குகின்றனர்.



### மனித அறிவும் தொழில்நுட்பமும்

வளங்கள் பற்றி விபரிக்கும் அறிஞர்கள் பலர் மனித வளமே உலகிலே கிடைக்கும் எல்லா மூல வளங்களையும் விடச் சிறந்தது என்கின்றனர். வளம் என்பது அறிவியல் கலாசாரத்தின் செயற்பாடே என சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். புவியில் பரந்துள்ள இயற்கை நிலமைகளை வளங்களாக மாற்றுவதற்கு மனிதஅறிவு வளர்ச்சி இன்றியமையாதது. மனிதஅறிவு எனும் போது கல்வி கற்ற தொழில்நுட்ப அறிவு கொண்ட சமூகத்தை குறித்து நிற்கிறது. ஒரு நாடு அபிவிருத்தியடைய வேண்டுமெனில் அந்தநாட்டு மக்கள் இயற்கைவளங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற அறிவு கொண்டவர்களாக இருத்தல் அவசியம். இல்லாது போனால் அந்த நாட்டில் காணப்படும் வளங்கள் மறைவளங்கள் என்ற நிலைமையிலேயே காணப்படும்.

இறப்பர் மரம் அமேசன் காடுகளில் இயற்கையாக வளரும் தாவரம். இறப்பர் மரத்திலிருந்து பால் பெற்று தொழில்நுட்ப முறைகளைப் புகுத்தி ரயராக, ரியூப்பாக பயன்படுத்தலாம் என்ற அறிவு வளரும் வரை அவை மறைவளமாகவே இருந்துள்ளன. இவ்வாறு இன்றும் பல வளங்கள் எமது அறிவு விருத்தியின்மையால் பயன்பாட்டுக்கு உட்படாது இருத்தல் கூடும். எதிர்காலத்தில் மேலும் வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்பங்களால் அவற்றின் பயன்பாடு கண்டுபிடிக்கப் படலாம்.

அது வரை அவ்வளம் ஒரு மறைவளமாக அல்லது உள்ளார்ந்த வளமாகவே இருக்கும். இதிலிருந்து மனித அறிவு, தெழில்நுட்ப விருத்தி என்பனவே முக்கியமான வளம் என்பது பெறப்படுகிறது. ஒரு நாட்டின் அபிவிருத்தி அந்நாட்டில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத்தர நிலமைகளைக் கொண்டும் அளவிடப்படுகிறது. இதன்படி பின்வரும் சூத்திரம் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை வளத்துடனும் தொழில்நுட்ப அறிவுடனும்




இணைந்த கலாசார மேம்பாட்டுடன் தொடர்புபடுத்தி விளக்கம் தருகிறது.

SL = RXC/P

இங்கு, 'R' என்பதில் விவசாயம், கைத்தொழில், சேவைகள் என்பவற்றின் அபிவிருத்திக்குரிய வளங்கள் உள்ளடங்குகின்றன. 'e' என்பது தொழில்நுட்பத்தின் இணைந்த மனித கலாசாரத்தைக் குறிக்கிறது. 'P' என்பது நாட்டின் மொத்த மக்கள் தொகையையும், '5L' என்பது தனிநபர் வாழ்க்கைத்தரத்தையும் குறிக்கிறது. புதிய வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டாலோ மொத்த உற்பத்தி அதிகரிக்கும் என்பதைச் சூத்திரம் விளக்குகிறது.

### உற்பத்தியாளன்

மனிதன் வளங்களின் உற்பத்தியாளனாகவும், நுகர்வோனாகவும் விளங்குகிறான். இயற்கை வளமாக மாறவேண்டுமாயின் மனிதனின் உழைப்பு இன்றியமையாதது. அந்த உழைப்பு உளஞ் சார்ந்ததாகவோ, உடல் சார்ந்ததாகவோ அமையலாம். உழைப்பினால் பெறும் அனுபவங்கள் உற்பத்தியை வினைத்திறன் மிக்கதாக மாற்றுகின்றன. இவ்வாறே மனித நாகரிகங்கள் வளர்ந்துள்ளன. நாகரிக வளர்ச்சியில் மனித உட்ல் உழைப்புக் குறைய உள உழைப்பே அதிகரித்து வந்துள்ளதை காண்கின்றோம். உள சக்திவள அதிகரிப்புக்கு உடல் உறுதியானதாகவும், ஆரோக்கியம் உள்ளதாகவும் இருத்தல் அவசியம். உள ஆரேக்கியத்துக்குக் கல்வியும், பயிற்சியும் அவசியம். மனித வள அபிவிருத்தியானது மனிதனின் நல் ஆரோக்கியத்திலும், முறையான கல்வியிலுமே தங்கியுள்ளது.

### தேவைகள்

மனிதன் உழைப்பது நுகர்வுக்கானது. எனவே மனிதனின் தேவைகளை இரு வகையாகப் பிரிக்கலாம்.

- அடிப்படைத் தேவைகள்
- ஏனைய தேவைகள்

அடிப்படைத் தேவைகள் எனும் போது உணவு, உடை, உறையுள் என்பனவாக அவை அமையும். இந்த அடிப்படை தேவைகளுடன் மனிதன் திருப்தியடைவதில்லை. மனிதனுக்கு ஆடம்பரமாகவும், வசதியாகவும் வாழும் விருப்பம் உண்டு. மனித அறிவு வளர வளர இதுவும் வளரும். "அடிப்படைத் தேவைகள் நிறைவுற்றதும் மனித மனம் மேலதிக தேவைகளை உருவாக்கிக் கொள்ளும்" என்கிறார் ஒரு அறிஞர். இதனாலேயே மனிதன் தனது அறிவை மேலும் விருத்திசெய்து வினைத்திறனுள்ள வளஉற்பத்தியாளனாக மாறுகிறான். இவ்வாறே உற்பத்தி நுகர்வு என்பவற்றின் இயக்கம் ஒரு தொடர்சங்கிலி போன்று அமைந்திருக்கும். இதனை மனிதஅறிவின் வளர்ச்சி துரிதப்படுத்துகிறது.

### பௌதிக வளமும் சனத்தொகையும்

குடித்தொகையின் தரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது அதனை மனிதவளம் எனக் குறிப்பிடலாம். தொகையைக் கணக்கெடுக்கும் போது அதனைக் குடித்தொகை எனவும்கூறலாம். மேற்படிகுடித்தொகையை பௌதிக வளங்களுடன் ஒப்பிடும் போது உலகளாவிய ரீதியில் அல்லது நாடு, பிரதேசம் என்ற ரீதியில் மூன்று குடித்தொகை நிலமைகள் உருவாகின்றன. அவை வருமாறு,

- மிதமான குடித்தொகை
- குறைவான குடித்தொகை
- மிகையான குடித்தொகை


குடித்தொகையின் அளவு, பரம்பல், அமைப்பு, கல்விநிலை, தொழில்நுட்பம் என்ற அம்சங்கள் ஒரு நாட்டின் குடித்தொகை எனும் போது கவனம் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாக காணப்படுகின்றன. ஒரு நாட்டின் குடித்தொகை எவ்வாறு அந்த நாட்டிலுள்ள பௌதிக வளத்தைப் பயன்படுத்துகிறது என்பதைப் பொறுத்தே அந்த நாடு மிதமான, குறைந்த, மிகையான குடித்தொகை நிலையைக் காட்டும் தன்மைகளை தீர்மானிக்க முடிகிறது. மிதமான குடித்தொகையெனில் நாட்டிலுள்ள மொத்தக் குடித்தொகை நல்ல வாழ்க்கைத் தரத்தைப் பெற்று வாழக் கூடிய அளவுக்கு அந்த நாட்டின் வளங்களைப் பயன்படுத்தி வரும் நிலையினைக் குறிப்பதாகும். மிதமான தன்மை புதிய வளங்களை கண்டுபிடிக்கும் போது அல்லது தொழில்நுட்பத்தின் தரம் அதிகரிக்கும் போது மாற்றத்துக்கு உட்படும். வளமும் தொழில்நுட்பமும் நிலையாக இருக்கும் போது குடித்தொகை அதிகரிப்பால் மக்கள் வாழ்க்கைத் தரம் குறையும். இது

> "மனிதன் வளங்களின் உற்பத்தியாளனாகவும், நுகர்வோனாகவும் விளங்குகிறான். இயற்கை வளமாக மாறவேண்டுமாயின் மனிதனின் உழைப்பு இன்றியமையாதது. அந்த உழைப்பு உளஞ் சார்ந்ததாகவோ, உடல் சார்ந்ததாகவோ அமையலாம். உழைப்பினால் பெறும் அனுபவங்கள் உற்பத்தியை வினைத்திறன் மிக்கதாக மாற்றுகின்றன. இவ்வாறே மனித நாகரிகங்கள் வளர்ந்துள்ளன. நாகரிக வளர்ச்சியில் மனித உடல் உழைப்புக் குறைய உள உழைப்பே அதிகரித்து வந்துள்ளதை காண்கின்றோம்.

மிகையான குடித்தொகை நிலையைத் தோற்றுவிக்கும். வளங்கள் புதிதாக கண்டுபிடிக்கப்படும் போதும், தொழில்நுட்பம் வளர்ந்துவரும் போதும் அதற்கேற்ப குடித்தொகை அதிகரிப்பின்றி இருப்பின் அது குறைவான குடித்தொகை நிலையைத் தோற்றுவிக்கும். அதாவது அந்நாடு இருப்பதைவிடவும் கூடிய குடித்தொகையைத் தாங்கக் கூடியதான நிலமையில் இருக்கும்.

ஆக, மனிதனுடைய தேவைகள் அளப்பரியன. அவற்றை நிறைவு செய்வதற்கு மனிதன் பல்வேறுபட்ட வளங்களை பயன்படுத்த வேண்டியுள்ளது. தனி மனித தேவைகள் போன்றே ஒரு நாட்டினதும், பிரதேசத்தினதும், சமூகத்தினதும் தேவைகள் வரையறை அற்றவை. ஆனால் வளங்கள் வரையறைக்கு உட்படுபவை. இதுவிதமாக பொருளியலாளர்கள் வளங்களை அருமை, தெரிவு, பரிமாற்றம் எனும் அம்சங்களைக் கொண்டுள்ளன என்று குறிப்பிடுவது அபிவிருத்தி சார்ந்து நோக்குதற்குரியதாகிறது.

# எலும்புகளுக்கு வலுச் சேர்க்கும் பிரண்டை



பிரண்டை மருத்துவ உணவாகப் பயன்படுகிறது. பிரண்டையை துவையல், குழம்பு என்று பலவிதத்தில் பயன்படுத்தலாம். கலோரி குறைந்த எளிதில் ஜீரணிக்கக் கூடிய பிரண்டையில் நார்ச்சத்து, கல்சியம், மக்னீசியம் நிறைந்துள்ளது.

உடைந்த எலும்புகளுக்கு பிரண்டையைக் கொண்டு தயாரித்த எண்ணெய், சாறு பயன்படுகிறது. வாரம் 2 முறை பிரண்டையை பயன்படுத்தினால் 40 வயதுக்கு மேல் வரும் ஆஸ்டியோபொரோசிஸ் எனப்படுகிற எலும்புகள் மென்மையாகிற நோயை முழுவதும் குணப்படுத்தி விடலாம் என்கிறது சித்த மருத்துவம்.

எடையை குறைப்பதில் பிரண்டை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பசியைக் கட்டுப்படுத்தி வளர்சிதை மாற்றத்தைப் பராமரித்து அதிக கொழுப்பைக் கரைக்கிறது. இதனால் பருமன் மற்றும் ஊளைச்சதை குறைகிறது.

நீரிழிவுக்கும் மருந்தாகிறது பிரண்டை. இன்சுலின் சுரப்பைத் தூண்டுவதால் சர்க்கரை அளவு கட்டுப்பாட்டுக்குள் வருகிறது. இதய நோய் உள்ளவர்களுக்கு பிரண்டை நல்ல கொழுப்பை அதிகரித்துக் கெட்ட கொழுப்பை குறைப்பதால் மாரடைப்பு அபாயம் தவிர்க்கப்படுகிறது.

அஜீரணத்தை குணப்படுத்தி பைல்ஸ் எனும் குடல் நோயையும் குணப்படுத்துகிறது. பெண்களுக்குரிய மாதவிடாய் பிரச்சினை - குறிப்பாக அதிக குருதி போவதையும் குணப்படுத்துகிறது. பிரண்டை ஜூஸ் மூக்கில் குருதி வடிவதைக் கட்டுப்படுத்துகிறது. சித்த மருத்துவத்திலும் நாடி வைத்தியத்திலும் பிரண்டை மிக முக்கியமான மருந்தாகப் பயன்படுகிறது. உடலில் உள்ள தேவையற்ற தண்ணீரை வெளியேற்றக்கூடியது.

புற்றுநோய்க்குக் கொடுக்கப்படுகிற மருந்துகளிலும் பிரண்டையின் பங்கு இருக்கிறது. குடல் புழுக்களைக் கொல்கிறது. பசியைத் தூண்டுகிறது. நரம்புத்தளர்ச்சியைப் போக்குகிறது. குழந்தையின்மையை குணப்படுத்தவும் சித்த மருத்துவத்தில் பிரண்டை பயன்படுத்தப் படுகிறது.

பிரண்டைத் துவையல் செய்து அடிக்கடி சாப்பிட்டு வந்தால் குருதி ஓட்டம் சீராகும், இதயம் பலப்படும், எலும்பு பலப்படும். மேலும் ஈறுகளில் குருதிக் கசிவை நிறுத்தவும், வாயு பிடிப்பை போக்கவும் பிரண்டை உதவுகிறது. ஒவ்வாமைக்கும் இது சிறந்த மருந்தாகவும் பயன்படுகிறது.

## முகத்தை...

முயன்றபோது வீட்டிலிருந்தவர்கள் சுதாரித்துக் குரல் எழுப்பியதை அடுத்து அவர்கள் தப்பியோடினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் நடந்துள்ளது.

4 மோட்டார் சைக்கிள்களில் முகங்களை மறைத்தவாறு வந்தவர்களே தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-288)

## மாவட்ட...


அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரை தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் செயலர்களிடம் நேற்று விசாரணைகள் நடந்துள்ளன.

ஒரு மணித்தியாலத்துக்கு அதிக நேரம் விசாரணைகள் நடைபெற்று திட்டமிட்ட குற்றங்களைத்தடுக்கும் பொலிஸ் பிரிவினர் வாக்குமூலங்கள் பதிவு செய்தனர் என்று கூறப்படுகின்றது.

விஜயகலா மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச நிகழ்வொன்றில் விடுதலைப் புலிகளின் உருவாக்கம் தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தார். அது தென்னிலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அதையடுத்து அவர் இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து விலகினார்.

அவரது கருத்துத் தொடர்பில் தென்னிலங்கையில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமையப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. (ற-105)

## தயிர்ச் சோறு



**தேவையான பொருள்கள்**

பச்சையரிசி - ஒரு கோப்பை
பால் - அரைக் கோப்பை
தயிர் - அரைக் கோப்பை
உப்பு - தேவையான அளவு
மல்லித்தழை, கறிவேப்பிலை - சிறிதளவு
துருவிய கரட் - சிறிதளவு
மாதுளை முத்துக்கள் - சிறிதளவு
கறுப்புத் திராட்சை - 10

**தாளிக்க:**

கடுகு - அரைத் தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு - ஒரு தேக்கரண்டி
நறுக்கிய இஞ்சி - சிறிதளவு
நறுக்கிய பச்சை மிளகாய் - சிறிதளவு
எண்ணெய் - 2 தேக்கரண்டி

**செய்முறை**

சோற்றை குழைவாக வடித்து ஆற வைத்துக் கொள்ளவும்.

ஆறியதும், எண்ணெயைக் காய வைத்து, தாளிக்கக் கொடுத்துள்ள பொருள்களை தாளித்து சேருங்கள்.

அத்துடன் பால் , தயிர் , உப்பு சேர்த்து நன்கு கிளறவும், அருமையான சுவையில் தயிர் சோறு தயார்



ஆண்களுக்கான சேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரத்து 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.
















மணிவிழா நாயகியை
பாராட்டி வாழ்த்துகிறோம்



இன்று (18.07.2018) புதன்கிழமை
மணிவிழா காணும் யா /அச்சுவேலி
புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
விஞ்ஞானபாட ஆசிரியை
திருமதி
இந்திராணி குமரகுருபரன்
Best Wishes
அவர்களை உளமார
பாராட்டி மகிழ்கின்றோம்.

சேவைக்காலம்.:
யா /அச்சுவேலி மத்திய கல்லூரி 01.09.1992 - 01.02.2004
யா /பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் 02.02.2004 - 23.07.2006
யா /புனித தெரேசாள் மகளிர் கல்லூரி 24.07.2006 - 17.07.2018 வரை

வாழ்த்துவோர் : அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலைச்சமூகம் யா /அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.

*சபை...*

னத்தை, வடக்கு மாகாண முதலமைச்சர் நிராகரித்துள்ளார். வடக்கு மாகாண ஆளுநரே இந்த விடயத்தில் தவறிழைத்துள்ளார் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபையில், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பாக எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பில் சிறப்பு அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்த அமர்வில் பங்கேற்கவில்லை.

வடக்கு மாகாணத்துக்கு முழுமையான அமைச்சர் சபையை முதலமைச்சர் நியமிக்கவேண்டும் என்று ஏகமனதாக அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு நேற்றுமுன்தினமே அனுப்பப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் இந்தத் தீர்மானம் தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முதலமைச்சருக்கு நியமிக்கும் அல்லது பதவி இறக்கும் உரித்தில்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியிருக்கும் போது நான் எவ்வாறு ஆலோசனை வழங்குவது?. சட்டத்துக்குப் புறம்பாக நடவடிக்கை எடுக்கச் செய்து என்னை மாட்டிவிடப் பார்க்கின்றார்களா எமது உறுப்பினர்கள்?. ஆளுநர் செய்த பிழையை ஆளுநரே சரி செய்யவேண்டும்.

டெனீஸ்வரனை நான் பதவி நீக்கம் செய்ததை அரசிதழில் பிரசுரிக்காத குறையை இப்பொழுதும் நீக்கலாம். அதாவது 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20ஆம் திகதி தொடக்கம் பயன்பாட்டுக்கு வரும் வகையில் இப்பொழுதும் கடந்த காலத்தை அளாவிய விதத்தில் அரசிதழில் பிரசுரிக்க ஆளுநர் நடவடிக்கை எடுக்கலாம். அதன் பின் குறித்த அரசிதழ் அறிவித்தலை உயர் நீதிமன்றத்துக்கு எடுத்துக்காட்டி மேன்முறையீட்டுத் தீர்மானத்தைப் புறம் வைக்கலாம் என்றுள்ளது. (ற-5)

*உணர்ச்சிபூர்வ...*

இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை சிங்கப்பூர் சுதந் திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தனர். அவர் தெரிவித்ததாவது:

சிங்கப்பூரானது பல வழிகளிலும் அபிவிருத்தி கண்டுள்ளது. அந்த நாட்டுடன் ஒப்பிடுகையில், இலங்கை பெரும் பின்னடைவிலேயே உள்ளது. 1960களில் இருந்த தலா வருமானத்தைவிட தற்போது சிங்கப்பூரின் தலா வருமானம் நூறு மடங்காக அதிகரித்துள்ளது. இலங்கையில் ஏன் அபிவிருத்திகள் இடம்பெறவில்லை என்று நாம் சிந்திக்க வேண்டும்.

சிங்கப்பூரின் வெற்றிக்கு அந்த நாடு கடைப்பிடிக்கும் ஐந்து கொள்கைகளே முதன்மைக் காரணங்களாகும். அந்த நாட்டில் எடுக்கப்படும் முடிவுகள் அரசியல் ரீதியானவை அல்ல. சிங்கப்பூரில் இனங்களுக்கிடையில் ஒற்றுமை காணப்படுகின்றது. ஊழல், மோசடியற்ற ஆட்சி நிலவுகின்றது. சட்டத்தின் ஆட்சி கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது, சமத்துவம் நிலவு கின்றது.

இலங்கையில் அவ்வாறு கொள்கைகள் எதுவும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஆரம்பத்தில் சிங்கப்பூரில் துறைமுகம் இருக்கவில்லை. கொழும்புத் துறைமுகம் அரசியல் தலைமைத்துவத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டங்களால் முடங்கியிருந்தது. அதைப் பயன்படுத்தி பன்னாட்டுக் கப்பல்களை ஈர்க்கும் நோக்கிலேயே லீகுவான் சிங்கப்பூரில் துறைமுகத்தை அமைத்தார். இலங்கையும் இது போன்ற முன்னுதாரணமான கொள்கைகளின் அடிப்படையில் செயற்பட்டாலே தேவையானபொருளாதாரஅபிவிருத்தியை மேற்கொள்ள முடியும்.

இலங்கையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும் என்ற தேவை சிங்கப்பூருக்குக் கிடையாது. எமக்கே சிங்கப்பூருடன் ஒப்பந்தம் செய்ய வேண்டிய தேவையுள்ளது. அதனூடாகவே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். நாட்டுக்கு நன்மை ஏற்படுத்தக்கூடிய சிங்கப்பூரின் கொள்கைகள், தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைத் துறையை இலங்கை பயன்படுத்தி அபிவிருத்தியை ஏற்படுத்தி நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும்.

இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள எட்கா ஒப்பந்தம் தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. உணர்ச்சிபூர்வமான சிந்தனைகளினூடாக இவற்றைப் பார்ப்பதாலேயே எதிர்ப்புகள் முன்வைக்கப்படுகின்றன. அப்படி நோக்குவதன் ஊடாக நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியாது - என்றார். (ற)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லம் கந்தையா (ஈச்சம்மா)



பிறப்பு 23.05.1923

இறப்பு 17.07.2018

யாழ்., பறாளாய் வீதி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம் கந்தையா நேற்று (17.07.2018) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா யோகம் தம்பதியரின் அன்புமகளும் ஊரெழுவைச் சேர்ந்தவர்களான காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி ஆச்சிமுத்து தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நவரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புமைத்துனியும் ரஜனி, இந்திரராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் கஜமுகன் - சுதாஜினி (நோர்வே), சுதாகரன் (சுவிடன்) - தர்சிகா (இலங்கை), விக்கினேஸ்வரன் (கட்டார்)- சுதாழினி (இலங்கை), டனேஸ்குமார் (அமெரிக்கா) - மேனகா (இலங்கை), துஷாந்தன் (இலங்கை) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கஷ்மிதா (நோர்வே), அகனிதன் (நோர்வே), நிலர்வினி (இலங்கை), தர்மிகன் (இலங்கை) ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2018) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பறாளாய் வீதி,**
**சுழிபுரம்.**

**தகவல்: குடும்பத்தினர் 021 225 0407**
**இந்திரராஜா (மகன், 077 632 5100)**
**கண்ணன் (பேரன், 076 178 5263)**



### சுப்ரமணியம் ஞானசேகரம்

அரசடி வீதி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் ஞானசேகரம் கடந்த (16.07.2018) திங்கட்கிழமை காலமானார்.

காலஞ்சென்ற சுப்ரமணியம் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - யோகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் அனுஷியா, பாமினி (ஜேர்மனி), அனுலா (ஜேர்மனி), சுஜாத்தா, கஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்னேஸ்வரன், சுதாஸ்கரன் (ஜேர்மனி), கருணாகரன் (ஜேர்மனி), முரளி (Royal Service Station, Maruthanarmadam) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகன்ஜா, ரகன்யா, துஷாந்தன், லக்ஷாயினி, கேதீஸ்வரி, அபி னாஸ், அஜிலாஸ், கபிஷன், தம்மியா ஆகியோரின் பாசமிகு பேரனும் கம்ஷாயினியின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் தச்சன்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அரசடி வீதி, மாவிட்டபுரம்.** (C 31384/15/18) **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா இராசதுரை



6ஆம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசதுரை கடந்த (16.07.2018) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா அன்னம்மா - தம்பதிகளின் அன்பு மகனும் தங்கமணியின் அன்புக் கணவரும் கந்தையா - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கனகமணி, குணரத்தினம், சுப்பிரமணியம் மற்றும் அரசரத்தினம், சீவரத்தினம், இராசாத்தியம்மா, சரசு, பூமணி, நேசம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் எட்விசம்மா, இராஜேஸ்வரி, நேசரத்தினம், கணேசு, திருநாவுக்கரசு, துரைராசா, விமலதாஸ், புஸ்பராணி மற்றும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, தம்புத்துரை, இராசம்மா, சின்னம்மா, நல்லபிள்ளை, தவமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2018) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை தாளயம்பதி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6ஆம் வட்டாரம்,**
**வேலணை மேற்கு, வேலணை.**

**தகவல்: குடும்பத்தினர்.** (C 7310/15/18)

பிறப்பு 11 02 1939



இறப்பு 17 07 2018

### திருமதி தங்கலட்சுமி வீரசிங்கம்

கல்வயலைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கலட்சுமி வீரசிங்கம் நேற்று (17.07.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் மற்றும் நளாயினி, மைதிலி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கவிதா, காலஞ்சென்ற ஜயேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் டிலக்ஷன், பகிரதன், சிந்துஜன், காஞ்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2018) புதன் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தளாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**281, கண்டி வீதி, நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி. 077 898 7910** (CS 18326/15/18)

**தகவல்: குடும்பத்தினர்.**

## சாவகச்சேரி...

11 லட்சம் ரூபா ஜாக்பொட் பரிசு நேற்றுமுன்தினம் விழுந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள் விற்பனை முகவரிடம் விற்பனை யான சீட்டுக்கே ஜாக்பொட் பரிசு விழுந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9,159)

## மூவருக்கு...

ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ததுடன், அவரின் மனைவி மீது தாக்குதல் நடத்தி கடுமையான காயம் ஏற்படுத்தினர் என்று பிரதிவாதிகள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

நீண்டகாலமாக இடம்பெற்ற வழக்கு விசாரணையின் பின்னர் பிரதீப் பிரேமச்சந்திர, சுதத் குமார, சுமித் ஸ்ரீலால் ஆகிய மூவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது சம்பவத்தில் மற்றொரு பிரதிவாதிக்கு கடுமையான உழைப்புடன் ஏழரை ஆண்டு சிறைத் தண்டனையும், 25 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

மற்றொரு பிரதிவாதிக்கு எதிரான குற்றங்களை நியாயமான சந்தேகங்களுக்கப்பால் நிரூபிக்க முடியாமையின் காரணமாக அவர் விடுவிக்கப்பட்டார். (ற)

## தெற்குக்...

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரான பத்ம உதய சாந்த குணசேகர எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பிரதியமைச்சர் இவ்வாறு கூறினார்.

2015 ஜனவரி 8ஆம் திகதிக்குப் பிறகு வடக்கு, கிழக்கில் ஆவாக் குழு போன்ற குழுக்களின் செயற்பாடுகளால் தாக்குதல்களால் உயிரிழந்தவர்களின் விவரங்கள், இவற்றுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் ஆகியன தொடர்பில் திகதிவாரியாக நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க முடியுமா? என்று பத்ம உதய சாந்த கேள்வியெழுப்பினார்.

சட்டம், ஒழுங்கு பிரதியமைச்சர் நளின் பண்டார அதற்குப் பதிலளித்தார்.

ஆவாக் குழுவுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 18 வயதுக்கும் குறைவானவர்களே அந்த அமைப்பில் அங்கம் வகித்துள்ளனர். தென்னிந்தியப் படங்களைப் பார்த்தே அவர்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளனர். மாறாக பயங்கரமான தீவிரவாத அமைப்பு கிடையாது. ஆவாக் குழுவின் தலைவர் கைது செய்யப்பட்டபோது அவர் அழுதார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களுக்கு மறுவாழ்வளிப்பது குறித்தும், நல்வழிப்படுத்துவது சம்பந்தமாகவும் ஆராய வேண்டும். வடக்கு நிலைவரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று அவர் கூறினார். (ற)

## உடன்படிக்கைக்கு...

நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தினார்.

இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

சிங்கப்பூருடன் இலங்கை கைச்சாத்திடவுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் உரிய தரப்புகளுடன் கலந்துரையாடப்படவில்லை. அவசர அவசரமாகவே ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சரத்துகள் இருக்கின்றன. இலங்கையின் கைத்தொழில்துறைக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும். தாய்நாட்டுக்காகப் பெருமளவு நிதியை முதலீடு செய்துள்ளவர்களுக்கே பாதிப்புகள் ஏற்படும்.

இந்த உடன்படிக்கையை இடைநிறுத்தி நாட்டுக்குப் பாதிப்பான விடயங்களை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன்பின்னர் இலங்கைக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் அதை மாற்றியமைத்துக் கைச்சாத்திடலாம் என்றார்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய மகிந்த அணியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்தன, அரச தலைவரின் யோசனைக்குப் புறம்பான வகையிலேயே உடன்படிக்கை அமைந்துள்ளது. இந்த விடயத்தில் அரச தலைவர் தலையிடவேண்டும் என்று தெரிவித்தார். (ற)


### காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, உடையார் லேனில் ஒன்றேகால் பரப்பு (1 1/4) காணி விற்பனைக்கு உண்டு. (சுற்றுமதில், கிணறு வசதிகள் உடையது) வடக்கு வாசல் வீடு கட்டுவதற்கு உகந்தது. - 076 469 9766

### VACANCY

* ROOM ATTENDANTS
* WAITERS MALES

E-mail: hr@thethinnai.com

**THE THINNAI**
**86, PALALY ROAD, JAFFNA.**
**076 752 8628**


### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
ரேணுகா
அவர்களின் அன்புத் தந்தையார்
**சரவணமுத்து கந்தையா**
அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைவதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம், மானிப்பாய் மகளிர் கல்லூரி.**

### மரண அறிவித்தல்கள்

## திருமதி புஸ்பவதி சிவசோதி

(காரைநகர், வெள்ளவத்தை)



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும், வாரிவளவு, வெள்ளவத்தையினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி சிவசோதி கடந்த (15.07.2018) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை மனோன்மணி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நாகேசு சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சிவசோதியின் அன்புமனைவியும் கேதீஸ்வரன் (பாபு, கனடா), இந்துமதி (வெள்ளவத்தை) ஆகியோரின் அன்புத்தாயும் ரூபராணி (கனடா), சிவபாலன் (வெள்ளவத்தை) ஆகியோரின் அன்புமாமியும் வாமதேவன், புனிதவதி, ஆகியோரின் அன்புச்சகோதரியும் அபிராமி, சந்தோஷ், அபிநயா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2018) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 18, 5/1 பெரேரா லேன், வெள்ளவத்தை, கொழும்பு 06.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**077 127 9224, 011 255 2997**

## தையல்நாயகி தியாகராஜா

(யாழ். நாச்சிமார் கோயிலடி, பிரான்ஸ்)



தோற்றம் 22.04.1941 — மறைவு 12.07.2018

யாழ். நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வதிவிடமாகவும் கொண்ட தையல்நாயகி தியாகராஜா 12.07.2018 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பசுபதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், தியாகராஜாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சொர்ணராஜா (ஒலிவியர் - பிரான்ஸ்) மற்றும் நிர்மலா (ஜேர்மனி), கிருபாகரன் (பிரான்ஸ்), வசந்தி (பிரான்ஸ்), சிவநேசன் (கனடா), ஜெயந்தினி (ஜேர்மனி), கிருஷாந்தி ( லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகரட்ணம், லஷ்சுமி, கணேசரத்தினம், மங்கையற்கரசி, அந்தோனிதாஸ் கொலின்ஸ், நகுலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வரோன் கிரிஸ்ரி, கிஸோர், கலக்சி, மனிசா, வாருணி, கீர்த்தனா, அனிஸ், சிவகோபி, சிவதாரணி, அபிநயா, ஆரணியா, நவீன், சானு, மானஸா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2018) புதன்கிழமை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை Cimetiere Intercommunal des Joncherolles, 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France எனும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் Crematorium of pere Lachaise, 71 Rue des Rondeaux, 75020 Paris, France என்னும் இடத்தில் 12.45 மணிமுதல் 14.15 மணி வரை தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பேறாமகன்**
**(கதிரமலை உதயகுமார்) - 077 224 0186**

(CS/18314)(11.37)

தியாகராஜா - பிரான்ஸ் - 0033 751 176520
கிருபாகரன் - பிரான்ஸ் - 0033 142 401492, 0033 6522 89744, 0033 61049 3366


## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமகனை / மணமகளை மிகப்பொருத்தமாக உடன்தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**(கந்தர்மடச்சந்திக்கும் பரமேஸ்வராச்சந்திக்கும் இடையில்) தொடர்பு - 077 138 7596, 071 8945 692**


## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வ/து)

### பதவி வெற்றிடம்

### காவலாளி 315/16

மேற்படி பணி நிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரியிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம்: 315/16
13160 - 15360 (சுற்று நிருப இல.13/2015 இற்கு அமைய)
105X10-115X10

காலத்திற்கு காலம் சுற்று நிருபங்களிற்கு அமைவாக வழங்கப்படும் அனைத்துப் படிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள்:**

(அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்

அல்லது

(ஆ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) வயதெல்லை 18 - 45 இருத்தல் வேண்டும். கூட்டுறவுப் பணியாளர்களிற்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

**01. விண்ணப்ப முடிவுதிகதி : 31.07.2018**

**குறிப்பு:**
விண்ணப்பங்கள் **தலைவர் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம், A9 வீதி, கிளிநொச்சி** எனும் முகவரிக்கு பதிவுதபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**பி.விஜயச்சந்திரன்**
**A9 வீதி, கிளிநொச்சி,**
**தலைவர்,**
**வடமாகாண ப.தெ.வ.அ.கூ.நிறு.பேரிணையம்.**

### மரண அறிவித்தல்



பிறப்பு 13 . 06 . 1941 — இறப்பு 13 . 07 . 2018

## திருமதி கெங்காதேவி சுப்பிரமணியம்

யாழ்.சங்கானையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Edgware ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதேவி சுப்பிரமணியம் 13.07.2018 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் சிவஞானம் (சட்டத்தரணி) - தேவி தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகலிங்கம் - ராசம்மா தம்பதிகளின் அன்புமருமகளும், Dr.நாகலிங்கம் சுப்பிரமணியத்தின் (பிரித்தானியா) அன்பு மனைவியும், தனுஜா (துளசி - பிரித்தானியா), கௌசலா (ஆனந்தி - பிரித்தானியா) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஞானதேவிசேகரம் (பிரித்தானியா), குலநாயகம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் நிர்மலதாசன் (பிரித்தானியா), சிவகுமார் (பிரித்தானியா), ரவிந்திரன் (பிரித்தானியா), மகேசன் (கனடா), ஸ்ரீராம் (கனடா), கணேசன் (அமெரிக்கா), கலாதேவி சிவானந்தன் (பிரித்தானியா), ஸ்ரீஜெயதேவி நந்தகுமார் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு சகோதரியும், பாக்கியசோதி அரவிந்தனின் அன்பு மாமியாரும், ராகவி, மயூரா, லஷ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2018) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை Hendon Cemetery & Crematorium, North Chaple Holders Hill Rd, London NW 7 1NB, UK முகவரியில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணி தொடக்கம் ஒரு மணியளவில் Hendon Cemetery & Crematorium, South Chaple Holders Hill Rd, Lodon NW7 1NB, UK இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS/18277)(11.17)

தனுஜா (துளசி - பிரித்தானியா) - +44 7507836906
கௌசலா (ஆனந்தி - பிரித்தானியா) - +44 7930336806
அரவிந்தன் (மருமகன் - பிரித்தானியா) - +44 7497960040

# ஐயனார் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜீலை 18
துறையூர் ஐயனார் சனசமூக நிலையம் மற்றும் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் ஐயனார் அணி வெற்றிபெற்றது.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வேலணை பிரதேச செயலர் அ.சோதிநாதன், மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலக கணக்காளர் இ.ரமணன் விடிவெள்ளி அமைப்பின் செயலாளர் சி.அசோக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-23)

## வென்றது யூனியன்

யாழ்ப்பாணம், ஜீலை 18
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய வலைப்பந்தாட்டத் தொடரில் யூனியன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 19:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யூனியன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



# கார்மேல்போய்ஸ் மகுடம்



யாழ்ப்பாணம், ஜீலை 18
மல்லாகம் ஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் கார்மேல் போய்ஸ் அணி கிண்ணம் வென்றது.
மல்லாகம் ஸ்டார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் காமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி விளையாட்டுக் கழக அணி 8.4 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது. திலீபன் பெற்ற 6 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் அலன், சுதர்சன் இருவரும் தலா 3 இலக்குகளையும், அஜன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி 3.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து வெற்றிபெற்றது. செல்ரன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும், மதுசன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டநாயகனாக கார்மேல் போய்ஸ் அணியின் அலன் தெரிவுசெய்யப்பட்டார். (ம-23)

## இலங்கைப் பல்கலை அணியில் தமிழ் வீரர்கள் இருவருக்கு இடம்

யாழ்ப்பாணம், ஜீலை 18
மலேசியாவில் நடைபெறும் ஆசிய பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான அணிக்கு மூன்று வீரர்கள் பங்குபற்றும் கூடைப்பந்தாட்டத் தொடரில் இலங்கைப் பல்கலைக் கழக ஆண்கள் அணியில் தமிழ் வீரர்கள் இருவர் இடம்பிடித்தனர்.
மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் பொறியியல் பிரிவில் கல்வி பயிலும் மஞ்சுதன் மற்றும் துமிலன் ஆகியோரே அவ்வாறு இலங்கை பல்கலைக் கழகங்களின் ஆண்கள் கூடைப்பந்தாட்ட அணியில் உள்வாங்கப்பட்டவர்கள் ஆவர். (ம-23)




## ஆவரங்கால் இந்து வெற்றி

யாழ்ப்பாணம், ஜீலை 18
புத்தூர் கிராம சபையின் முன்னாள் தலைவர் அரிய குட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக பி அணி வெற்றிபெற்றது.
புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக பி அணி மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக பி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## நவஜீவன்ஸ் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஜீலை 18
புத்தூர் கிராம சபையின் முன்னாள் தலைவர் அரிய குட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (ம-23)

## ஆவரங்கால் மத்தி போராடி வென்றது

யாழ்ப்பாணம், ஜீலை 18
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதியது. 25:27, 25:16, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 2:1 என்ற செற் கணக்கில் ஆவரங்கால் மத்தி போராடி வென்றது. (ம-23)

# சந்திமலுக்கு தடை விதிப்பு

## தென்னாபிரிக்க டெஸ்டில் இல்லை ஹத்துருசிங்கவுக்கும் அதே நிலை



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றத்துக்காக இரண்டு ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டார் இலங்கை அணியின் தலைவர் சந்திமல். அணியின் மேலாளர் குருசிங்க, பயிற்சியாளர் ஹத்துருசிங்க ஆகியோருக்கும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு அண்மையில் இலங்கை அணி சுற்றுப் பயணம் மேற்கொண்டது. இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளின்போது இலங்கை அணியின் தலைவர் சந்திமல் பந்தைச் சேதப்படுத்தியமை தெரியவந்தது. மறுநாள் இதை அவரிடம் தெரிவித்தபோது தனது குற்றச்சாட்டை மறுத்ததுடன் தொடர்ந்து களத்தடுப்பில் ஈடுபடவும் மறுத்தார். இவை அனைத்தும் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் விதிகளின் அடிப்படையில் பெரிய குற்றங்கள். இதையடுத்து சந்திமலுக்கு ஓர் ஆட்டத்தில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. அத்துடன் அவரின் குற்றங்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை நடத்தப்பட்டு வந்தது. இந்தப் பின்னணியில் தற்போது இரண்டு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடச் சந்திமலுக்குத் தடை விதிக்கப்பட்டது. அத்துடன் இலங்கை அணி விளையாடும்போது ஓய்வறையில் அமருவதற்கு இரண்டு ஆட்டங்களுக்கு அணியின் மேலாளர் குருசிங்க, பயிற்சியாளர் ஹத்துருசிங்க ஆகியோருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(ம)

## கலையொளி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

புத்தூர் கிராம சபையின் முன்னாள் தலைவர் அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கலையொளி அணி வெற்றிபெற்றது.

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலையொலி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் தமிழ் மதி அணி மோதியது. 2:0 என்ற செற் கணக்கில் கலையொளி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இந்திய அணி இன்று அறிவிப்பு

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்படவுள்ளது. டினேஸ் கார்த்திக்குக்கு இடம் கிடைக்குமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகிறது. 'இந்தத் தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்படவுள்ளது. இந்திய அணியின் இலக்குக் காப்பாளர் சகா காயமடைந்ததை அடுத்து பதில் வீரராக டினேஸ் கார்திக் சேர்க்கப்பட வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது. எனினும் பன்ட், பார்திவ் பட்டேல் இருவரும் பரிசீலிக்கப்படவும் வாய்ப்புள்ளது. முதல் மூன்று ஆட்டங்களுக்கான டெஸ்ட் ஆட்டங்களுக்கான இந்திய அணியே அவ்வாறு அறிவிக்கப்படும் என்று கருதப்படுகிறது. (ம)



## வளர்மதி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 18

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது.

திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 29:25, 24:16, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது வளர்மதி அணி. (ம-23)

## சிறிய நாடுதான் ஆனால் அதனது கனவு பெரியது

### பயிற்சியாளர் டலிக் உருக்கம்


"சிறிய நாடுதான் என்றாலும் அவை பெரிய கனவைக் காணலாம்" என்று தெரிவித்தார் உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறி வியக்க வைத்த குரோசியா அணியின் பயிச்சியாளர் டலிக் ரஷ்யாவில் இருந்து குரோசியா திருப்பியுள்ள அணிக்கு நேற்று உற்சாகமான வரவேற்பு வழங்கப்பட்டது. இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் டலிக்.

"நாங்கள் பயணம் செய்யும் பேருந்தில் இடம்பெற்ற வாசகம், 'பெரிய கனவை கொண்டுள்ள சிறிய நாடு குரோசியா' என்பதுதான். இது எல்லோருக்கும் சிறந்த செய்திதான். நீங்கள் கடினமாக உழைத்தால், உங்களால் சிறந்த வீரர்களை உருவாக்க முடியும், அதன் மூலம் சிறந்த முடிவுகளைப் பெற முடியும். இது சாத்தியமாகும் என்று நீங்கள் நம்ப வேண்டும். சிலநேரங்களில் இந்த எண்ணங்கள் கீழே சரியலாம். ஆனால் கனவு மற்றும் லட்சியங்களைக் கொண்டு அதனைப் பின்தொடர வேண்டும். அதன் பின்னர் ஒருவேளை கால்பந்திலோ அல்லது பொது வாழ்விலோ கனவுகள் மெய்ப்படும்.

ஒருபோதும் நீங்கள் விட்டுக்கொடுக்கக் கூடாது. அதேபோன்று ஒருபோதும் நம்பிக்கை கொள்வதையும் நிறுத்திவிடக் கூடாது. இறுதிப் போட்டியில் 4:1 என நாங்கள் பின்தங்கியிருந்த போதும், நான் நம்பிக்கை கொள்வதை நிறுத்தவில்லை. இது தான் வாழ்க்கை. ஒட்டுமொத்தமாக குரோசியா, பெரிய தொடரில் சிறப்பாக விளையாடியதாகவே கருதுகிறேன். அணியில் உள்ள அனைத்து வீரர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எனது அணி வீரர்களையும், நாட்டையும் நினைத்துப் பெருமை அடைகிறேன்" என்றார். (ம)



## முழு வருமானத்தையும் நன்கொடையாக வழங்கிய மப்பே



பிரான்ஸ் அணியின் இளம் வீரரான கிலியான் மப்பே உலகக்கிண்ணத் தொடரில் தனக்குக் கிடைத்த முழு வருமானத்தையும் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுக்காகவும் விளையாட்டுத் தொண்டு நிறுவனங்களுக்கானவும் வழங்கியுள்ளார்.

ரஷ்யாவில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் பிரான்ஸ் அணி கிண்ணம் வெல்ல மப்பேயும் முக்கிய காரணம். இதையடுத்து உலகக்கிண்ணத் தொடரில் விளையாடியமைக்கான ஊதியம் கிண்ணம் வென்றமைக்காகக் கொடுக்கப்பட்ட மேலதிக பணம் என்று ஒட்டுமொத்தமாக இலங்கை மதிப்பில் 8 கோடியே 80 லட்சத்தை நன்கொடையாக்கியுள்ளார் மப்பே.

(ம-114)

# எல்லை மீறிய கொண்டாட்டத்தால் பிரான்ஸில் ரசிகர்கள் இருவர் சாவு



பிரான்ஸில்எல்லைமீறியகொண்டாட்டம் கலவரமாக மாறியதை அடுத்து ரசிகர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
ஆல்பின் நகரில் ரசிகர் ஒருவர் உற்சாகத்தில், கால்வாயில் குதித்த போது அவரது கழுத்து முறிந்து உயிரிழந்தார். செயின்ட்பெலிக்ஸ் நகரில், ரசிகர்கள் சிலர் ஆடிப்பாடிக் கொண்ட காரில் சென்றனர். அந்த காரை ஓட்டிச்சென்ற 30 வயது ரசிகர் உற்சாக மிகுதியில் தாறுமாறாக காரைச் செலுத்தினார். அப்போது கார் மரத்தில் மோதி அவர் உயிரிழந்தார்.
பிரான்ஸின் ஏனைய சில இடங்களிலும் ரசிகர்கள் எல்லை மீறிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையும், அவர்களை பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசிக் கலைத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம)




ரஷ்யாவில் நடைபெற்ற கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் கிண்ணம் வென்ற பிரான்ஸ் அணிக்கு நேற்றுக் கோலாகலமான வரவேற்பு வழங்கப்பட்டது., திறந்த வாகனத்தில் வீரர்கள் நாடெங்கிலும் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (ம)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY** கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANCAISE** மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**தவறிவிட்டது**

கோண்டாவிலுக்கும், யாழ். இந்துக்கல்லூரிக்கும் இடையில் வாகன அனுமதிப்பத்திரம் , சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. மேற்படி விவரம் பற்றி அறிந்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். **தொடர்பு - 077 511 6320**

**தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல்யமான **திருமண மண்டபம்** ஒன்றிற்கு **வேலையாள்கள் தேவை.**

077 932 6147



உலகக்கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறிய குரோசிய அணிக்கு நேற்று மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. ரஷ்யாவில் நடைபெற்ற இந்த உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் பிரான்ஸும் குரோசியாவும் மோதின. 4:2 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வெற்றிபெற்றது. (ம)




மிருசுவில் படித்த மகளிர் திட்டம் "துர்க்காபுரம்"

## அருள் மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் - 2018

**ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே!**

அடியார்களை காலந்தோறும் பாதுகாத்து நல்லருள் பாலித்து மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் "துர்க்காபுரம்" என்னும் ஸ்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனுக்கு விளம்பி வருடம் பத்து நாள்கள் அலங்கார உற்சவம் நடைபெற எல்லாம் வல்ல அம்பிகை திருவருள் ஈர்ந்துள்ளார்.

விளம்பி வருடம் ஆடி மாதம் 03 ஆம் நாள் (19.07.2018) வியாழக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 12 ஆம் நாள் (28.07.2018) சனிக்கிழமை இறுதிநாள் தீர்த்த உற்சவத்துடன் பத்து நாள்கள் நடைபெற உள்ளது. ஆடி மாதம் 11 ஆம் நாள் (27.07.2018) வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், விசேட அபிஷேகங்கள், பூஜைகளும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள் களின்மீது ஏறி நின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

தினந்தோறும் காலை 9.00 மணி தொடக்கம் ஸ்தாப அபிஷேகம், பூஜை, திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலாவும், மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

அடியார்கள் இவ்விழாக்காலங்களில் வருகை தந்து எல்லாம் வல்ல ஸ்ரீ ஞான துர்க்கை அம்மனின் பாதாரவிந்தத்தினை தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின் றோம்.

"துர்க்காபுரம்"
படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

ஆலய தர்மகர்த்தா
சிவத் திரு. சின்னத்தம்பி
நவரத்தினம் ஐயா

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலட்சுமி நடராசா



சாரையடி வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி நடராசா நேற்று (17.07.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற கோவிந்தப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் நடராசாவின் அன்பு மனைவியும் கலைவாணி (சுவிஸ்), குகதாசன் (லண்டன்) சோதிரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் பருத்தித்துறை) ஜெயானந்தன் (லண்டன்), பவானி (ஆஸ்திரேலியா), பவானந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயும் ஸ்ரீதரன் (சுவிஸ்), வதனி (லண்டன்), வினோதினி (பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர்), தர்மிளா (லண்டன்), புஸ்பராசா (ஆஸ்திரேலியா), ஜானகி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புமாமியும் அபிஷேகா, பிரசன்னா, ஆராதனா, அபிநயா, அருரன், பிரார்த்தனா, பிரவீன், பிரசோபன், சாயிசரண், சாகித்யன், அஸ்வின், கீர்த்தன், ஹரிணி, ஹாசினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பாலசுப்பிரமணியம், பரமேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் லட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் சரஸ்வதி, கணேசலிங்கம் (ஆஸ்திரேலியா), அமிர்தலிங்கம் (ஆஸ்திரேலியா), பஞ்சலிங்கம் (ஆஸ்திரேலியா), வீரகத்திப்பிள்ளை (நாவலர் புத்தகசாலை), சகுந்தலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2018) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்: குடும்பத்தினர்**

**021 226 2338**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.